பொதுசன நூலகம்
ஆவணத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

மார்ச் 31 - ஏப்ரல் 06, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 905



## லிபியாவை நொருக்கும் சர்வதேச அவசரம்




## மீனவர்கள் மாயமாகும் புதிய கலாச்சாரம்

## கிரிக்கெட் உலகக் கோப்பையின் இறுதிப் பரபரப்புக்கள்

## வில்வம் இலைகள்

சிவன் கோவில்களில் மற்றைய புஸ்பங்களைவிட வில்வம் இலைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதாயினும், சிவபூசை நேரங்களில் எல்லாக்காலத்திற்கும் இந்த வில்வம் இலைகள் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றன.

வீடுகளில் வளர்க்கும் சாதாரண பூமரங்கள் போல், வில்வமரத்தை நாம் வளர்க்கமுடியாது. வில்வம் வளர்ப்பதற்கு அதற்கென ஓரிடம் தெரிந்தெடுக்கப்பட்டு, துப்புரவாகவும், மனத்தூய்மையோடும் பராமரித்தல் வேண்டும். இல்லையேல் பட்டுப்போய்விடும் எனக் கூறுவார்கள்.

வில்வம் இலை சிவனுக்குரிய பூஜை மலராக இருந்தாலும், வில்வமரத்தில் திருமால் வசிப்பதால், அத்திருமாலைத் தேடி வந்து மகாலஷ்மி குடியிருப்பதால் ஆசாசர முறை இம்மரத்திற்கு அவசியமான-தாகிறதென ஐதீகம் கூறுகிறது.

சிவபெருமானின் முக்கண் தோற்றப்பாட்டோடு, அவரது கரத்திலுள்ள திரிசூலத்தின் வடிவமாகவும் வில்வம் இலை காணப்படுவதால், சிவபூஜைகளிலும், அதன் அர்ச்சனைகளிலும் மற்றைய புஸ்பங்களைவிட, வில்வம் இலைகளே கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

வீட்டில் குறிப்பிட்ட இடத்தில் தூய்மையாக வில்வமரம் வளர்ப்பதால் அசுவமேதயாகம் செய்த பலன் கிட்டுவதாகவும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கியபலன் கிடைப்பதாகவும் புராணங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

-அனந்தநாராயணன், கைதடி.

## கண்காணிப்பு

கொடுமிகு செயல்கள் புரிபவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்தும் சமுதாயத்தின் பார்வையில் இருந்தும் மறைந்தோ அல்லது தப்பித்தோ வாழக் கூடும்.

ஆனால், "நீதி மிகு இறைவன் பொல்லாருடைய வீட்டைக் கவனித்துக் கொண்டிருக்கிறான். (நீதிமொழிகள் – 21:12" என்பதை அவர்கள் ஏனோ மறந்து விடுகிறார்கள்.

நீதியுள்ள இறைவனின் கண்களில் இருந்து நோக்கப்படும் எந்தவொரு காரியங்களுக்கும் அதற்கேற்ற பலன்கள் நிச்சயம் உண்டு என்பதை உணரப்படாத வீடுகள் உன்னிப்பாக இறைவனால் கண்காணிக்கப்படுகின்றன.

வேளை வரும்பொழுது பொல்லாருடைய வீட்டின் பலன்கள் பூரணப்படுகின்றன அக்கிரமமாக!

புவியில் நன்மைகள் செய்யத் தவறிய குற்றத்திற்கான தண்டனையாக அமையும் இறைவனின் நீதி மாசற்றது; மாறுபாடல்லாதது என்பதே யதார்த்தமாகிறது.

சாமுவேல்-புதுக்குடியிருப்பு.

ஆன்மீகம்

## வரம்புமீறிப் பேசவேண்டாம்

ஒரு பெண் நபி(ஸல் அவர்களிடம் வந்து யாராவது அல்லாஹ்! நான் எனது அடிமைப் பெண்ணை விபச்சாரியே! என்று ஏசிவிட்டேன் இது குற்றமா? எனக் கேட்டாள். அவள் விபச்சாரம் செய்வதைக் கண்டாயா? என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'இல்லை!' என்று பதில் கூறினார். அப்படியானால் அவளை அவதூறு கூறிய குற்றத்திற்காக மறுமையில் கசையடியைப் பெற்றுக்கொள்வாய்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே அப்பெண் வீட்டுக்குச் சென்று கசையொன்றை எடுத்து அடிமைப் பெண்ணிடம் கொடுத்து 'என்னை அடித்துவிடு' என்றாள். அடிமைப்பெண் அடிக்க மறுத்துவிட்டாள். அதன் பின் அல்லாஹ்வுக்காக உனனை விடுதலை செய்கிறேன் எனக் கூறி அப்பெண்ணுக்கு விடுதலையளித்துவிட்டு, நபி (ஸல்) அவர்களிடம் மீண்டும் வந்து நடந்தவைகளைக் கூறினார். அவளைப் பற்றி நீ கூறிய அவதூறு வார்த்தைக்காக அவளை அடிமைத்தளையிலிருந்து விடுதலை செய்தது குற்றப் பரிகாகரமாகிவிட்டது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்துல் அஸீஸ் ஹனாதி, கல்முனை-05

# வாசகர் சாலை

## உள்ளத்திற்கு உந்துதல்

தினமுரசு வார இதழில் வெளியாகும் புகைப்படத்திற்கான கவிதைப் போட்டியினை ஒழுங்காகக் கண்ணுறுவதன் மூலம் அதில் பங்கு கொள்ளும் வாசகர்கள் என் மனக்கண்ணில் உள்ளனர். தரமான பொருத்தமான கவிதை வரிகளைப் பதிக்கும் ராணிமகள் யசிந்தா, சங்கத்தார்வயர்-சு.ஜெயரூபன், R.S. ஆனந்தன் பருத்தித்துறை ஆகியோர் வாழ்த்தப்படவேண்டியவர்கள் இதனைத் தினமுரசு பத்திரிகை மேற்கொள்ள வேண்டும் என்பது எனது பணிவான விருப்பம்.

மாருதி, பருத்தித்துறை

## உன்பணி தொடரட்டும்!

என் மனதைக் கொள்ளைகொள்ளும் முரசே! நித்தம் ஒவ்வொரு வியாழனும் என் கைகளில் தவழுவாய். ஏனெனில் உன்னை நான் வாரந்தோறும் படித்து வருகின்றேன். பல மாறுதல்களை உன்னில்காணக் கூடியதாகவுள்ளது. இதுவே தொடர வேண்மென வாழ்த்துகின்றேன்.

எஸ்.நிர்மலா, வவுனியா.

## வாழ்த்துத் துகில்

உன்னில் வரும் ஆக்கங்கள் அத்தனையும், அருமையோ அருமை. அதிலும் தேன்கிண்ணம் நெஞ்சில் தேனை வார்க்கிறது. உன் சிறுகதை, கவிதை, கட்டுரை, மற்றும் வண்ண ஆக்கங்கள் அத்தனையும் என்னை உவகைக் கடலில் மூழ்கச் செய்கிறது. உன் புகழ் ஓங்கவும் பணி தொடரவும் என் வாழ்த்துக்கள்.

நஸார் இஜாஸ், கிண்ணியா-05


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com


## கவிதைப் போட்டி இல.905



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி.14.04.2011

கவிதைப் போட்டி இல. 905
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### தாய்

தலைசீவிவிடும் தாய்
தனியேவிட்டுப்
போய்விட்டாள்
செல்லமாக வளர்த்தது
தலைநீவி விடுகிறதோ...

காங்கேயன்,
திருகோணமலை.

### அன்பு

அநாதைகள் மீது
அன்பு காட்டும்
ஐந்தறிவு மிருகமே
உன் அன்பு
இவ்வுலகில் யாருக்கு
வரும்.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### நன்றி

வளர்ந்த மனிதர்கள்
நன்றி மறந்தவர்களாய்த்
திரிகின்றார்கள்
வளரும் சிறுவர்களாவது
நன்றியுள்ளவர்களாய்
இருக்கின்றார்களா? என
முகர்ந்து

R.S.ஆனந்தன்,
தும்பளை.

### உத்தமன்

விபத்திலிருந்து
எமைக் காக்க
நடுவில் பாய்வது
கேவலம் நாய்
என்றெண்ணாதீர்-அது
ஒரு பிடி சோற்றுக்கு
உயிரையும்
கொடுக்கவல்லவோர்
உத்தம ஜீவன்.

அ.சந்தியாகோ,
கண்டி.

### மனம் எண்ணவில்லை

நீ உருட்டி விளையாட
நான் என்றும்
கிழிந்துபோன
ரயர் அல்ல.
உன்னிடம் நன்றி
உண்டென்பதால்தான்
தலை குனிந்தேன்.
நீ என் தலையிலேயே
கால் வைப்பாய்
என எண்ணவில்லை.

S.சுதர்சன்,
மருதடி.

## கவிதைப் போட்டி இல.903

### பாராட்டுக்குரியது



### பேதமில்லா அன்பு

உடன் பிறப்பு
இல்லாவிட்டாலும்
ஓர் இனம் இல்லா
விட்டாலும்
அன்புக்காய் நயந்து
நன்றிக்காய் நயந்து
நாயுடன் காண்பது
யாரை...?மனித
ஜாதியை...

ஜிந்து,
கிண்ணியா-05




# உங்கள் பக்கம்

## சந்தைவீதி திருத்தப்பட வேண்டும்

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள முக்கியமான வியாபார மையங்களில் கொடிகாமம் ஒன்றாகும்.

கொடிகாமச் சந்திக்கு அண்மையாக அமைந்திருக்கின்ற சந்தையின் பின்பக்கத்தினை அண்டியதாக அமைந்திருக்கின்ற சந்தை ஒழுங்கையினைத் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது போக்குவரத்திற்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மிக நீண்டகாலமாக செப்பனிடப்படாது மணற்தரையாகக் காணப்படுகின்ற தாழ்வான இந்தப் பாதை, மழை காலங்களில் மிகவும் மோசமான நிலையில் சீரழிந்து காணப்படுகின்றது. சந்தைக் கழிவுப் பொருட்களும் இவ்ஒழுங்கையினாலேயே மழைநீருடன் சேர்ந்து செல்கின்றமையால் துர்நாற்றம் வீசுகின்றது. அத்துடன் சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றது. இதனால் மழை காலங்களில் இந்த ஒழுங்கையினூடாக மக்கள், மாணவர்கள் ஆகியோர் செல்லமுடியாமல் உள்ளது. இதன்காரணமாக இப்பகுதி மக்கள் மாற்றுப் பாதையையே பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இது பற்றி ஏற்கெனவே பலதடவைகள் சம்பந்தப்பட்ட பலதரப்பினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் இப்பாதையைத் திருத்தித் தருவதாக வாக்குறுதி அளிக்கின்ற அரசியல்வாதிகளும் இதுவரையில் செப்பனிடுவது பற்றி ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கவில்லை.

எனவே தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக இப்பிரச்சினையை முன்வைத்தாயினும் குறித்த வீதியைப் பயன்படுத்துகின்ற ஆயிரக்கணக்கான மக்களின் அவலங்களுக்கு முடிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இதனை உரியவர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.


-மதனன், கொடிகாமம்.

# தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம்

## நிறைவான சம்பளத்தை பெறமுடியும் என்கிறார் அமைச்சர் முத்து சிவலிங்கம்

## ரூபா 750 நாட்சம்பளம் சாத்தியம் என்கிறார் மனோகணேசன்

**மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைத் தீர்மானிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருவதால் புதிய ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்கள் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் இடம்பெற்றுவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.**



இலங்கை தொழிலாளர் காங்கிரசில், இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம், தொழிற்சங்க கூட்டு கமிட்டி ஆகியவற்றிற்கும், முதலாளிமார் சங்கத்திற்கும் இடையே இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கைச்சாத்திடப்படுகின்ற கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூபா 290 அடிப்படைச் சம்பளம் உட்பட 405 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

குறித்த ஒப்பந்தம் நிறைவடைகின்ற நிலையில் முரசுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் முத்துலிங்கம், அண்மைக்காலமாக தேயிலை விளைச்சலும், சர்வதேசச் சந்தையில் தேயிலைக்கான விலையும் திருப்திகரமாக அமைந்துள்ளதால், முதலாளிமார் சம்மேளத்துடன் பேரப் பேச்சுக்களை நடாத்தி, போதுமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென நம்புவதாகவும், இன்றும் ஒரு சில தினங்களில் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுகின்ற தொழிற்சங்கங்கள் கூடி ஆராய்ந்து, தற்போதைய வாழ்க்கைச் செலவு உட்பட அனைத்துக் காரணிகளின் அடிப்படையில் எவ்வாறான கோரிக்கைகளை முதலாளி மார் சங்கத்திடம் சமர்ப்பிப்பது என்கின்ற இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நிபந்தனையற்ற அடிப்படைச் சம்பளமாக ஐநூறு ரூபாயுடன் மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 250ஐயும், மொத்த நாட் சம்பளமாக 750 ரூபாய் வழங்க முதலாளிமார் சம்மேளனம் சம்மதிக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.



அத்தோடு, பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னரே தோட்ட முதலாளிமார், சில தேசிய ஊடகங்களின் ஊடாக நஷ்டக் கணக்கு காண்பிக்க ஆரம்பித்துள்ளதாகவும் மனோகணேசன் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தர் நாடு திரும்பிய பின்னரே பதவியேற்பு கூட்டமைப்பிற்குள் இன்னொரு சர்ச்சை

நடந்து முடிந்த உள்ளூ ராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு 12 சபைகளில் வெற்றி பெற்ற 74 உறுப்பினர்கள் மற்றும் அவற்றின் உப தலைவர்களுக்கான பதவிப்பிரமாண நிகழ்வு மார்ச் 31 ஆம் திகதி மறைந்த தலைவர் செல்வநாயகத்தின் பிறந்த தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் திரு கோணமலையில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்வரும் 4 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதால் குறித்த பதவிப்பிரமாண நிகழ்வை அக்கட்சியின் தலைமைப்பீடம் தள்ளிப்போட்டுள்ளது.

இது கூட்டமைப்பில் சம்பந்தரின் தலைமை மீது அதிருப்தி கொண்டுள்ள உறுப்பினர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக உள்ளிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சிச் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் இது பற்றி முரசுக்குத் தெரிவிக்கும் போது, நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பற்றி எவ்விதமான அக்கறையோ, பற்றுதலோ இன்றி இந்தியாவில் தங்கியிருந்த ஒருவருக்காகத் தமது பதவிப்பிரமாணங்கள் தள்ளிப்போடப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், இது கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலரின் தனிப்பட்ட தீர்மானமே அன்றி கட்சியின் ஒருமித்த கருத்து அல்ல என்று தெரிவித்ததோடு மறைந்த தலைவர் தந்தை செல்வநாயகத்தின் பிறந்ததினத்தைச் சிறப்பிப்பது என்று கூறப்பட்டது எல்லாம் என்னாச்சு? என்று கேள்வியும் எழுப்பினார்.

அதேபோன்று ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு இரா. சம்பந்தன் எம்.பி வருவார் என்ற செய்தியும் ஒருசில-ரின் தனிப்பட்ட முடிவா-கவே ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஏற்கெனவே பல்வேறு காரணங்களுக்காக முரண்பட்டுக்கொண்டிருக்கும் கூட்டமைப்பினுள் உருவாகியுள்ள இச்சர்ச்சையானது மேலும் விரிசல்களை அதிகரிக்கச் செய்யுமென புத்திஜீவிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## விகாரமாதேவி பூங்காவில் கித்துள் உற்பத்திகள் கண்காட்சி

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கித்துள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி ஏப்ரல் 1,2,3 ஆகிய திகதிகளில் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கடந்த திங்கட்கிழமை தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றுள்ளது.

இங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டில் 3 மில்லியன் கித்துள் மரங்கள் காணப்படுகின்ற போதிலும் 90000 மரங்கள் மட்டுமே உற்பத்திக்குப் பயன்படுத்தப் படுவதாகவும், எனவே வேலையின்றி இருப்பவர் களை இத்தொழில் முயற்சி ஆர்வமூட்டும் வகையில் புதிய இயந்திர சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்குக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஐ.நா.வின் அடுத்த பொதுச் செயலர் ராதிகா குமாரசாமி?



ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்பதாவது பொதுச் செயலாளராக ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவின் தலை-வரான ராதிகா குமாரசாமி நியமிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா.வின் தற்போதைய பொதுச் செயலர் பான் கீ மூனின் பதவிக்காலம் ஜுன் மாத இறுதியில் நிறைவடைய இருக்கின்றமையால் அப்பதவிக்கு ராதிகா குமாரசாமி உட்பட மூன்று பெண்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏனைய இரு பெண்களும் இப்பரிந்துரையை நிராகரித்துள்ளதால் இலங்கையைச் சேர்ந்த ராதிகா குமாரசாமிக்கு இப்பதவி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## அழிந்து போகிறது கோணாவத்தை ஆறு! அட்டாளைச்சேனை மக்கள் வேதனை

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள கோணாவத்தை ஆறானது சுமார் 35 அடி அகலத்தையும், 4 கிலோமீற்றர் நீளத்தையும் கொண்டுள்ளது. இவ் ஆறானது சுமாராக முப்பதாயிரம் ஏக்கர் நெற்செய்கை நிலங்களின் மேலதிக நீரை தேக்கி வைப்பதற்கும் கடலில் கொண்டு சேர்ப்பதற்கும் பயன்பட்டு வருகிறது.

அண்மைக்காலமாக சிலரினால் இப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் கொட்டப்பட்டு வருவதானால் இங்கு ஆறானது அழிந்து போகும் நிலை தோன்றியுள்ளது.

எனவே, குறித்த பகுதியில் மண் கொட்டுவதை நிறுத்துமாறும், கொட்டிய மண்ணை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுமார் நூறுக்கும் அதிகமான மீனவர்கள் இந்த ஆற்றில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன், சுனாமியின் போது அட்டாளைச்சேனை பிரதேசம் பெரிதளவில் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டதற்கும் குறித்த ஆறே காரணமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் காசுக்கான வேலை!

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப் பட்டு வருகின்ற 'காசுக்கான வேலை' திட்டத்தினை மேற்கொள் ளும் பொருட்டு திருகோணமலை மாவட்டத்திற்கு குறித்த அமைச்சினால் 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனக் குறித்த மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த வேலைத்திட்டத்திற்கு பதினொரு பிரதேச செயலக பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதேவேளை வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அபிவிருத்தி போன்ற அபிவிருத்தி திட்டங்களுக்காக மேலதிகமாக 70 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திருமலை செய்திகள் தெரிவிக்கின்றன.

**தினமுரசு வாரமலர்**

த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

# எது தீர்வு எப்படிச் சாத்தியம்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை அரசுடன் மூன்று கட்டமான சந்திப்புக்களை மேற்கொண்டுள்ள போதும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பில் எவ்வித முன்மொழிவுகளையும் செய்யவில்லை என்று ஜனாதிபதி அண்மையில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

கூட்டமைப்பினரோ முதலில் தாம் தீர்வுத்திட்ட வரைவொன்றை அரசுக்குக் கையளித்துவிட்டதாகக் கூறினார்கள். பின்னர் தாம் முதலில் அவசரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்விதமான பேச்சுக்களையே நடாத்தியதாகவும் அடுத்த சந்திப்பில் காணி, பொலிஸ், நிதி போன்ற முக்கிய விடயங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படக் கூடிய தீர்வொன்றை பேசவுள்ளதாகக் கூறினார்.

முதலில் 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடான மாகாணசபை முறைதான் தீர்வு என்பதைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறிய கூட்டமைப்பினர், பின்னர் சில அதிகாரங்களுடன் மாகாணசபைத் தீர்வுமுறையை வலியுறுத்தப்போவதாகக் கூறியுள்ளனர்.

மாகாணசபை நிர்வாகத்தை ஏற்படுத்துவதே தீர்வுக்கான அடிப்படை என்று இந்தியா நம்புகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அவரால் செய்யக் கூடியதும், இலங்கையின் சூழலுக்குப் பொருத்தமானதும் மாகாண-சபை அமுலாக்கம்தான். இதைப் பல்வேறு தடவைகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். இந்த நிலையில் கூட்டமைப்பு அரசியல் தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென்று ஜனாதி-பதி கூறியிருப்பது வேடிக்கையாகவே இருக்கின்றது எனக் கருதும் அவதா-னிகள், கூட்டமைப்புத் தீர்வென்று எதை முன்வைத்தாலும் அது எடுபடாது என்பதுதான் யதார்த்தம் என்றும் கூறுகின்றனர்.

ஆகவே தீர்வுத்திட்டமொன்றைக் கூட்டமைப்பு முன்வைக்க வேண்டும் என்ற கருத்தானது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாமே என்று கூறும் கூட்டமைப்பை உசுப்பேற்றும் ஒரு தந்திரோபாயமேயாகும்.

கூட்டமைப்பும் தம்மிடம் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும்படி இலங்கை ஜனாதிபதி கேட்டுவிட்டார்.

ஆகவே அங்கீகாரத்திற்குரியவர்கள் தாமே என்ற கயிற்றை விழுங்கிக் கொண்டு மண்டையை தமக்குள் உடைத்துக் கொள்ளத் தொடங்கிவிட்டனர். அவர்கள் மாகாண சபைக்கு மாறாக எதையேனும் முன்மொழிவது இன்றைய நடைமுறைக்கு சாத்தியானதல்ல. அது தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்று அரசியல் நடாத்த ஒருவேளை உதவக் கூடும்.

ஆகவே கூட்டமைப்பு, இந்தியாவையும், இலங்கை அரசையும் வழிக்குக் கொண்டு வரும், தீர்வொன்றுக்கு வரப் போகிறார்களா? அல்லது மாகாண சபையையும் தாண்டிய தனிநாட்டுக்கு ஒப்பான தீர்வொன்று வேண்டுமென்று கூறிக்கொண்டு வாக்குவேட்டையர்களாக இருந்து தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாகக் வைத்துக்கொண்டு இருக்கப்போகிறார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

சிவன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# லிபியாவை நொருக்கும் சர்வதேச அவசரம்

**லிபிய** அதிபர் முஅம்மர் கடாபி 42 வருட கால ஆட்சிக்கெதிராக போராட்டத்தில் குதித்த கிளர்ச்சியாளர்களுக்கும் அவர்களை அடக்குவதற்கு கடாபி அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினதும் தீவிரம் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீளக் கைப்பற்றுவதற்கு கடாபியின் ஆதரவுப் படையினரும் கடாபியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பகுதியை நோக்கி கிளர்ச்சியாளர்களும் மாறி மாறி வன்முறைகளைக் கையாண்டு வருகின்றனர். இதன் உச்சக்கட்டமாக கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் கடந்த ஒருவாரத்துக்கும் மேலாக லிபியா மீது தாக்குதலை நடாத்தி வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக கடந்த 28 ஆம் திகதி புருஸெலெஸில் இல் கூடிய நேட்டோ நாடு-களைச் சேர்ந்த 28 நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் விரிவாக ஆராயப்பட்டதனைத் தொடர்ந்து கூட்டுப் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையானது நேட்டோ தலைமையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக நேட்டோ சார்பில் பேசவல்ல செயலா-ளர் ரஸ்மூஸின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் லிபிய மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு சுமூகமான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் நேட்டோ அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமெனவும் அதன் முதற்கட்டமாக தனது லிபியாவில் சொந்த மக்களுக்கு எதிராகவே விமானத் தாக்குதலை மேற்கொண்டுள்ள லிபிய அதிபர் கடாபிக்குச் சொந்தமான விமானங்கள் சுட்டு வீழ்த்துவதற்கு கனடாவின் இராணுவத்தளபதி தலைமையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

துனீசியாவில் ஆரம்பித்து எகிப்து, அல்ஜீரியா, லிபியா மத்திய அரேபிய நாடுக-ளில் பரவி வருகின்ற சர்வாதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்களின் உச்சக்கட்டமாக நடைபெற்று வருகின்ற லிபிய வன்முறைகளில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளின் தலையீடும் தற்போது நேட்டோவின் தலையீடும் சர்வதேச மட்டங்களில் பலத்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தி வருகிறது. கூட்டுப்படைகளின் சார்பாக அண்மை நாட்களாக தீவிரமான தாக்குதல்களை நடாத்தி வந்த பிரான்ஸ் கூட நேட்டோவின் தலையீட்டை பெரிதாக விரும்பவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் கூட்டுப்படைகளின் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமையை சீனா, இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகள் வன்மையாகக் கண்டித்திருந்தன. அமெரிக்காவில்கூட லிபியா மீது போர் தொடுப்பதற்கு அமெரிக்கக் காங்கிரஸின் அனுமதி வழங்கப்பட்டிருக்க வில்லை. பொதுவாக அமெரிக்கக் காங்கிரஸின் அனுமதியின்றி அமெரிக்க ஜனாதிபதியினால் ஒரு நாட்டிற்கு எதிராக போர் பிரகடனம் செய்யப்பட வேண்டுமாயின் குறித்த தரப்பினால் அமெரிக்காவின் இறைமைக்கு பங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் லிபியா மீது படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதற்கு அமெரிக்காவினால் கூறப்படுகின்ற காரணமானது அமெரிக்க இறைமையுடன் சம்பந்தம் அற்றதாக இருக்கின்றது. அதைவிட ஏற்கனவே ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின் காரணமாக பல பில்லியன் டொலர்கள் அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே அமெரிக்கப் பொருளாதாரத்தில் பலத்த பின்னடைவுள், வேலையில்லாதத் திண்டாட்டங்கள் என அமெரிக்க மக்கள் இன்னும் முகங்கொடுத்து வருகின்றனர்.

தற்போது லிபியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போர் நடவடிக்கையில் இதுவரையில் 100 மில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்க டொலர்கள் செலவிடப் பட்டுள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இவையெல்லாம் அமெரிக்க மக்கள் மீது சுமைகளாக அழுத்தப் போகின்ற விடயங்களாகும். இது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவிற்கு அமெரிக்காவில் சிக்கலை ஏற்படுத்தும் என்றே தெரிகிறது. இதே நிலையே பிரித்தானியாவிலும் காணப்படுகின்றது. அதே வேளை ஈராக் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்து ஆட்சிக்கு வந்த அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, பிரித்தானிய பிரதமர் கமறூன் ஆகிய இருவரும் தற்போது லிபியா மீது படை நடவடிக்கைகளை ஏவிவிட்டிருப்பதும் பலத்த விமர்சனங்களை உருவாக்கி வருகிறது.

மறுபுறத்தில் லிபியக் மக்களுக்கு ஆதரவான படை நடவடிக்கையாக அமெரிக்காவாலும், ஐக்கிய நாடுகள் சபையாலும் கூறப்படுகின்ற போதிலும் அதனை லிபியக் கிளர்ச்சியாளர்களின் பெரும் பகுதியினரே விரும்புவதாகத் தெரியவில்லை. உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு வெளியாரின் தலையீடு எதற்கு என்பது பெரும்பாலான லிபியர்களின் நிலைப்பாடாக இருப்பது அவர்கள் சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவிக்கின்ற கருத்துக்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு சர்வதேச ரீதியில் பெரும் அதிருப்திகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் அமெரிக்காவின் கைப்பாவையாக இருப்பதாக பல தரப்புகளாலும் குற்றஞ்சாட்டப்படுகின்ற ஐ.நா.வின் ஆதரவுடன் லிபியா மீது மேற்கொள்ளப் படுகின்ற இராணுவ நடவடிக்கைகள் லிபியாவிடம் இருக்கின்ற எண்ணெய் வளத்தின் மீது இலக்கு வைத்து நடாத்தப்படுகின்றது என்று சாதாரண மக்கள் முதல் உயர்மட்டங்கள் வரையில் விமர்சிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அது முக்கியமான ஒரு காரணமாக இருக்கின்ற போதிலும் இன்னொரு காரணத்தையும் சில ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்கின்றனர். அதாவது மத்திய கிழக்கு நாடுகளிலேயே 70 வீதமான எண்ணெய் வளம் காணப்படுகின்ற அதேவேளை அந்நாடுகளில் பெரும்பாலானவை இஸ்லாமிய தேசங்களாக இருப்பதுவும் மேற்குலகிற்கு விரும்பத்தகாத ஒன்றாகவே காணப்படுகிறது.

> **"ஒசாமாவை மறைத்து வைத்திருக்கின்றார்கள் பிடிக்கிறோம் பார்" என ஆப்கான் மீது படையெடுக்கப்பட்டது. இரசாயனக் குண்டுகளை வைத்திருக்கிறார்கள், உலகிற்கே தீமை ஏற்படப் போகின்றது என ஈராக் மீது போர்ப் பிரகடனம் செய்தார்கள். இறுதியில் கண்ட பலன் என்ன?**

இத்தேசங்கள் அனைத்தும் ஓரணியில் இணைந்துவிட்டால் தங்களது இருப்பிற்கே சவால் ஏற்பட்டு விடுமென மேற்குலகு அஞ்சுகிறது. இந்த நீண்ட கால அச்சத்தின் வெளிப்பாடாகவே அர-புலகைப் பிரித்து ஆளும் வேலையை மேற்குலகு செய்து வருகின்றது. அதன் விளைவாகவே காலத்துக்குக் காலம் யசீர் அரபாத், சதாம் ஹூசைன், ஒசாமா பின்லேடன், முஅம்மர் கடாபி போன்ற பலர் மேற்குலகினால் வளர்த்து விடப்பட்டவர்கள். தங்களால் வளர்க்கப்பட்டவர்களே தங்களை மீறிச் செல்லும் நிலை வரும் போது அவர்கள் மீது பயங்கரவாதப் பட்டம் கட்டி அவர்களை சங்காரம் செய்கின்ற நடவடிக்கைகளில் மேற்குலகு ஈடுபட்டு வருவதாக பிரபல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.


எது எப்படி இருப்பினும் லிபியாவின் மீது மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ நடவடிக்கையானது இறைமையுள்ள நாட்டின் மீது சர்வதேச சமூகம் அவசர முடிவொன்றை மேற்கொண்டு விட்டதாகவே புத்திஜீவிகள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையில் மேற்குலகு கூறுவது போன்று லிபிய மக்களை உயிரிழப்புகளிலிருந்து மீட்பதுதான் நோக்கமாக இருந்தால் இராணுவ நடவடிக்கைகள் தீர்வாக அமைந்துவிடாது. அமெரிக்க கூட்டுப்படைகளால் ஏவப்பட்டு வருகின்ற டொம் ஹவாக் ரக ஏவுகணைகள், 2000 பவுண்டு எடையுள்ள குண்டுகள் என்பவையெல்லாம் லிபிய அதிபரின் நிலைகள் மீது வீசப்படுவதாக சொல்லப்படுகின்ற போதிலும் அவை லிபிய மக்களையே பலியெடுகின்றன. அவை வெளியிடுகின்ற கந்தக நச்சு வாயுக்கள் எதிர்வரும் காலங்களில் லிபியச் சந்ததியினரையே தாக்கப் போகின்றது.

மேற்குலகின் தான்தோன்றித்தனமான முடிவுகளால் எத்தனையோ நாடுகள் நாசமாக்கப்பட்ட நிகழ்வுகள் வரலாறாக இருக்கின்ற போதும் அண்மைய சான்றாக ஈராக்கும், ஆப்கானிஸ்தானும் எம் கண்முன் அழிந்து போய்க்கிடக்கிறது. "ஒசாமாவை மறைத்து வைத்திருக்கின்றார்கள் பிடிக்கிறோம் பார்" என ஆப்கான் மீது படையெடுக்கப்பட்டது. இரசாயனக் குண்டுகளை வைத்திருக்கிறார்கள், உலகிற்கே தீமை ஏற்படப் போகின்றது என ஈராக் மீது போர்ப் பிரகடனம் செய்தார்கள். இறுதியில் கண்ட பலன் என்ன? இந்த இரண்டு தேசங்களையும் சாம்பல் மேடுகளாக்கியது தான் மிச்சம். இவற்றிற்கு முக்கிய சூத்திரதாரியாக இருந்த அமெரிக்கவின் முன்னாள் அதிபர் ஜோர்ச் டபிள்யூ புஷ் தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் தனது தீர்மானங்கள் தவறானது என்று வெளிப்படையாகவே ஏற்றுக் கொண்டிருந்தார். இது காலங்கடந்த ஞானம். ஜோர்ச் புஷ்ஷின் தவறுக்கான ஒப்புதல் வாக்குமூலம் ஈராக், ஆப்கான் மக்கள் இழந்தவைகளையும் அழிந்தவைகளையும் மீளப் பெற்றுக் கொடுக்கவில்லை.

கடந்த காலத்தவறுகளிலிருந்து எதிர்காலத்திற்கான திட்டங்களை திருத்திக் கொள்ள வேண்டியது மனித மாண்பு. ஆனால் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகு லிபியா விடயத்திலும் தமது தான்தோன்றித்தனமான அவசர தீர்மானங்களை செயற்படுத்தி வருகிறது.

அதற்காக லிபிய மக்கள் மீது கடாபிக்கு ஆதரவான படைகள் தாக்குதல் நடாத்துவது நியாயமானது என அர்த்தமாகாது. கடாபியினால் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் தன்னிடம் இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி தந்திரோபாயமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும். உலகமயமாக்கப்பட்டிருக்கின்ற இன்றைய உலகப் போக்கில் எந்தவொரு அரசும் தனித்து நின்று எதுவும் செய்ய முடியாது. இதைச் சாதகமா-கப் பயன்படுத்தி சர்வதேச அழுத்தங்களின் ஊடாக லிபிய அதிபரைப் பணிய வைக்க சர்வதேச சமூகம் முற்பட்டிருக்குமாயின் லிபியாவில் ஓடுகின்ற இரத்த ஆறு முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கும். ஆனால் தற்போதைய தீர்மானது மோசமடையச் செய்திருக்கிறது என்பதுதான் சோகம்.

✱



> மக்கள்
> எழுச்சி கண்டு செய்வதறியாது
> தவிக்கிறது அல்ஜீரிய
> அதிகார வர்க்கம்..
> இங்கும் வேலையில்லாத
> திண்டாட்டம் வறுமை என்பன
> அந்நாட்டு மக்களை ஆத்திர
> அமிலத்தில் ஆழ்த்தியது.

# சாமானியர்கள் சமைக்கும் சர்வாதிகாரச் சமாதிகள்

கோவை.நந்தன்



### அல்ஜீரியா

அல்ஜீரியாவும் மக்கள் புரட்சியை நோக்கி பயணிக்க தொடங்கியுள்ளது. தலைநகரான அல்ஜீர்யஸில் ஏராளமானோர் பங்கேற்ற போராட்டத்தை பாதுகாப்பு படைகள் கடுமையாக அடக்கியது. பொதுக் கூட்டங்களை தடைச் செய்யும் புதிய சட்டத்தை திரும்ப பெற வேண்டுமென்பது மக்களின் முக்கிய கோரிக்கையாகும். மக்கள் எழுச்சி கண்டு செய்வதறியாது தவிக்கிறது அல்ஜிரிய அதிகார வர்க்கம்.. இங்கும் வேலையில்லாத திண்டாட்டம் வறுமை என்பன அந்நாட்டு மக்களை ஆத்திர அமிலத்தில் ஆழ்த்தியது. துனீசியாவில் நடைபெற்றதை நிகழ்த்த விரும்புகிறோம் என வெளிப்படையாகவே தெரிவிக்கின்றனர் புரட்சியாளர்கள்.

அரசுக்கெதிரான போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்த RALLY FOR CULTURE என்ற அமைப்பின் ஏராளமான தலைவர்கள் கைதுச் செய்யப்பட்டு மக்கள் போராட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி 1992 ஆம் ஆண்டு முதல் அல்ஜீரியாவில் அமுலில் உள்ள அவசர காலச்சட்டத்தை எதிர்த்தும் விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை போன்றனவிற்கு எதிராகவும் பொதுமக்கள் வீதியில் இறங்கி போராட ஆரம்பித்துள்ளனர். போராட்டத்திற்கு பல்வேறு மாணவர் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

### ஜோர்டான்

ஜோர்டான் அரசை தூக்கியெறிவோம் என அந்நாட்டு மக்களும் புரட்சியாளர்களாக உருவெடுத்ததையடுத்து விலைவாசியை குறைக்கவும் வேலையின்மையை போக்கவும் ஒரு புதிய நிதி திட்டத்தை அந்த நாட்டு அரசு அறிவித்தது. அது வெறும் கண்துடைப்பே எனக்கூறி மக்கள் திரள் வீதிக்கு வந்து தொடர்ந்தும் நீதி கேட்டு போராடியது.

பிரதமர் ஸாமிர் ரி∴பாயீ பதவியை விட்டு ஓடும் வரை போராடுவோம் என மக்கள் ஆவேசமாக தெரிவிக்கின்றனர். துனீசியாவின் பின் அலீ ஜெயினுல் ஆபிதீனை போல் நம் மன்னரும் அடைக்கலம் தேடி வெளியே ஓட வேண்டும் என போராட்டக்காரர்கள் தங்கள் விருப்பத்தினை தெரிவித்தனர். ஜோர்டானில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ரி∴பாயீ, நடைமுறைப்படுத்திய பொருளாதார சீர்திருத்தங்கள் மக்களின் ஆத்திர அணையை உடைத்தது. அத்தியாவசியப் பொருட்களுக்கு அளிக்கப்படும் வரி சலுகை நீக்கப்பட்டது மக்களை அதிருப்தியுற செய்தது. நாட்டின் பிரதமரை மன்னர் அப்துல்லாஹ் நேரடியாக நியமிப்பதை கைவிட்டுவிட்டு ஜனநாயக ரீதியாக பிரதமரை தேர்வு செய்யவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர் போராட்டக்காரர்கள். மன்னர் வழிகாட்டியாக மட்டும் இருந்தால்போதும். நாட்டின் நிர்வாக விடயங்களைச் செயல் படுத்த முனையக்கூடாது என போராட்டக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

### ஏமன்

ஊழல் ஆட்சியாளர்களை எதிர்த்து ஏமன் நாட்டிலும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். அங்கும் அதிபர் அலீ அப்துல்லாஹ் ஸாலிஹ் பதவி விலக வேண்டும் எனக்கோரியே அந்நாட்டு மக்கள் திரள் போராட்டங்களை தொடர்கின்றனர்.

ஸன்ஆ என்கின்ற பல்கலைக்கழகத்தில் நடந்த கண்டனப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். ஏமன் நாட்டில் மாணவர்கள், சமூகசேவகர்கள், எதிர்கட்சியினர் என ஏராளமானோர் கலந்துக்கொண்ட, மன்னர் அப்துல்லாஹ் ஸாலிஹிற்கு எதிரான பிரமாண்டமான கண்டனப் போராட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. துறைமுக நகரமான ஏதனிலும் நடந்த போராட்டத்தில் போராட்டக்காரர்கள் மீது காவல்துறை துப்பாக்கிச்சூடு நடாத்தி 22 பேரைக் கைதுச் செய்தது. நாட்டின் அதிபர் ஆயுள் முடியும்வரை ஆட்சிபுரிய வழிவகைச் செய்யும் வகையிலான சட்டமும் மக்களை கடும் கோபத்தில் ஆழ்த்தியுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன்,பிரான்சு போன்ற ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடன் அந்நாடுகளில் வாழும் அப்பாவி மக்களின் ஜனநாயக உரிமைகளை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காலில் போட்டு மிதித்தாலும், அவர்கள், வறுமையில் வாடினாலும் அவர்களை தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கி ஆளலாம் எனக் கருதி சுகபோக வாழ்வில் மூழ்கியிருந்த சர்வாதிகாரிகளின் கனவு தகர்ந்து போனதன் காட்சிகளைத்தான் துனீஸ், கெய்ரோ, திரி போலி, ஸன்ஆ, அம்மான், அல்ஜீர்யஸ் நகர வீதிகளில் மக்களின் போராட்டங்களாக நாம் காண்கிறோம்.

அரபுலக வீதிகளில் திரளும் இந்த மக்கள் சக்தியை, ஆதிக்க சக்திகளுக்கு விடுக்கப்படும் ஒரு எச்சரிக்கையாகவே பார்க்க வேண்டும்.

> அப்பாவி மக்களின்
> ஜனநாயக உரிமைகளை
> எவ்வளவு காலம்
> வேண்டுமானாலும்
> காலில் போட்டு
> மிதித்தாலும், அவர்கள்,
> வறுமையில் வாடினாலும்
> அவர்களை தொடர்ந்தும்
> அடக்கி ஒடுக்கி ஆளலாம்
> எனக் கருதி சுகபோக
> வாழ்வில் மூழ்கியிருந்த
> சர்வாதிகாரிகளின் கனவு
> தகர்ந்து போனதன்
> காட்சிகளைத்தான் துனீஸ்,
> கெய்ரோ, திரி
> போலி, ஸன்ஆ, அம்மான்,
> அல்ஜீர்யஸ் நகர வீதிகளில்
> மக்களின் போராட்டங்களாக
> நாம் காண்கிறோம்.
> அரபுலக வீதிகளில்
> திரளும் இந்த மக்கள்
> சக்தியை, ஆதிக்க
> சக்திகளுக்கு விடுக்கப்படும்
> ஒரு எச்சரிக்கையாகவே
> பார்க்க வேண்டும்.


புதியதொரு சமத்துவ சமுதாயத்தைக் கட்டி எழுப்பக்கூடிய ஜனநாயக அமைப்பொன்றின் மூலமாகவே அமெரிக்காவின் கட்டளைகளுக்கு அடிபணிந்து ஆட்சி நடத்தும் சர்வாதிகார ஆட்சிகளை வீழ்த்திடவும், அடிப்படைவாத இஸ்லாமிய ஆட்சிகள் அமை-வதைத் தடுத்திடவும் முடியும். மொசாடேக் தூக்கி எறியப்பட்ட சமயத்தில் நடைபெற்ற சம்பவங்கள் அதன் தொடராக அமெரிக்காவால் மன்னர் ஜா ஆட்சி நிறுவப்பட்டமை, ஈரானில் இஸ்லாமிய புரட்சி உருவாவதற்கு இட்டுச் சென்றன. இவை மத்தியக் கிழக்கு நாடுகளின் வேதனைமிகுந்த வரலாற்று நிகழ்வுகளாக இன்னமும் மக்களால் பார்க்கப்படுகின்றன.

இத்தகைய பின்னணியில், தங்கள் பிராந்தியத்தில் புதியதொரு வரலாற்றை உருவாக்கிட முயற்சிகள் மேற்கொண்டுள்ள அரபு மற்றும் ஆபிரிக்க மக்களின் போராட்டம் ஓர் சமுதாயப் புரட்சியாக மாற்றமடைய உலகம் முழுவதுமுள்ள நடுநிலையாளர்களின் முழுமையான ஆதரவு அவசியமாகிறது. ☐

# ஓசோன் ஓட்டை

## விரிவான பார்வை

பூமியின் மேற்பரப்புக்கு மேல்படை மண்டலத்தில் மெல்லிய சவ்வு போன்று ஓசோன் படை அமைந்துள்ளது. ஓசோன் படையானது சூரியனிலிருந்து பூமியைநோக்கி புறப்படுகின்ற உயிரற்ற சூழலிற்கு பாதிப்பான புற ஊதாக் கதிர்களை தாம் உறிஞ்சிக் கொள்வதன் பயனாக அவற்றை பூமியின் மேற்பரப்பைச் சென்றடையாமல் தடுக்கின்றது. அந்தாட்டிக்காவிற்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளச் சென்ற வளிமண்டல விஞ்ஞானிகள் ஓசோன் படையில் ஓட்டை இருப்பதாகக் கண்டறிந்தனர். இவ் ஓட்டையின் ஊடாக உயிரியல் சூழலிற்கு கெடுதலான உவப்பற்ற புற ஊதாக் கதிர்கள், அகச் சிவப்புக் கதிர்கள் ஊடுருவ முற்படுகின்றன. இதன் விளைவாக முதற்கட்டமாக அந்தாட்டிக்காவின் பனிக்கட்டிகள் உருகும். அதனால் சமுத்திர நீரமட்டம் முன்னிலும் பார்க்க அதிகரிக்கும். அவ்வாறு அதிகரித்தால் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள ஆயிரக்கணக் கான தீவுகள் நீரினுள் மூழ்கிவிடும் என்று அந்தாட்டிக்காவின் "கலிபே" என்ற இடத்தில் பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் 1982 ஆம் ஆண்டு தெரிவித்தனர். மறுபடியும் 1984 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆராய்ந்த போது அன்றிலும் பார்க்க இன்று 30 வீதம் விரிவடைந்தமை கண்டறியப்பட்டது. இன்று ஓசோனின் துவாரம் அந்தாட்டிக்காக் கண்டம் முழுவதும் விரிவடைந்துவிட்டது. ஆராய்வுகளின் முடிவாக இவ் ஓட்டை ஓசோனில் ஏற்படுவதற்குக் காரணம் குளோரோ புளோரோக் காபனின் சேர்வையாகும். இத்துவாரத்திற்கு மூலகாரணமான மனிதனின் சேட்டையே ஓசோனில் ஓட்டை என்ற முடிவிற்கு வந்தனர். உயிரினங்கள் பூமியில் நீடித்து வாழ்வதற்கு பிரதான வாயுக்களான ஒட்சிசன்,



**தமிழமுதன்**

காபனீரொட்சைட், நைதரசன் என்பன முடிவின்றி உதவுகின்றன. புவியில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஒட்சிசன் இன்றியமையாதது. மனிதன் உட்பட ஒவ்வொரு விலங்கினங்களும் ஒட்சிசனை சுவாசித்து காபனீரொட்சைட்டை வெளிவிடுகின்றன. ஆனால் தாவரங்களோ காபனீ ரொட்டைட் பெற்று ஒட்சிசனை வெளிவிடுகின்றன. நைதரசனை தாவரங்கள் தமது வேர்களின் ஊடாக மண்ணிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றன. நைதரசன், ஒட்சிசன், காபன், காபனீரொட்சைட், நியோன், ஈலியம், மீதேன், கிரிப்ரோன், நைதரஸ் ஒக்சைட், ஓசோன் போன்ற வாயுக்கள் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமில்லாத போதிலும் சகல வாயுக்களிலும் ஒட்சிசன் கொள்ளளவில் 21 வீதம் கொண்டுள்ளது. இதுவே உயர் வாழ்வதற்கு இன்றியமையாத வாயுவாகவுள்ளது. இருந்தபோதிலும் ஒட்சிசனை விட கொள்ளளவில் மிக அற்பமான மூன்று பங்களிப்பைக் கொண்டமைந்துள்ள ஓசோன் உயிர்களைக் காக்கும் முதன்மையான சடவாயுவாகும். ஆழமாக ஊடுவிருப் பார்த்தோம் என்றால், உயிர் வாழ்வதற்குக் காரணமான முக்கிய வாயுவாகவும் அறிமுகப்படுத்த முடியும்.

வாயுக்களின் கொள்ளளவில் 0.000006 வீதம் கொண்டுள்ள இவ் ஓசோன் சுடுதலாக கடல் மட்டத்திலிருந்து மேலே 20 - 30 கிலோமீற்றர் உயரமான வாயு மண்டலத்தில் அமைந்துள்ளது. ஓசோன் படுக்கை சுமாராக 25 கிலோமீற்றர் திண்மையுடையது. எனினும் இதிலுள்ள வாயுப் பலம் என்பது மெல்லியதாகும். இவ்வலயத்தில் ஓசோன் பலவித அணுக்களாக இருப்பதால் இதனைப் பொதுவாக ஓசோன் படலம் அல்லது ஓசோன் ஸ்திரத்தன்மை எனவும் அழைப்பர். வளிமண்டலம் இருப்பதனால் சூரியக்கதிர்கள் புவியின் மீது அச்சொட்டாக விழுவதில்லை. பூமியை நோக்கி வரும் சூரியக் கதிர்களில் ஒரு பகுதியை வளிமண்டலம் தெறித்தும், சிதறியும், உறிஞ்சியும் விடுகின்றது. இச் செயற்பாட்டினால் பூமிக்குத் தகுந்த வெப்பமே கிடைக்கப் பெறுகின்றது. உவப்பற்ற காலநிலையில் தாவரங்களை வளர்ப்பதற்கு கண்ணாடியிலான வீடுகள் ஆற்றும் செயலை வளிமண்டலம் ஆற்றுவதனால் இதனைப் பச்சை வீட்டு விளைவு என்பர். இவ்விளைவை நடத்தும் வளிமண்டலப் படைகளில் ஓசோன் முக்கிய படையாகும். ஞாயிற்றுக் கதிர்களில் தீங்குதரும் கதிர்களைத் தடுத்து, தெறித்து, வானவெளிக்குத் திருப்பியனுப்புவதன் மூலம் பூமியில் வெப்பநிலை சமனாகவும், உயிரினங்களுக்குத் தீமை செய்யும் கதிர்களை பூமிக்கு அனுப்பாமல் காக்கிறது. அளவில் இது சிறிய படையாயினும் இது ஆற்றிய வரும் செயற்பாடு வியக்கத்தக்கது. வாயு மண்டலம் வெப்பக்கடல் மட்டத்திலிருந்து உயரும்போது படிப்படியாக சில மாற்றங்களுக்கு உட்படுகின்றவை. இவ்மாற்றங்களைக் கருத்திற்கொண்டு விஞ்ஞானிகள் ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். அவையாவன- மாறும் மண்டலம் - கடல் மட்டத்திலிருந்து ஏறக்குறைய 10 கிலோமீற்றலிருந்து 50 கிலோமீற்றர் வரை, மத்திய மண்டலம் - ஏறக்குறைய 50 கிலோ மீற்றரிலிருந்து 80 கிலோமீற்றர் வரை, வெப்ப மண்டலம் - 80 கிலோமீற்றரிலிருந்து 200 கிலோ மீற்றர் வரை, அயன மண்டலம் - 200 கிலோமீற்றருக்கு மேல், இதன்படி ஓசோன் அமைந்திருப்பது வாயு மண்டலத்தின் நிலையான மண்டலத்திற்குரிய பிரதேசத்தில் ஆகும்.

(தொடர்ச்சி அருத்த வாரம்)

# கண்ணதாசனின்

## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 08

164

கௌதமரின் குமாரர் வசிஸ்ரர், அவரது குமாரன் நசிகேதன்.

அவர் தன்னிடம் இருந்த எல்லாப் பொருள்களையும் தானம் செய்தார்.

அவரது குமாரன் நசிகேதனுக்கும், 'தன்னை, தந்தை யாருக்குத் தானம் செய்வார்?' என்ற கேள்வி எழுந்தது.

'தனக்கு வயதான பின் தானம் செய்வதில் பொருளிருக்க முடியாது. கடைசி முறையானது. கடைசி முறை யாகத் தண்ணீர் குடித்துப் புல்லைத் தின்று மலடாகிவிட்ட கிழட்டுப் பசுக்களைத் தானம் செய்வதில் என்ன யோகம் இருக்க முடியும்? இந்த ஒன்பது வயதிலேயே, தானும் தானம் செய்யப்பட வேண்டும்!' என்று நசிகேதன் கருதுகிறான்.

'தந்தையே! என்னை யாருக்குத் தானம் செய்யப் போகிறீர்?'



தந்தையைக் கேட்கிறான்.

அவர் பேசாமல் இருக்கிறார்.

அவன் மீண்டும், மீண்டும் கேட்கிறான்.

அவர் கோபத்தோடு, 'உன்னை யமனுக்குத் தானம் செய்யப் போகிறேன்' என்கிறார்.

நசிகேதன் யோசிக்கிறான்.

'தன்னைத் பெற்றுக் கொள்வதால் யமனுக்கு என்ன இலாபம்? நான் யமனிடம் போவதென்றால், பலருக்கு முன்னால் போகப் போகிறேன். என்னை அடைவதன் மூலம் யமன் செய்யப் போவது என்ன இருக்கிறது.?"

அவன் ஏதேதோ யோசிக்கிறான்.

தந்தையே! நம் முன்னோர்கள் நடந்து வந்த விதத்தைக் கவனியுங்கள். தானியங்களைப் போல மனிதன் அழிகிறான்.

"தானியங்களைப் போலவே மீண்டும் பிறக்கிறான். நானும் போய் வருகிறேன்' என்று கூறிப் புறப்படுகிறான்.

நசிகேதன் ஸ்தூலத்துடனேயே யமதர்மனைப் பார்க்கப் புறப்படுகின்றான்.

தானியங்களை உதாரணம் காட்டியதில், அவன் ஒரு அர்த்தத்தைக் குறிப்பிடுகிறான்.

'ஒரு தானியத்தின் ஆயுள் காலம் எவ்வளவோ, அவ்வளவுதான் மனிதனின் ஆயுட்காலம்' என்பது அவனது நம்பிக்கை.

வாழ்வு இவ்வளவு சிறியதாக இருக்கும் போது, அதில் ஆசை வைப்பானேன்?

காம, குரோத லோபங்களில் சிக்குவானேன்?

தந்தையிடம் சொல்லுகிறான், தன் புறப்பாடுவதைப்பற்றி தந்தையும், அவன் யமனைப் பார்க்கப் போவதை அனுமதிக்கிறார்.

யமனைத் தேடி நசிகேதன் சென்ற போது, யமதர்மன் வீட்டில் இல்லை. அதனால் மூன்று நாட்கள் அவன் அங்கே தங்க நேரிடுகிறது.

மூன்று நாளும் நசிகேதன் உண்ணாவிரதம் இருக்கிறான்.

மூன்றாவது நாள், யமதர்மன் வருகிறான்.

ஒரு பிராமணச் சீடன் தனக்காக மூன்று நாட்கள் விரதம் இருப்பதைப் பார்த்து, யமன் சொன்னான்:

"ஏ அதிதியே! பிராமணா! என் வீட்டில் நீர் மூன்று இரவுகள் உணவருந்தாமல் கழித்துவிட்டீர். அதற்குப் பதிலாக மூன்று வரங்களை உங்களுக்குத் தருகிறேன். என்னென்ன தேவை என்று நீங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு என் வணக்கம். உமக்கு நன்மை உண்டாகட்டும்."

உடனே நசிகேதன் மூன்று வரங்களைக் கேட்கிறான்.

முதல் இரண்டு வரங்களும், நசிகேதன் தந்தையைப் பற்றியதும் சொர்க்கத்தைப் பற்றியதுமாகும். அதில் ஒன்று, அக்கினி யாகம், அதற்காகக் கற்கள் பதித்த ஒரு தங்கச்சங்கிலியை யமன் தருகிறான்.

அது யமதர்மனின் முத்திரை.

மூன்றாவது கேள்விதான் சிக்கலானது.

"யமதர்ம ராஜரே! ஒருமனிதன் இறந்த பிறகு, 'அவன் இருக்கிறான்' என்று சிலர் சொல்லுகிறார்கள். 'இல்லை' என்று சிலர் கூறுகிறார்கள். உண்மை எது, அவன் இருக்கிறானா இல்லை? இந்தச் சந்தேகம் வெகுநாட்களாக இருக்கிறது. இதை எனக்கு நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும்."

இந்த இருபதாவது ஸ்லோகத்துக்கு விளக்கம் சொல்லும் போது, சுவாமி சின்மாயனந்தர் அவர்கள் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார்கள்,

"உபநிஷத ரிஷிகள் பெருமையே பெருமை! கதாநாயகனுடைய சித்திரத்தைச் சொல்லாத வார்த்தைகளிலேயே எவ்வளவு திறமையாக அமைக்கிறார்கள்! இது ஷேக்ஸ்பியரின் கற்பனைக் கூடச் செய்யமுடியாத ஒன்றாகும்! அந்த அமரரிஷிகளுக்கு நம் வணக்கம் நிறைந்த வாழ்த்துக்கள் உரியனவாகுக.

"நம் முன்னால் பார்த்தோம், (இலட்சிய ஆன்ம வித்தை) மாணவனாக நசிகேதன் மனவமைதியையும் இன்பத்தையும் வேண்டி முதல் வரத்தைத் தீர்த்தான். இரண்டாவது வரத்தை மனித சமுதாயம் ஆசி பெற அர்ப்பணித்தான். இப்பொழுது கடைசி வரம் என்ற பொழுதுதான் தன் 'நலத்தை'ப் பற்றி நினைக்கிறான். தன் பெரிய சந்தேகங்களுள் ஒன்றைத் தீர்த்து வைக்குமாறு கேட்கிறான்.

"தியாகம் வேண்டும். தனக்குரியவர் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் உள்ளவருக்கு நன்மை புரிந்து,அவர்கள் நன்மையைத் தன் ஆன்ம விடுதலையை விட முதலில் எண்ணுமளவுக்குத் தன்னுள்ளே, 'தயை' வேண்டும். உண்மையான ஆன்ம முன்னேற்றம் தேடுபவன், உண்மையைத் தேடிச் செல்லும் யாத்திரையில் முழு வெற்றியையும் பெற வேண்டும் என்றால், அவனுக்கு இன்றியமையாத முக்கிய குணம் வேண்டும். இது, இன்று பக்தர்கள் வர்க்கத்தில் மெதுவாக வந்து செறிந்து நிற்கின்ற நம்பிக்கைக்கு நேர்மானதுதான்.

தொடரும்...

# மீனவர்கள் மாயமாகும் புதிய கலாசாரம்

இலங்கை இந்திய கடற்பரப்பில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலை நாளுக்கு அதிகரித்து வருகிறது. முன்னர் இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களைத் தாக்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. அதனை இலங்கை கடற்படைத்தரப்பும் மறுத்து வந்தது. இந்தநிலையில் குறித்த நடவடிக்கைகளில் தற்போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்திய மீனவர்கள், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் போது அவர்கள் இழுவைப்படகுகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதால், இலங்கை மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இழுவைப்படகுகள் மூலம் இந்திய மீனவர்கள், மீன்பிடியில் ஈடுபடுவதன் காரணமாக இலங்கையில் குறிப்பாக வடபகுதி கடற்பரப்பில் மீனினங்கள் அருகிப்போகின்றன. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான இலங்கை மீனவர்கள் வருமான ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். இந்தநிலையில், தமது மீன்வளத்தை தமது வாழ்வாதார தொழிலை காப்பாற்றிக்கொள்வதற்கு இலங்கை மீனவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். போர் இடம்பெற்ற காலகட்டத்தில் இலங்கை மீனவர்களுக்கு தமது நாட்டுக்குள்ளேயே பாதுகாப்பு நடைமுறைகளை கடைப்பிடிக்கவேண்டிய நிலை இருந்தது. அதனூடாக இலங்கை மீனவர்களின் நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையில் ஊடுருவி தொழிலில் ஈடுபடும் போது அதனை தடுத்து நிறுத்தக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

இந்த சூழ்நிலையை பயன்படுத்தி, தமிழக மீனவர்கள் இலங்கையின் கடற்பரப்புக்குள் தமது தொழில்களை சுதந்திரமாக மேற்கொண்டு வந்தனர். ஆனால் தற்போது சூழல் மாறியுள்ளது. எனினும் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கை எல்லைக்குள் நுழைந்து தமது தொழிலை மேற்கொண்டு வந்தனர். இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே தமிழக மீனவர்கள் பலர் ஒரு மாதக்காலத்துக்கு முன்னர் வடபகுதி மீனவர்களால் சிறைபிடிக்கப்பட்ட சம்பவம் அமைந்திருந்தது.

இந்த சம்பவம் தங்களின் தொழிலை தாமே காப்பாற்றிக்கொள்வதற்காக இலங்கை மீனவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையாகவே கருதப்பட்டது. எனினும் இது இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் பாரிய முறுகலை ஏற்படுத்தியது இராஜதந்திர முறுகலாக உருவெடுத்த இந்த சம்பவம் பின்னர், இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டமையை அடுத்து தணிந்தது.

இதனையடுத்து, இரண்டு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சந்திப்பின் போது இலங்கை மீனவர்களின் கடும் நிலைப்பாடானது இந்தப்பிரச்சினை தற்போதைக்கு நிறைவுறாது என்ற தோற்றத்தை கொடுத்துள்ளது. இந்த சந்திப்பின் போது இந்திய அரசாங்கம் அல்லது தமிழக மீனவர்கள், கூறி வந்த விடயங்கள் பொய்யானவை என்ற கருத்துக்கள் வெளிப்பட்டன.

அதாவது இந்திய மீனவர்கள், இந்திய கடற்பரப்பில் வைத்தே தாக்கப்படுகின்றனர் என்ற தகவல் இதன்போது பொய்ப்பிக்கப்பட்டது. இதனை தமிழக மீனவர்களே ஏற்றுக்கொண்ட நிலை இதன்போது உருவானது. தாம், இலங்கை கடற்பரப்பில் வந்து மீன்பிடிப்பதை நிறுத்துவதற்கு கால அவகாசம் வேண்டும் என தமிழக மீனவர்கள் இந்த சந்திப்பின்போது கோரிக்கையை முன்வைத்தமையானது, அவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசிக்கின்றமைக்கு சான்றை பகர்ந்துள்ளது. எனினும் இந்த சந்திப்பின்போது, இந்திய மீனவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இலங்கையின் மீனவர்கள் மறுத்தனர். தமது மீன்வளப்பகுதியில் இந்திய மீனவர்களை தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது என்று அவர்கள் தெரிவித்தனர். எனவே இரண்டு தரப்பு மீனவர்களுக்கும் இடையிலான இந்த பேச்சுவார்த்தை முடிவின்றி தோல்வியில் முடிவடைந்தது.

இதனையடுத்து இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு இந்திய கரையோர காவல்துறையினர் இலங்கை கடற்பரப்பில் ரோந்து செல்வதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனை இந்திய அரசாங்க தரப்பு மறுக்கவோ நிராகரிக்கவோ இல்லை. இதற்கு தமிழக சட்டசபை தேர்தல் ஒருகாரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இலங்கை அரசாங்கம் இந்த செய்தியை முற்றாக மறுத்திருக்கிறது. இதற்குள் இந்திய மீனவர்களால், இலங்கை மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. இவர்கள், இந்திய கடற்பரப்புக்குள் சென்று மீன்பிடித்தபோதே தமிழக மீனவர்களால் சிறைபிடிக்கப்பட்டதாக இந்தியப் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்திய கடற்பரப்பில் மீன்வளங்கள் இல்லை என்று கூறி, தமிழக மீனவர்கள், இலங்கை கடற்பரப்புக்குள் வரும் போது வடபகுதி மீனவர்கள் ஏன் இந்திய கடற்பரப்புக்குள் தொழிலுக்காக செல்ல வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. எனவே தமிழக மீனவர்களின் நடவடிக்கையின் நியாயத்தன்மையில் சந்தேகம் எழுந்துள்ளது. இந்த செயல் இலங்கையின் வடபகுதி மீனவர்களை பழிதீர்க்கும் ஒரு செயலாகவே பார்க்கவேண்டியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக பேசப்பட்டுக்கொண்டிருக்கும் போதே வல்வெட்டித்துறை கடலில் இலங்கை மீனவர்கள், தமிழக மீனவர்களால் தாக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

> **மீன்பிடிப்பதை நிறுத்துவதற்கு கால அவகாசம் வேண்டும் என தமிழக மீனவர்கள் இந்த சந்திப்பின்போது கோரிக்கையை முன்வைத்தமை யானது, அவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசிக்கின்ற மைக்கு சான்றை பகர்ந்துள்ளது.**

இலங்கை மீனவர்கள் மீது, தமது கடற்பரப்பில் வைத்தே, மற்றும் ஒரு நாட்டின் மீனவர்கள் தாக்குதல் நடத்தி தப்பிச்செல்வது என்பது, இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயலாக கருதப்படுகிறது எனவே இந்தப்பிரச்சினை மீனவர்கள் தரப்பு மட்டத்தில் இணக்கமாக முடிவடையும் என்ற எதிர்ப்பார்ப்பு தகர்ந்துப்போயுள்ளது. மறுபுறமாக, இந்திய இலங்கை அரசாங்கங்கள், இந்தப்பிரச்சினையை பேசி தீர்க்கவேண்டும் என்ற கருத்து வெளிப்பட்டுள்ளது. இதன் கீழ் இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் அமைக்கப்பட்ட இரண்டு நாடுகளையும் கொண்ட குழு இந்திய தலைநகர் புதுடில்லியில் கூடி ஆராய்ந்துள்ளது. இதன்போது சர்வதேச கடல் எல்லையை தாண்டும் எவரையும் கைதுசெய்வது என்ற தமது கொள்கையை வலியுறுத்தியுள்ளதாக இலங்கை அரசாங்கத்தரப்பு தெரிவித்துள்ளது. இந்தநிலையில் புதுடில்லியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த முயற்சி, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மீனவப்பிரச்சினையை தீர்க்க உதவுமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். இல்லையேல் இந்திய தரப்பில், தமிழக சட்டசபை தேர்தல் மற்றும் தமிழகத்தில் புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சியமைக்கும் சூழல் ஏற்படுமாக இருந்தால் கச்சதீவை மீண்டும் இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெறுவதை தடுக்கமுடியாது போகலாம். அதேநேரம், இலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் இன்னல்களுக்கு உள்ளாகவேண்டிய நிலையை தவிர்க்கமுடியாது போய்விடும்.



# உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் விருப்பும் உறுப்பினர்களின் பொறுப்பும்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

**ஆயுத** வன்முறைகள் மட்டுமே முடிந்திருக்கின்ற தறுவாயில் மற்ற அனைத்துப் பிரச்சினைகளும் எஞ்சி நிற்கின்றன. இந்த வேளையில் அடுத்த உள்ளூராட்சி நிர்வாகமும் தெரிவாகிவிட்டது.

பல வகையான கோஷங்கள், வாக்குறுதிகள், கடந்த காலத்தவறுகள், வளமான எதிர்காலத்துக்கான வழிவகைகள் எல்லாம் தேர்தல் பிரச்சாரங்களின் போது சூடுபிடித்த சமாச்சாரங்கள். சா வீடு தொடக்கம் பாராளு மன்றம் வரை பட்டிதொட்டி எங்கும் தேர்தல் கூப்பாடு களைத்தான் கேட்கமுடிந்தது.

ஊருக்கு நல்லது செய்வேன் என்கின்ற அடிப்படையில் இந்தத் தேர்தல் காலத்தின் போது முன்பின் தெரியாதவர்களெல்லாம் தங்களது திருமுகங்களை சுவரொட்டிகளில் அச்சிட்டு தெருவெங்கும் ஒட்டி தங்களைத் தாங்களே விளம்பரப் படுத்தியும் சுய அறிமுகம் செய்துமிருந்தார்கள்.

இப்படி சுவரொட்டிகள் மூலம் அவர்கள் தங்களை விளம்பரப்படுத்தித்தான் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியிருந்தது என்பது சுவாரஸ்யமானதும் துரதிர்ஷ்டமானதும்தான். ஏனெனில் மக்களுக்கு வேண்டியதையெல்லாம் செய்யப் போகிறோம் என்று வாக்குறுதி அளித்தவர்களைப் பற்றி மக்களிடையே பிரபல்யம் இல்லாதனால்தான் இத்தகைய சுவரொட்டிகள் மூலம் அவர்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய துரதிர்ஷ்டம் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

நல்லதோ கெட்டதோ எல்லாம் நடந்தேறிவிட்டது. மக்களோடு முன் பின் உறவில்லாத பேர்வழிகளும், தங்களை இன்னார் என்று வெளிப்படுத்தியவர்களும் இதுவரையில் மக்களுக்கு எதையாவது செய்தவர்களும் என எல்லாத் தரப்பினரில் இருந்தும் யாரோ தெரிவு செய்யப்பட்டுவிட்டார்கள்.

எல்லாம் சுபம் என்று வாக்களித்தவர்களும் இனி ஓய்வடைந்து விடுவார்கள். ஆனால் இன்னுமொரு நான்கு வருட காலம் இந்தக் கிராமப் புறங்களிலும் நகரப் புறங்களிலும் ஏதாவது நல்லது நடக்கும் என்பதுதான் வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்பு.

> **உள்ளூராட்சி நிர்வாகம் எப்பொழுதுமே ஊழல் நிறைந்தது. அதன்மூலமாக வரும் அரசியல்வாதிகளும் மக்களைச் சுரண்டிக் கொள்ளையடிப்பவர்கள் என்கின்ற கணிப்போடு மக்கள் ஒதுங்கிக்கொள்கிறார்கள். இந்தக் கணிப்பையும், தாங்கள் இதனைத்தடுக்க என்ன செய்ய வேண்டும் என்கின்ற பொறுப்பையும் மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்**

வழமையாக உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடுப வர்களின் நோக்கம் தெரிவாகிய வுடன் பெரும்பாலும் வேலை ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள் வதும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் என்கின்ற அந்தஸ் தைப் பயன்படுத்தி சுயநலன் களை அனுபவிப்பதுமாகும் என்கின்ற பரவலான மனப்பதிவு மக்களிடம் உள்ளது.

ஆயினும் வேறு வழியின்றி மீண்டும் மீண்டும் ஏதோ ஒருவகையில் இத்தகைய பேர்வழிகளைத்தான் தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலையும் மக்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

எனினும் மாற்றமடைந்து வரும் சிந்தனைப்போக்கில் இத்தகையதொரு துரதிர்ஷ்டமான சூழ்நிலையை ஒழிக்க வேண்டும் என்பதில் பல சமூக ஆர்வலர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் செயலாற்றி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

"ஒரு வெளிப்படைத் தன்மையான, மக்களுக்குக் கணக்குக் காட்டக்கூடிய நிர்வாக ஆட்சி முறைமையைக் கொண்டு வரும்பொழுது அதன்மூலமாகக் கிடைக்கப் பெறும் நன்மைகளோ ஏராளம்" என்கிறார் விழுது எனப்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த சாந்தி சச்சிதானந்தம்.

உள்ளூராட்சியினூடே ஒரு நல்லாட்சி மக்களுக்குக் கிட்ட வேண்டும் என்ற தூரநோக்கை அடிப்படையாகக் கொண்டு விழுது நிறுவனம் ஏற்கெனவே பல்வேறு விழிப்பணர்வுச் செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது.

"இந்த விழிப்புணர்வு செயற்திட்டங்களிலே முதலில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்களும் கடமைகளும் பற்றி வாக்காளர்களுக்குத் தெளிவு கிடைக்க வேண்டும். அதன்மூலம்தான் தங்கள் உள்ளூரின் அபிவிருத்தியில் உள்ளூராட்சி மன்றங்களின் பங்கும் பணியும் என்ன என்ற விடயத்தில் அவர்கள் ஆர்வம் காட்டக்கூடும். அந்த ஆர்வத்தின் மூலமாக தங்களுக்குச் சேவை செய்யக்கூடிய மிகவும் தகைமையுள்ள பிரதிநிதிகளை அவர்கள் உள்ளூராட்சி உறுப்பினர்களாக தெரிவு செய்ய முடியும்" என்று கூறுகிறார் சமூக ஆர்வலரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நல்லாட்சிக்கும் பொறுப்புக் கூறலுக்குமான பயிற்சியாளர் சாந்தி சச்சிதானந்தம்.

உள்ளூராட்சி நிர்வாகம் எப்பொழுதுமே ஊழல் நிறைந்தது. அதன்மூலமாக வரும் அரசியல்வாதிகளும் மக்களைச் சுரண்டிக் கொள்ளையடிப்பவர்கள் என்கின்ற கணிப்போடு மக்கள் ஒதுங்கிக்கொள்கிறார்கள். இந்தக் கணிப்பையும், தாங்கள் இதனைத்தடுக்க என்ன செய்ய வேண்டும் என்கின்ற பொறுப்பையும் மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறும் சாந்தி சச்சிதானந்தம், உள்ளூராட்சி மன்ற விடயத்தில் மக்களின் பொறுப்பு, தெரிவு செய்யப் படும் மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு, உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களின் பொறுப்பு என்பன பற்றிய விரிவான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் பயிற்சி நெறிகளையும் தாங்கள் நடத்தி வருவதாகக் குறிப்பிடுகிறார்.

இது குறித்த பயிற்சி வகுப்புக்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் ஏற்கெனவே நடைபெற்றுள்ளன. அதேவேளை புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர் களுக்கும் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களுக்குமான பயிற்சிகள் இந்த வாரத்திலிருந்து இடம்பெறப்போகிறது. முதற்கட்டமாக அது மட்டக்களப் பில் நடைபெறுகிறது.

இத்தகையதொரு நல்லாட்சிக்கான உள்ளூராட்சி முறைமையைப் பயன்படுத்தும் ஆயத்தப் படுத்தலில் தாங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாகக் கூறும் திருமதி சாந்தி சச்சிதானந்தம், சிலவேளைகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் சமூகப்பொறுப்போ கடப்பாடுகளோ பொறுப்புக்கூறலோ சேவை மனப்பான்மையோ அற்றவர்களாகக் காணப்படு கிறார்கள். வெறும் சுயநல இலாப நோக்கம் மாத்திரமே அவர்களிடம் காணப்படுகிறது. உண்மையில் இத்தகைய பிரதிநிதிகள் கட்சி அரசியலுக் கூடாக வந்தவர்கள். இது மறுபுறத்தில் வாக்காளர்களின் பலவீனமாகவும் பார்க்கப்படலாம்.

ஏனெனில் வெறும் கட்சி அபிமானங்களுக்காக எந்த விதமான தகுதியும் இல்லாத வர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்டுவிடுகிறார்கள் என்று கவலைவெளியிட்ட சாந்தி சச்சிதானந்தம் உள்ளூராட்சி மன்ற அமர்வுகளில் பொது மக்கள் பார்வையாளர் களாகக் கலந்துகொண்டு கேள்வி கேட்கத் தொடங்கும் போது இத்தகைய உறுப்பினர்கள் காணாமல் போய்விடுகிறார்கள் அல்லது பொது மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறிப்போய்விடு கிறார்கள் என்பதுவும் அனுபவ-வாயிலாக அறியப்பட்ட உண்மை யாகும் என்பதையும் சாந்தி சச்சிதானந்தம் சுட்டிக்காட்டினார்.

ஆயினும் மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கிய பின்னர் ஊரின் அவசியத்தேவையான மின்சாரம், படகுத்துறை, மதகுகள் அமைப்பு, வீதி நிர்மாணம் போன்றவற்றை சிரமத்தின் மத்தியிலேனும் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடிந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

ஒரு வெளிப்படைத் தன்மையான, மக்களுக்குக் கணக்குக் காட்டக்கூடிய நிர்வாக ஆட்சி முறைமையைக் கொண்டு வரும்பொழுது அதனால் மக்களுக்கும் நன்மை கிட்டுகிறது. அதே வேளை ஆட்சியாளர்களுக்கும் நன்மை உண்டாகிறது என்று கூறும் அவர், பொது மக்களும் ஆட்சியாளர்களும் வெற்றி-வெற்றி நிலையை அடையவேண்டும் எனும் ஆதங்கத்தையும் வெளியிட்டார்.

மக்களின் பக்கமிருந்து பார்த்தால் தங்களுக்குத் தேவையான அபிவிருத்தியை தாங்களே செவ்வனே நிறைவேற்றும் சந்தர்ப்பம் கிடைப்பதோடு மக்களின் முழுமையான பங்களிப்புடன் குறைந்தளவு வளங்களைப் பாவித்து கூடியளவு நன்மைகளை அவர்கள் பெறக்கூடியதாக இருக்கும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)


## மனோதத்துவ வைத்தியம்
## General Psychotheraphy

**யாழ்ப்பாணத்தில் 27.03.2011 – 05 .04.2011 வரை**

அகில உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P. ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.

**தொடர்புகளிற்கு:**
கமல் ரூரிஸ்ற் இன்
392/A மணிக்கூட்டுக் கோபுரவீதி,
யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)

T.P:0214922403
Hotline:0719315664
0777569205

(C/631)

## மாந்திரீக நல்வழி களஞ்சியம்




01.கடமையையும், உண்மையையும் இரு கண்களாகக் கொண்ட என் அருள்ஞான சித்தத்தால் செவ்வாய் குற்றத்தால் வயது ஏறிக்கொண்டு போகும் பெண்களுக்கு உடன் திருமணம் நடைபெற எம்மால் 13 வாரங்களுக்கு அதாவது 3 மாதம் 7 நாள் வரை செவ்வாய் கிழமை வரும் ராகு காலத்தில் 3 மணி முதல் 4.30 வரை இவர்களுக்காக அவர்களின் பெயர் நாமத்தில் வரும் 11 தேசிக்காயில் ஸ்ரீ துர்க்கை அம்மனுக்குக் குங்கும அபிஷேகம் செய்ய இந்தக் குறிப்பிட்ட நாட்களுக்குள் குறிப்பிட்ட ஜாதகம் பொருந்தக்கூடிய ஜாதகன் வந்து சேருவார்.

02.இன்னும் கணவன்-மனைவி பிணக்குத்தீர மன்மத ஆகாசன் வேர் தலையணையில் வைத்து உறங்கிவர கணவன்-மனைவி பிணக்குத் தீரும்.

03.மாமன் மாமி சண்டை, விட்டுப்பிரிந்த கணவர், விட்டுப் பிரிந்த உறவு, விவாகரத்துப் பெற்றவர்கள், கல்வியில் கவனம் எடுக்க, தொழிலை உன்னிப்பாகக் கவனிக்க, அனைத்துக்கும் தெய்வீக மூலிகை வசியம் என்னிடம் உண்டு.

தனிப்பட்ட நபரின் தெட்டத் தெளிவான ஜாதக கணிப்பின் பின்பே பரிகார முறைகள் கையாளப்படும். நல்லது நினைக்க நல்லது கிட்டும்.

கௌரவ பேராசிரியர் தேசபந்து P.K.சாமி (J.D.G.A.N)JP ஐயா. ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக ஞான பீடம். இல.162,கொட்டாஞ்சேனை வீதி, மேபீல்ட் றோட், கொழும்பு-13, 011-2470615, 011-2342463, 011-2342464. FAX .0094-112344831 நுவரெலியா கிளை - இல. 33, தினசரி சந்தை கட்டிடம். 052-2222508.
(C/441)

## வசியம் மந்திரம் நீச்சகுலம் மிகப் பழமை வாய்ந்த ரொடிகுல ரகசிய மாந்திரீகம்



ஆண், பெண் வசியம், வியாபாரம், சொத்து, போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற, காணி விற்பனைக்கு, குழந்தைப் பாக்கியம், வழக்கு, எந்திரம், மந்திரம், மாந்திரீகம், சூதாட்டத்தை 7 நாளில் இல்லாது ஒழிக்க, தடைப்பட்ட திருமணம் வெற்றி பெற

திவசக்தி, பில்லி சூனியம் ஆகியவற்றிலிருந்து 3 நாட்களுக்குள் பலன்

நேரில் என்னைச் சந்தித்தவுடன் பலன் கிடைக்கும்.

நம்பிக்கையுடன் தொடர்பு கொண்டால் தபால் மூலம் தீர்வு காணலாம்.

உங்கள் பிரச்சினையைத் தீர்க்க பெயர், சரியான முகவரி மட்டும் போதுமானது.

உங்கள் தேவைகளை என்னிடம் தொடர்புகொள்ளவும் கண்டிக்கு வந்து அழைக்கவும்.
தொ.பே: 0779889217

போலிச் சாமியார்களை நம்பி ஏமாற வேண்டாம்.

(R/022)

**லுவிரத்னசாமி,**
**இல: 35 புள்ளே ஹொட, அம்பத்தன்ன.**

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 24

சகலன் நிறைவெறியில் வந்திருப்பதைக் கண்டதும், மாத்தளனுக்குப் புறப்பட்டுப் போவதாக வெளிக்கிட்ட அவன், தென்னந்தோட்டத்தின் ஊடாக வெளியேறி கிரவல் பாதைக்கு வந்த போது எதிர்பாராதவிதமாக அந்த முதியவரைச் சந்தித்தான்.


"அட, தம்பி நீ இப்ப எங்கை இருக்கிறாய்...?" குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்த அவன், ஆச்சரியமடைந்தான்.

"பெரியப்பு... என்ன சைக்கிள்ள இந்தப் பக்கம்...?" அவனும் பதிலுக்குக் கேட்டான்.

நான் கைவேலிப்பக்கம் ஒருக்கா வீட்டைப் பார்த்திட்டு வரலாமெண்டு போறன்... சும்மா நிண்டா வாவன் ஒருக்காப் போட்டு வருவம்.

"சீச்சீ... அங்கால ஆமி நிக்கிறானோ தெரியாது. ஆட்களும் ஒருத்தரும் இல்லையாம். நான் மாத்தளன் பக்கம் போறன். நீங்கள் போட்டு வாங்கோ..." அவன் மறுத்துவிட்டு தனது மிதிவண்டியில ஏறி அமர்ந்தான்.

"எட பொடியா! ஏன்ரா உப்புடிப் பயப்படுகிறாய். இயக்கம் நிற்கும்தானேடா. அப்படி ஆமி நிண்டா இயக்கம் உள்ள போக விடமாட்டுது.



தனியப்போறதைவிட, ஆளுக்காள் துணையாப் போறது நல்லது. நீ பயப்படாமல் வா."

பெரியப்பு மீண்டும் அவனை வலியுறுத்தினார்.


"உங்களுக்கென்ன.. காடு வா... வாவென்னுது; வீடு போ...போ என்னுது; நான் குடும்பகாரன். பிள்ளையும் ஒண்டும் இருக்குது. நீங்கள் போட்டு வாங்கோ. நான் போறன்..." கூறிவிட்டு அவன் மிதிவண்டியின் மிதிகட்டையை மிதிக்க ஆயத்தப்பட, பெரியப்பு அவனது மிதிவண்டியின் கரியலை இழுத்துப் பிடித்தார்.

"டேய் பொடியா! சொல்லுறதைக் கேளடா. கோம்பாவில் வரைக்கும் போவம். நிலைமை சிக்கலெண்டால் திரும்பி வருவம்..." பெரியப்பு அவனை விடாப்பிடியாக வற்புறுத்தவே அவனது மனம் சலனப்படத் தொடங்கியது.

'அப்பு சொல்லுற மாதிரி... கோம்பாவில் வரைக்கும் போயிட்டு நிலைமை சிக்கலெண்டால் திரும்பி வருவமோ...? அங்கினேக்கை நிற்கேக்கை ஷெல் வந்து விழுந்தா...?' அவன் யோசிக்கத் தொடங்கினான்.

"என்ன தம்பி யோசிக்கிறாய்...? பொழுதுபடுகிறதுக்கு முன்னம் திரும்பியிடலாம். பயப்படாதை. வாடாப்பா..." பெரியப்பு மீண்டும் வற்புறுத்தினார்.

"சரி நடவுங்கோ..."



அவன் சடுதியாகக் கூறியதும், பெரியப்புவின் முகத்தில் சந்தோஷம் மலர்ந்து கொண்டது.

கிரவல் பாதையில் இருந்து வெளிக்கிட்ட அவர்கள் இருவரும் சிறிது தூரம் ஓடி 'பின்பு இரணைப்பாலை வீதியில் ஏறி, தெற்குத் திசை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள்.

தன்னோடு சமாந்தரமாக மிதிவண்டியை செலுத்தியவாறு, வெற்று மேனியுடன் தோளில் நைந்து சாயம்போன துவாய் ஒன்றைப் போட்டபடி... பல்லில்லாத வாய்க்குள் புகையிலைக் காம்பினை வைத்துக் குதப்பிக்கொண்டு அவர் வருவதைக் கண்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது; சிரித்தே விட்டான் அவன்.

அவன் சிரித்ததைக் கண்டதும், பெரியப்பு கேட்டார்.

"ஏன்ரா பொடியா



சிரிக்கிறாய்...?"

"நீங்கள் இப்ப என்னத்துக்கு கைவேலிப்பக்கம் போறியள்...?" அவன் கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தான். அவன் சிரிப்பதைக் கண்ட பெரியப்பு, தனது வாய்க்குள் சுரந்துகிடந்த புகையிலைக் காம்பு எச்சிலைப் பக்கத்தில் துப்பிவிட்டு, தானும் சிரித்தார்.

"சின்னவயசில இருந்தே நான் தவழ்ந்து வளர்ந்த வீடு... எப்படிக் கிடக்குதோ...? எண்ட ஆதங்கம்தான். அதோடை, வாழைமரங்கள் குலையள் போட்டு நிண்டதுகள். இப்ப முத்திக்கிடக்கும், போனால் ஒண்டு ரண்டை வெட்டிக்கொண்டு வரலாம்..." அப்பு கூறுவதைக் கேட்க அவனுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

உடல் தளர்ந்து போன நிலையிலும் உளம் தளராத உழைப்பின் பிரையாசம் அவரது பேச்சில் தெரிந்தது.

"அது சரி அப்பு... ஊரைவிட்டு வெளிக்கிட்டுக் கனநாளாச்சுது. இப்பவும் வளவுக்குள்ள வாழைக் குலையள் கிடக்குமென்றே நினைக்கிறியள்? கள்ளர் காடையர் இவ்வளவு நாளேல விட்டு வைச்சிருப்பினமே?

"கோம்பாவில் பகுதி வெறிச்சோடிப் போயிருந்தது. வீடுகளில் எந்தவொரு மனித நடமாட்டத்தையும் காணவில்லை. ஆங்காங்கே எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் தென்னை மரங்கள் மற்றும் மாமரம், பலாமரக்கிளைகள் முறிந்து வீழ்ந்து கிடந்தன. வீதியின் இருமருங்கிலும் உள்ள சில வீடுகளும் சேதத்துக்குள்ளாகியிருப் பதைக் கண்டுகொண்ட அவன் மேற்கொண்டு கைவேலிப்பக்கம் செல்வதற்கு அச்சப்பட்டான்."

அவனது கேள்விக்கு அப்பு பதில் எதுவும் கூறவில்லை. அவருக்கு அது குறித்து சந்தேகமாக இருந்தாலும், ஏதோவொரு நம்பிக்கையில் மனத்துணிவோடு வீட்டைப் பார்க்க வெளிக்கிட்டுவிட்டார்.

"எட பொடியா! நீ எங்க போக



வெளிக்கிட்டனி...?"

"மாத்தளனுக்கு ஏனப்பு?" அவன் திருப்பிக் கேட்டான்.

"இல்லைச்சும்மா கேட்டனான். முதல்ல என்ர என்ர வீட்டுப் பக்கம் போய்ப் பார்த்திட்டு பிறகு வரேக்கை என்ர வீட்டடியால வருவம்..."

"சரியப்பு..." அவனும் அவர் கூறியதற்குச் சம்மதித்துக்கொண்டான்.

புதுக்குடியிருப்பிலிருந்து மாத்தளன் நோக்கிச் செல்லும் பிரதான இரணைப்பாலை வீதியில் தெற்குத்திசை வழியாகச் சென்று கொண்டிருந்த அவர்கள் இருவரும், பின்பு வலது பக்கமாகக் கோம்பாவில் பகுதியை ஊடறுத்துச் செல்லும் துர்க்கா வீதியினூடாகத் திரும்பினார்கள்.

கோம்பாவில் பகுதி வெறிச்சோடிப் போயிருந்தது. வீடுகளில் எந்தவொரு மனித நடமாட்டத்தையும் காணவில்லை. ஆங்காங்கே எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் தென்னை மரங்கள் மற்றும் மாமரம், பலாமரக்கிளைகள் முறிந்து வீழ்ந்து கிடந்தன. வீதியின் இருமருங்கிலும் உள்ள சில வீடுகளும் சேதத்துக்குள்ளாகியிருப்பதைக் கண்டுகொண்ட அவன் மேற்கொண்டு கைவேலிப்பக்கம் செல்வதற்கு அச்சப்பட்டான்.

"அப்பு! இஞ்சாலை ஷெல்லடி அமளியாத்தான் நடந்திருக்குது. நாங்கள் கொஞ்சம் எட்டத்தில, அதுவும் உள்ளுக்கைத் தள்ளி இருக்கிறதால ஒண்டும் தெரியாமக் கிடக்குது.

அவன் கூறியதை அப்பு தன்னுள் ஏற்றுக்கொண்டதற்கு இசைவாகத் தலையை ஆட்டியபடி... மிதிவண்டியின் மிதிகட்டைகளை



மிதித்தபடி... ஷெல் வீச்சுக்களால் சேதப்பட்டுப் போயிருக்கும் வீடுகளையும், மரங்களையும் பார்த்தபடி சென்றுகொண்டிருந்தான்.

துர்க்கா வீதியில் காட்டாமணக்குப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் வீதிச் சந்தியையும் தாண்டி... அப்பால் சென்றபோது, எதிரே ஒரு மனித உருவம் நடந்து வருவது கண்டு அவனுக்கு மனதில் இருந்த அச்சம் சற்று அகன்றது போல் இருந்தது.

சுடுகாடு: இடுகாட்டில் நிலவும் அமைதியைவிட, மிகுந்த அச்சம் தரும் மௌனம் குடிகொண்ட அந்த இடத்தில் எதிரே வந்த மனித உருவம் ஒரு பெண் என்பதைக் கண்டதும், அவனும்-அப்புவும் அதிர்ந்தே போனார்கள். சந்தேகப் பார்வைகளோடு ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

எதிரே வரும் பெண் தன் இரு கைகளால் தலையில் அடித்துக் குளறுவதும், சற்றுத் தூரம் ஓடி-வருவதும், பின்பு பின்நோக்கி ஓடிப்போவதுமாக... அவளது செயற்பாடுகள் அமை-வதைக் கண்ட அவர்கள் இருவரும் இன்னும் அதிகமாகக் குழம்பியபடியே போனார்கள்.

"ஐயோ.... என்ர ஐயோ... என்ர புருஷன் எங்க... புள்ளையள் எங்க... ஒருக்கா அதுகளின் முகத்தைக் காட்டுங்கோ. ஐயோ... என்ர. ஐயோ..."

அந்தப் பெண் அவர்கள் இருவரையும் கண்ட நிலையில்.... குளறி அழுதபடி... அவர்களை நோக்கி ஆவேசமாக ஓடிவந்தாள்.

அடுத்த கணம்.

அவர்கள் இருவரும் எதிர்பார்க்காத சம்பவம் ஒன்று அங்கே நிகழ்ந்தது.

**அவலம் தொடரும்....**



# அன்பாயிருங்கள்!

பாப்பா முரசு சிறுகதை



**குளக்கரையில்** நின்றிருந்த புளியமரத்தில், ஐந்து குஞ்சுகளோடு காகம் ஒன்று வசித்து வந்தது. குஞ்சுகளுக்கு இரை கொடுத்துவிட்டு இளைப்பாறிக் கொண்டிருந்த காகம், குளத்துக்குள் குளித்துக் கொண்டிருந்த எருமை மாட்டைப் பார்த்தது.

"என்ன எருமையாரே! நான் இரைதேடச் செல்லும் முன்பே உள்ளே போனீர். இன்றும் குளியல் முடியவில்லையா?" என்று கேட்டது.

"இப்படி தண்ணீருக்குள் கிடப்பது எவ்வளவு சுகமாக இருக்கிறது தெரியுமா!" என்று சந்தோசம் பொங்க சொன்னது எருமை.

"எப்போதுதான் வெளியே வருவீர்?"

"அது எனக்கே தெரி யாது" வாய்விட்டு சிரித்தது எருமை. அப்போது புற்களை மேய்ந்து கொண்டிருந்த கழுதை கனைக்கவும், காகத்தின் பார்வை அங்கே சென்றது.

"என்ன தோழரே... இன்று பொதி சுமக்கப் போகவில்லையா?" என்று வினவியது.

"இன்று என் எஜமானர் வெளியூர் சென்றிருக்கிறார். அதனால் பொதி சுமக்கும் வேலை இல்லை."

"அப்படியானால் தினம் தினம் அவர் வெளியூர் போகவேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்" என்று காகம் சொல்லவும்...

'அம்மா' என்று காக்கையின் குஞ்சுகள் அழைத்தன. குஞ்சுகளுக்கு தன் தாய் இனபேதம் பார்க்காமல் எல்லோரிடமும் சகஜமாகப் பேசுவது பிடிக்கவில்லை. காகத்தின் காதில், அதன் குஞ்சுகளின் அழைப்பு விழுந்ததாகவே தெரியவில்லை. 'சரசர' வென்று மரத்தின் மீது ஏறிக் கொண்டிருந்த அணிலிடம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தது. பறவைகளும், விலங்குகளும் காகத்திடம் பிரியமாய் பேசும். காகத்தின் மேல் அவற்றிற்கு நல்ல மதிப்பு இருந்தது. தாயின் இந்த சுபாவத்திற்கு குஞ்சுகள் எத்தனையோ முறை தங்கள் எதிர்ப்பை தெரிவித்துவிட்டன.

"எல்லோரிடமும் இனிமையாகப் பழகுவது என் இயல்பு. இது என் தாய் எனக்கு போதித்தது. நீங்களும் அதைப் பின்பற்ற வேண்டும். அனைவரிடமும் அன்பாய் இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது.

"நம் இனத்தில் யாரும் மற்ற இனத்தோடு நட்பு பாராட்டுவதில்லை. நீங்களும் அவர்களைப் போல இருக்க வேண்டும். உங்களுடைய இந்த குணம் எங்களுக்கு மட்டுமல்ல, மற்ற காகங்களுக்கும் பிடிக்கவில்லை தெரியுமா? தயவுசெய்து உங்கள் குணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சின.

"அன்பு எல்லாவற்றையும் கடந்து நிற்பது. அது எந்த பேதமும் பார்ப்பதில்லை. நீங்களும் எவ்வித வேறுபாடும் பார்க்காமல் எல்லோரிடமும் அன்பாய் இருக்க வேண்டும். இதுதான் இந்தத் தாயின் ஆசை."

"அது எங்களால் ஒரு போதும் முடியாது."

"காலம்தான் உங்களை மாற்றவேண்டும்" என்று முணு முணுத்தபடியே அவ்விடத்தை விட்டு நகர்ந்தது காகம்.

* * *

ஒருநாள்...

காற்று பலமாக வீசியது. காற்றின் வேகத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாமல் புளியமரத்தின் கிளை 'சட சட' வென்று முறிந்து குளத்திற்குள் விழுந்தது. அந்தக் கிளையில் தான் காகத்தின் கூடு இருந்தது. அதிலிருந்த குஞ்சுகளுக்கு இன்னும் இறக்கை முளைக்காததால் அவற்றால் பறக்க முடியவில்லை. நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த குஞ்சுகள், குளத்துக்குள் இருந்த எருமை மாட்டைப் பார்த்து, "எருமை தாத்தா, எங்களைக் காப்பாற்றுங்களேன்" என்று கதறின.

"எதற்கு காப்பாற்ற வேண்டும், எங்களை கொத்தி இம்சிக்கவா?"

"எங்கள் அம்மா உங்களைக் கொத்தவா செய்கிறார்கள்? எவ்வளவு அன்பாகப் பேசுகிறார்கள்..."

திடுக்கிட்ட எருமை, வேகவேகமாக குஞ்சுகளை மீட்டு கரைக்கு கொண்டு வந்தது.

"தாயின் இனிமையான குணம்தான் தங்களை பேராபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறது. தாயைப் போல தாங்களும் இன பேதம் பார்க்காமல் எல்லோரிடமும் இனிமையாய்ப் பழகவேண்டும்" என்று தீர்மானம் செய்தன காக்கைக் குஞ்சுகள்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.04.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.884

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 882

**பரிசுக்குரியவர்:** சி.லதாங்கி,யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கரவெட்டி.

பாராட்டுக்குரியவர்கள்

01. ப.மிதுலன்,மடத்தடி, பருத்தித்துறை.
02. உமர்ஷுக்ரி, கோல்டன்றூட், கலகெதரமடிகே.
03. அ.சாளினி,நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
04. கு.ரவிசங்கர், வாழைச்சேனை, மட்டக்களப்பு.
06. எஸ்.அருணோதயன், இலுப்பைக்குளம், வவுனியா.
07.எச்.கிருஷானன், கட்டைபறிச்சான், மூதூர்.
08. எம்.அனித்தா, பேசாலை, தாழ்வுபாடு, மன்னார்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

ஜான்மில்டன்

## வாரம் ஒரு திருக்குறள்



அன்புடைமை

**அன்பிற்கும் உண்டோ**
**அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கண்**
**நீர் பூசல் தரும்.**

அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

குறள்:71

# கண்ணாடி



ஒரு உருவத்தை ஏறக்குறைய நூறு சதவீதம் எதிரொளிக்கக் கூடிய பொருளை 'ஆடி' அல்லது 'கண்ணாடி' என்பார்கள். வீட்டு உபயோகத்திற்குப் பயன்படும் கண்ணாடிகள், சமதளமானவை. சாதாரண கண்ணாடியின் பின்புறத்தில் வெள்ளி உலோகத்தை மெல்லிய படலமாக படியச்செய்து, முகம் பார்க்கும் கண்ணாடியாக மாற்றுகிறார்கள். பேரூந்து, மோட்டார் சைக்கிள்களில் பயன் படுத்தப்படுபவை 'குவி ஆடிகள்' எனப்படும். இவை, அதிகப் பரப்பிலுள்ள பொருள்களை சிறிய பிம்பங்களாகக் காட்டும் இயல்புடையன. கண்ணாடியில் வெள்ளியை மெல்லிய பூச்சாகப் படியவைக்கும் முறையைக் கண்டுபிடித்தவர், வான் லைபிக்.

# கலங்கரை விளக்கம்



கப்பல் மாலுமிகளுக்கு நிலம் எவ்வளவு அருகில் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கவும், கடற்கரைக்கு அருகில் உள்ள பாறைகள் மற்றும் மணல் மேடுகள் முதலிய அபாயங்களைப் பற்றி முன்னெச்சரிக்கை செய்வதற்கும் கலங்கரை விளக்கங்கள் பயன்படுகின்றன. தற்போதுள்ள நவீன கலங்கரை விளக்கங்கள் மூலம், வானிலை மோசமாக உள்ள சமயங்களிலும் செயல்படத்தக்க ரேடியோ அலைபரப்பிகளைக் கொண்டு மாலுமிகளுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்.

பொதுவாக, தாங்கள் நிலப்பரப்பில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறோம் என்பதை மாலுமிகள் அறிந்து கொள்ளவே கலங்கரை விளக்கங்கள் உதவுகின்றன. இவற்றில் ஒளி உண்டாக்க மான்ட்டில் விளக்கையோ அல்லது அசிட்டிலீன் வாயு நிரப்பப்பட்ட மின் இழை விளக்குகளையோ பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு கலங்கரை விளக்கத்திற்கும் ஏற்ப சுழற்சி வேகமும், ஒளி உமிழும் இடைவெளியும் மாறுபட்டுக் காணப்படும்.

## தகவல் துணுக்குகள்...




# இடது கைப்பழக்கம்

எல்லா மனிதர்களுமே பொதுவாக வலது கைபழக்கம் கொண்டவர்கள் தான். ஒரு சிலர் மட்டும் இடது கை பழக்கம் கொண்டவர்களாக இருப்பார்கள். நமது உடலின் வலப்பாகத்தை இடதுபக்க மூளையும், இடப்பாகத்தை வலதுபக்க மூளையும் கட்டுப்படுத்துகிறது உங்களுக்குத் தெரியும். அப்படி நமது இடதுபக்க மூளை நரம்புகள் முதிர்ச்சி பெற்றுக் காணப்படுவதால் தான். நாம் வலது கையை அதிகமாக பயன்படுத்துறோம். ஒருசிலருக்கு, இடதுபக்கத்தைவிட வலது பக்க மூளை நன்கு வளர்ச்சி பெற்றிருக்கும். இப்படிப்பட்டவர்கள் தான் இடது கையை அதிகமாக பயன்படுத்துவார்கள். கை மட்டுமல்லாமல் கால், காது போன்ற எல்லா உறுப்புகளிலுமே இடது பக்கத்தைத்தான் அதிகமாக உபயோகிப்பார்கள். இதுமாதிரியான பழக்கத்தைக் கொண்ட சில குழந்தைகளின் பெற்றோர்கள், தங்களுடைய குழந்தையை வலது கை பழக்கத்துக்கு மாற்ற பலவந்தப்படுத்துவார்கள். இதனால் தன்னம்பிக்கை இழத்தல், திக்குவாய் போன்ற பிரச்சினைகள் குழந்தைகளுக்கு உண்டாகலாம். உங்கள் குழந்தை இடது கையால் எழுதினால், பயப்படாதீர்கள்! ஏனெனில் இடது கை பழக்கம் கொண்டவர்கள் அறிவாளிகளாக இருப்பார்கள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

## நீங்களும் ஓவியராகலாம்

'அ' என்ற எழுத்தில் இருந்து மரத்துடன் சேர்ந்த குருவியின் படத்தை வரைந்து பாருங்கள்.



# தெரிந்து கொள்ளுங்கள்

- ❖மனிதனைப் போலவே நடக்கக் கூடிய பறவை,பென்குயின்.
- ❖புறாப் பந்தயம் தோன்றிய இடம், பெல்ஜியம்.
- ❖ஒலிம்பிக் போட்டியில் கபடி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு, 1952.
- ❖ஒரு காலத்தில் மாமன்னர்கள் மட்டுமே சாப்பிடும் பழமாக அத்தி இருந்தது.
- ❖துருப்பிடிக்கும் போது இரும்பின் எடை கூடுகிறது.
- ❖பச்சையம் இல்லாத தாவரம், காளான்.
- ❖திரையரங்கு இல்லாத நாடு, பூட்டான்.
- ❖எரிமலை இல்லாத கண்டம், ஆஸ்திரேலியா.
- ❖தலை இல்லாத உயிரினம், நண்டு.
- ❖அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாஸா தொடங்கப்பட்ட ஆண்டு, 1958.
- ❖குளோரின் என்பது கிரேக்க மொழி வார்த்தையாகும்.
- ❖குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் வாயு, அமோனியா.


**ஆயிரமாயிரம்** நிகழ்வுகளும், இடங்களும், உணர்வுகளும் என் மூளையில் எங்கே எவ்விதம் பதிவாகியிருக்கிறது? நினைவு என்பது பற்றி நோக்குவோம்.

லாங்குயன் லின் மற்றும் ஜோ டிரெய்ன் என்ற இரு நரம்பியல் வல்லுநர்கள், அண்மையில் வெளியிட்டிருக்கும் ஆராய்ச்சி முடிவுகள் மூளையில் எப்படி நினைவுகள் பதிவாகின்றன என்பதை ஓரளவுக்கு விளக்குவதாக உள்ளது. நரம்புக்கூட்டத்தின் சமநேர மின்துடிப்பே நினைவுகள். நேரடியாக மின் முனைகளை எலிகளின் மூளையில் பதித்து, அவை இயல்பாக நடமாடும்போதே நினைவுகள் எப்படி பதிகின்றன என்பதை நவீன கருவிகள் கொண்டு ஆராய்ந்தனர். தக்க புள்ளியியல் கணக்குகளைப் பயன்படுத்தி தகவல்களை தொகுத்திருக்கின்றன. நரம்பு செல்களின் வழியாகப் பாயும் மின்சார ஓட்டம்தான் நினைவுகள் என்பதை பொதுவாக எல்லோருமே ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த ஆய்வின்படி ஒரே சமயத்தில் துடித்து செயல்படும் நரம்பு செல் கூட்டங்களே குறிப்பிட்ட நினைவுகளுக்குக் காரணம். அவற்றில்தான் நினைவுகள் சேமிக்கப்பட்டிருக்கின்றன என்பது முடிவு.

உணர்வுகள்-நினைவுகள்-பயிற்சிகள் ஆகியவை அனைத்தும் வெவ்வேறு நரம்புசெல் கூட்டங்களாக சேமிக்கப்பட்டுள்ளன என்பது நிரூபணமாகியுள்ளது. எப்படி நரம்புக்கூட்டத்தில் நினைவுகள் பதிகின்றன என்பதை இன்னமும் தெளிவாகப் புரிந்துகொண்டால், கைகளைப் பயன்படுத்தாமல் எண்ணங்கள் மூலமாக கருவிகளைக் கட்டுப்படுத்துல், தானாகச் சிந்தித்து செயலாற்றும் ரோபாட்டுகளை (உருபிகள்) உருவாக்குவது, மனத்தில் உள்ளதை குறியீடுகளாக மாற்றி கணினியில் இறக்கி சேமித்து வைத்துக்கொள்வது போன்ற தொழில் நுட்பங்கள் வளரும்.

பாஸ்ட்டன் பல்கலை விஞ்ஞானிகள் ஒரு பரிசோதனையில் இரண்டுவித எலிகளைப் பயன்படுத்தினார்கள். ஒன்று மரபியல் மாற்றத்தின் மூலம்

# நினைவுகள் மூளையில் எப்படி பதிகின்றன?




கெட்டிக்கார எலியாக மாற்றப்பட்டது. "டூகி" என்பது அதன் பெயர். இதற்கு நேர் மாறாக படுமந்த புத்தியுடைய எலியையும் உருவாக்கி இருக்கிறார்கள். இரண்டையும் வைத்துக்கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர். வாழ்நாளில் எத்தனையோ கோடி காட்சிகளைப் பார்க்கிறோம். பேச்சுகளை கேட்கிறோம். ஆயினும் திடுக்கிடும் நிகழ்ச்சிகள் மற்றும் உள்ளத்தைத் தொடும் சம்பவங்கள் மட்டுமே நினைவில் ஆழமாகப் பதிகின்றன.

மூளையின் மேற்புறமாக உள்ள கார்டெக்ஸ் பகுதியை விலக்கிவிட்டு உள்ளே பார்த்தால் நடுவில் கொம்பு போன்று உறுப்புகள் இரண்டு பக்கத்திற்கு ஒன்றாக இருப்பதைக் காணலாம். இதன் பெயர் ஹிப்போகேம்ப்பஸ். இதில்தான் உணர்வுபூர்வமான நினைவுகள் பதிவாகின்றன. நமது நரம்பியல் நண்பர்கள் இந்தப் பகுதியில் தேர்வுசெய்யப்பட்ட 200 தனித்தனி நரம்பு செல்களில் மெல்லிய மின் முனைகளைச் செருகி அவற்றில் ஏற்படும் மின் அழுத்த வேறுபாடுகளைத் தொடர்ந்து கவனித்தனர்.

எலிகளின் மூளை மிகச்சிறியது, வேர்க்கடலை பருப்பு அளவுதான் இருக்கும். அதில் ஹிப்போகேம்ப்பஸ் எத்தனை சிறிதாக இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். அதிலுள்ள 200 செல்களை தேர்வுசெய்து அவற்றினுள் மெல்லிய உலோக இழைகளை செலுத்துவது என்பது எத்தனை செயற்கரிய செயல் என்றும் எண்ணிப் பாருங்கள். முதன் முதலில் ஒரு அனுபவம் ஏற்படும்போது எந்தெந்த நரம்புசெல் தொகுப்புகள் எப்படி செயல்பட்டனவோ அதே தொகுப்பானது மீண்டும் அந்த சம்பவம் நடைபெறும் போது முன் நடந்துகொண்டது போலவே துடித்தன. மேலும் மறுபடி மறுபடி எப்போதெல்லாம் அந்த அனுபவம் மனத்தில் நினைவுகூறப்படுகிறதோ அப்போதெல்லாமும்கூட அதே நரம்புக்கூட்டம் அதே விதத்தில் செயல்பட்டன. இதிலிருந்து நினைவுகள் யாவும் தனித்தனி நரம்புக்கூட்டங்களின் துடிப்புகளாகச் சேமிக்கப்படுகின்றன என்பது உறுதியாகிறது.

மூளையில் கோடி கோடியாக நரம்பு செல்கள் இருந்தாலும் அவை தனித்தனி குழுக்களாகவே செயல்படுகின்றன. இக்குழுக்களை 'கிளிக்' (Clique) என்று அழைக்கிறார்கள். அனுபவம் ஒவ்வொன்றும் மூளை யில் பதியும்போதும் மீண்டும் அதை நினைவுகூரும் போதும் அதற்கான குழுவில் உள்ள செல்கள் மட்டும் ஒன்று சேர்ந்து கரஒலி எழுப்புவதுபோல் சுடுகின்றன. தனித்தனி நினைவுக்கும் அதற்கான செல் குழாத்திற்கும் காரண காரிய உறவு உள்ளது என்பதில் இப்போது எந்த சந்தேகமுமில்லை.

ஹிப்போக்கேம்ப்பஸ் பகுதிக்கு-மூளையின் பல்வேறு பகுதியிலிருந்தும் கண் காது முதலான புலன்களிலிருந்தும் தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். உடனே ஹிப்போகேம்ப்பஸானது பயம், கோபம், பாசம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் உறுப்பான அமிக்டலா (Amygdala) என்ற உறுப்புடன் தொடர்பு கொள்ளும். இதன் மூலம் நாம் எதைப் பார்த்தாலும், கேட்டாலும், சுவைத்தாலும், முகர்ந்தாலும் அல்லது ஸ்பரிசத்தால் உணர்ந்தாலும் உடனே அவை வெறும் தகவல்களாக அறியப்படாமல் தக்க உணர்வுகளுடன் அறியப்படுகின்றன. சில வாசனைகள் மனதுக்கு நிம்மதி தருவதும், சில வாசனைகள் பசி உணர்வைத் தருவதும் சில அருவெறுப்பு உணர்வைத் தருவதும் இதனால்தான். இப்படி நவரச உணர்வுகளின் சாயம் ஏற்றப்பட்ட பிறகே புலன் அறிவுகள் மூளையில் நினைவுகளாகப் பதிகின்றன. நினைவு என்பது நரம்பு செல்குழுக்களின் செயல்பாடுகளே என்பதில் சந்தேகமில்லை. நரம்புக் குழுக்கள் உடனுக்குடன், அந்தந்தக் கணமே மூளையில் அமைக்கப்படுவதுதான் அதிசயம்.

நன்றி இணையம்




ல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலை காரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

ஒரு மூட்டை தூக்குவதைப்போல என்னைத் தூக்கித் தனது தோளில் போட்டுக்கொண்டான்.

நான் கால்களை உதறிக்கொண்டு அவன் கழுத்தை என் கைகளால் பிடித்துக்கொண்டேன். "விடடா என்னை," என்று கத்தினேன்.

நான் கழுத்தைப் பிடித்துக்கொண்டதால் அவன் திமிறினான். அப்படியே குனிந்து அவன் மூக்கைப் பொத்தியபடியே கெட்ட வார்த்தைகளால் திட்டினான்.

என்ன ஆனாலும் பரவாயில்லை இந்த மிருகங்களிடம் பணிந்துபோவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன்.

என்னைப் பிடிக்க வந்த ஒருவனை தள்ளிவிட்டு ஓடத் தொடங்கினேன். "ஓடுகிறாளடா!" என்று கத்திக்கொண்டே என்னைத் துரத்தி வந்தார்கள்.

"சுடுங்களடா அவளை!" என்று யாரோ கத்தினார்கள். "வேண்டாம் பிடித்துவிடலாம்!" என்று பதிலுக்கு யாரோ குரல் கொடுத்தார்கள். எந்தத் திசையில் ஓடுகிறேன் என்று தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தேன்.

காலடியில் ஏதோ தடுக்கியது. அப்படியே குப்புற விழுந்தேன். "ஐயோ தெய்வமே இப்படி இடறிவிட்டு விட்டாயே!"

"அமுக்குங்கடா அவளை!" என்று ஒருவன் சொல்ல, என்னைத் தூக்கினார்கள். கைகளிலும், கால்களிலும் பிடித்தபடி, பிணத்தைத் தூக்கிப் போவதுபோல தூக்கிக் கொண்டுபோனார்கள்.

ஒரு மரத்தின் கீழே என்னைத் தொப்பென்று போட்டார்கள். நான் எழுந்துவிட்டாலும் என்று ஒருவன் என்மேல் ஏறி இருந்து கொண்டான்.

கை முஷ்டியை மடக்கி என் நெற்றியில் ஓங்கிக் குத்தினான். தலையெல்லாம் சுழலுவது மாதிரி இருந்தது. மேலே மரக்கிளைகள் எல்லாம் முறிந்து என்மேல் விழுவது போல இருந்தது. என்மேலே இருந்தவன் மங்கலாகத் தெரிந்தான்.

என் கழுத்தை அவன் திருகத் தொடங்கினான். அவன் கழுத்தை நெருக்க வேண்டும் போல இருந்தது எனக்கு. ஆனால் கைகளை அசைக்க முடியவில்லை.



"நான் கண்களைத் திறந்தாக வேண்டும் துர்க்கையம்மா... என் தெய்வமே என் சக்தியைத் திருப்பிக்கொடு. என் பலத்தை ஊட்டிவிடு தாயே! நீயும் ஒரு பெண்" என் மனம் ஓலமிட்டுக்கொண்டிருந்தது.

அதே குரல், நான் விழுந்தபோதெல்லாம் எனக்குள் தைரியம் கொடுத்து என்னை எழுப்பிவிட்ட அதே குரல் இப்போது எனக்குள் கேட்டது.

"பூலான் எழு... முடியும்... முடியும் எழு... பூலான் எழு..."

நம்பவே முடியாத மாற்றம் அது. கடவுளின் சக்தி என்றால் சிலர் கேலி செய்வார்கள். தன்னம்பிக்கைதான் அது. மனோபலத்தின் எதிரொலி என்றும் சொல்வார்கள். எதுவாக இருந்தாலும் நான் துவண்ட போதெல்லாம் தூக்கிவிட்டது அந்தக் குரல்தான். என் மனக்கண்ணில் தெரிந்தது அந்த வெள்ளை உடைத் தேவதைதான்.

என் பலம் முழுவதும் திரும்பி வந்துவிட்டதாக உணர்ந்தேன். என் கண்கள் இப்போது தெளிந்துகொள்ளத் தொடங்கின.

அதேநேரம் அந்த ஓசை கேட்டது. அது துப்பாக்கியின் ஓசைதான். அருகே கேட்டது. மிக மிக அருகில்.

அந்த ஓசையைக் கேட்டதும் என்மேல் இருந்தவன் பயத்துடன் எழுவதைப் பார்த்தேன். என் உடலெங்கும் வருடிக்கொண்டு என்னைச் சுற்றி இருந்தவர்கள் விருட்டென்று எழுந்து கொண்டதைப் பார்த்தேன்.

அதேவேகத்தில் நானும் எழுந்துகொண்டேன். வெடியோசை கேட்ட திசையில் இருந்து வந்துகொண்டிருந்தது மல்லா-விக்ரம் மல்லா!

அவன் கையில் துப்பாக்கி இருந்தது.

அவன்தான் சுட்டிருக்க வேண்டும். யாரைச் சுட்டான் என்று சுற்றுமுற்றும் பார்த்தேன்.

யாரும் விழுந்ததாகவோ, காயம்பட்டதாகவோ தெரியவில்லை. அவன் வானத்தை நோக்கித்தான் சுட்டான் என்று பின்னர்தான் அறிந்தேன்.

விக்ரம் மல்லாவுடன் ஐந்து ஆறுபேர் கூட வந்தார்கள். அவர்களும் துப்பாக்கிகளுடன் வந்தனர்.

எனக்கு அம்மா ராஜாராணிக் கதைகள் சொல்லியிருக்கிறாள். ராஜா கம்பீரமாக நடந்து வருவானாம். கையில் பொல்லாத வாள் வைத்திருப்பானாம். எதிரிகள் எல்லாம் ராஜாவைக் கண்டால் கிடுகிடுவென்று நடுங்கிப்போவர்களாம். சண்டைக்கு வருபவர்களை சதக் சதக்கென ராஜா வெட்டி வெட்டிச் சாய்த்துவிடுவானாம்.

விக்ரம் மல்லா நடந்துவருவதைப் பார்க்க அந்த ராஜாதான் நடந்துவருவது போல இருந்தது. கண்கள் நிறைய நெஞ்சு நிறைய மல்லாவைப் பார்த்தேன். பார்த்தேன் பார்த்துக்கொண்டே இருந்தேன். உடம்பெல்லாம் சில்லிட்டுக் குளிர்வது போல இருந்தது.

"வா என்னுடன்!" என்றான். பிடறியில் பிடித்துத் தள்ளிவிட்டது போல, மனம் விக்ரம் மல்லாவை நோக்கி ஓட எத்தனிக்க ஒருவன் என் கரத்தைப் பிடித்துக்கொண்டான்.

இவன் யார் பிடிப்பதற்கு? என் மல்லா இருக்கும் போது எனக்கென்ன பயம்? கையைப் பிடித்தவனின் கன்னத்தில் விட்டேன் ஒரு அறை. "விடடா கையை நாயே!"

அவன் பிடியை விடாமல். "என்னையாடி அறைந்தாய்?" என்று கேட்டபடியே கையை ஓங்க, "விடு அவளை" என்ற கண்டிப்பான உத்தரவு வந்தது விக்ரம்மல்லாவிடம் இருந்து.

(திருப்பங்கள் தொடரும்...)

# ரஜினிக்காக ஏங்குகிறார் சாய்னா!

பிரபல பாட்மின்டன் வீராங்கனை சாய்னா நெவால். ஹரியா-ணாவைச் சேர்ந்தவர். இப்போது நிறைய விளம்பரங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். சினிமாவில் நடிக்கும் ஆர்வம் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். "உண்மையாகவே சினிமாவில் நடிக்க ஆர்வம்தான். ஆனால் சும்மா வந்தோம் போனோம் என்று இருக்கக் கூடாது. சூப்பர் ஸ்டார் ரஜினியின் ஜோடியாக நடிக்க வாய்ப்பு கிடைக்குமா சொல்லுங்கள்... இப்போதே, ஒப்பந்தத்தில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட நான் ரெடி. அவர் படத்தில் நடிக்க எந்தப் பெண்தான் மாட்டேன் என்பாள்! அவரைப் போன்ற சாதனையாளர் படத்தில் நடித்தால்தான் நமக்குப் பெருமை. இந்த வயதிலும் அவர் தோற்றம், சுறுசுறுப்பு என்னை பிரமிக்க வைக்கிறது. அவரது மாஸ் படங்களை பார்க்கும போது, நமக்குள் புதிய உற்சாகம் வந்துவிடுகிறது," என்றார்.



# பொறுமை

அதர்வா- அமலாபால் இணை 'முப்பொழுதும் உன் கற்பனை முதல் ஷெட்யூல் பெங்களூரு சென்னைக்கு திரும்பிவிட்டது. இயக்குனருக்கு தான் நெருக்க சொல்வதற்கு முன் இயக்குனர் குறிப்பு, இந்த படத்தின் இயக்குனர் கணேஷ் பல படங்களில் ஸ்டில் போட்டோ கிராபராக பணியாற்றியவர். எப்படியோ சிம்புவின் நட்பு கிடைத்தது. அவருக்கு எல்லாமுமாக இருந்து குஷிபடுத்திய இவர் அப்படியே சிம்புவின் படங்களில் உதவி இயக்குனராகவும் சேர்ந்துவிட்டார். 'விண்ணை தாண்டி வருவாயா' ஷூட்டிங் நேரத்தில் இப்படத்தின் தயாரிப்பாளரிடம் ஒரு கதையை சொல்லி தனக்கு வாய்ப்பையும் தேடிக் கொண்டார். சிலேட்டுக்கே அல்லாடுகிறவருக்கு லேப்-டாப் கிடைத்த மாதிரிதான் இந்த பட வாய்ப்பும் கிடைத்தது அவருக்கு. ஆனால் ஷூட்டிங் நேரத்தில் தனது டைரக்டர் அந்தஸ்தை உயர்த்தி பிடிக்க நினைத்து யூனிட்டையே பாடாய் படுத்திவிட்டாராம். சிம்புவின் அசிஸ்டென்ட் அல்லவா? அவர் ஷூட்டிங்கில்

# எஸ்.பி.பி.க்கும் பத்ம பூஷண் விருது

பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிர மணியத்துக்கு பத்ம புஷண் விருதை ஜனாதிபதி பிரதீபா பட்டீல் வழங்கினார். ஜனாதிபதி மாளிகையில் அசோகா மண்டபத்தில், பத்ம விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஜனாதிபதி பிரதீபா பட்டீல் இந்த விருதுகளை வழங்கினார். துணை ஜனாதிபதி அமீது அன்சாரி, பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மத்திய மந்திரிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டின் இரண்டாவது உயரிய விருதான பத்ம விபூ'ண் விருதை, முன்னாள் கவர்னர் ஏ.ஆ.கித்வாய், இலக்கியவாதி ஓ.என்.வி.குருப், வாஜ்பாய் அரசியல் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரஜே' மிஸ்ரா, மூத்த அறிஞர் கபிலா வாத்சயன் ஆகியோருக்கு ஜனாதி-பதி வழங்கினார்.பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், இந்தி நடிகை வகீதா ரஹ்மான், மூத்த விஞ்ஞானி எஸ்.ராமச்சந்திரன், இசையமைப்பாளர் கய்யாம் உள்ளிட்டோர் பத்ம புஷண் விருது பெற்றனர்.

# ஸ்ரேயாவை யோசிக்க வைத்த சிறுவன்


தனது சமூகசேவைக்கு பிள்ளையார் சுழி போட்ட நிகழ்வு பற்றி உருகுகிறார் ஸ்ரேயா. மும்பை கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது பஸ்சில் செல்வேன்.தூரத்திலிருந்து பார்த்தபோது நான் செல்லவேண்டிய பஸ்தான் வருகிறது என்று எண்ணி வேறு பஸ்சில் ஏறிவிட்டேன். அந்த பஸ் ஓர் இடத்தில் நின்றது. திடீரென்று இறங்கிய எனக்கு வழி தெரியவில்லை. அருகே இருந்த பார்வையற்றோர் பள்ளியில் சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்த சிறுவனிடம், வழி கேட்டேன். நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்? என்றான். அப்போது பஸ் மாறி ஏறியதை சொன்னேன். உடனே அவன், பார்வையில்லாத நான், கிரிக்கெட் பந்து எந்த திசையில் வருகிறது என்பதை சரியாக கணித்து அடிக்கிறேன். ஆனால் நீங்கள் எப்படி பஸ் மாறி ஏறினீர்கள் என்று கேட்டான். அது என்னை யோசிக்க வைத்தது. அதே நேரம், பார்வையற்றோருக்கு உதவ வேண்டும் என எண்ணமும் ஏற்பட்டது. அதனால்தான் இப்போது சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

# கார்த்தியின் காகித கப்பல்

'சிறுத்தை' படத்தை தொடர்ந்து நடிகர் கார்த்தி 'காகித கப்பல்' என்ற படத்தில் நடிக்க இருக்கிறார். இப்படத்தை டைரக்டர் ராஜேஷ் இயக்குகிறார். இப்படத்தில் முன்னணி நாயகி ஒருவர் நடிக்க இருக்கிறார். தற்போது ராஜேஷ், தயாரிப்பாளரும், முதல்வர் கருணாநிதியின் பேரனு-மான உதயநிதி ஸ்டாலினை வைத்து 'ஒரு கல் ஒரு கண்ணாடி' என்ற படத்தை இயக்கி வருகிறார்.இப்படத்தை முடித்த பின்னர் 'காகித கப்பல்' படத்தை தொடங்குகிறார். விரைவில் இதுதொடர்பான அறிவிப்பு வெளியாக இருக்கிறது.

# அப்துல்கலாமின் பிரதிநிதி விவேக்

பெங்களூருவில் இயங்கி வரும் மிகப்பெரிய அறிவியல் கழகத்தின் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறார் நடிகர் விவேக். நடிகர் நடிகைகளை கல்லூரி விழாக்களுக்கு அழைப்பதெல்லாம் சமுதாயத்தில் அன்றாடம் நடைபெறுகிற கூத்து தானே என்று அலட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாது இந்த வி'யத்தை. ஏன் தெரியுமா? 'இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆ.்.ப் சயின்ஸ்' என்ற கல்லூரியின் நிர்வாகிகள் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை நேரில் சந்தித்தார்கள். 'என்னால் என்ன செய்ய முடியும்' என்ற தலைப்பில் நீங்கள் வந்து பேச வேண்டும் என்று அழைத்தார்கள். தற்போதுள்ள சூழ்நிலையில் என்னால் வர இயலாது. ஆனால் எனக்கு பதிலாக நீங்கள் வேறொரு-வரை அழைத்துச் செல்லுங்கள். நான் சொல்ல நினைத்த கருத்துக்களை அவர் சொல்வார் என்றாராம் கலாம். வந்தவர்கள் கலாமே சொல்கிறாரே சரியாகதான் இருக்கும் என்று சம்மதிக்க, அவரால் அடையாளம் காட்டப்பட்டவர் தான் விவேக்.



## ...ருமை இழந்தார் தயாரிப்பாளர்


...லாபால் இணைந்து நடிக்கும்
...டன் கற்பனைகள்' படத்தின்
... பெங்களூருவில் முடிந்து யூனிட்
...நம்பிவிட்டது. ஆனால் படத்தின்
...தான் நெருக்கடியாம். அதை
...ன் இயக்குனர் பற்றி ஒரு சிறு
...டத்தின்
...ஷ்
...ஸ்டில்
...ராக
...ா
...து.
... இருந்து
...அப்படியே
...வும்
...ின்
...ரு
...தனக்கு
...கே
...லெப்-டாப்
...ந்த பட
...வருக்கு.
...ல் தனது
...த்தி
... பாடாய்
...ட்டிங்கில்

எப்படி நடந்து கொள்வாரோ அந்தளவுக்கு அலட்டல் என்கிறார்கள். பொறுத்து பொறுத்து பார்த்த தயாரிப்பு வட்டாரம் இப்போது டைரக்டரையே மாற்றிவிட முடிவெடுத்திருக்கிறதாம். படத்தில் திருப்பம் வரலாம். இப்படி படம் எடுப்பவருக்கே திருப்பம் வரலாமோ?

## 'டேட்டிங்' வரை நட்பா...?

தெலுங்கு நடிகர் ராணாவும் ஸ்ரேயாவும் காதலிப்பதாக கிசு கிசுக்கள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. இருவரும் வெளிநாடுகளில் சுற்றுவதாகவும் நட்சத்திர ஓட்டல்களில் ஒரே அறையில் தங்குவதாகவும் கூறப்படுகிறது. இந்த காதல் விவகாரம் பற்றி ஸ்ரேயாவிடம் கேட்ட போது, ராணாவை சிறு வயதில் இருந்தே எனக்கு தெரியும். இரு குடும்பத்தினருக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது. ராணாவுக்கும் எனக்கும் இடையே இருப்பது வெறும் நட்புதான். எங்களுக்குள் காதல் இல்லை. என் கவனம் காதல் எல்லாம் சினிமாவில்தான்.

அதுசரி, இருவருக்குமிடையிலான நட்பு, டேட்டிங் வரை செல்லுமா என்பதை ஸ்ரேயா விளங்கப்படுத்தவில்லை. செல்லுமாயின், மேற்கூறப்பட்ட செய்திகளில் தவறு உண்மை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளமுடியுமே..



## ஹாலிவுட்டில் யுவன்

மணிரத்னம் அடுத்து தமிழ், இந்தி என இரண்டு மொழிகளில் இயக்கும் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜாதான் இசையமைக்கிறார் என சொல்லப்படுகிறது. இதனால் யுவன் ஷங்கர் ராஜா இந்தி உலகத்துக்கு எண்ட்ரி கொடுகிறார் என்றே சொல்லலாம்.அதுமட்டும் இல்லாது ஒரு ஹாலிவுட் படத்துக்கும் இசையமைக்கும் வாய்ப்பு யுவன் ஷங்கர் ராஜாவுக்கு அமைந்திருகிறது.

இது பற்றி யுவன் ஷங்கர் ராஜா அவரது டுவிட்டர் இணையதளத்தில் 'கோலிவுட்டை கடந்து பல சுவாரஸ்யமான தகவல்கள் இருக்கிறது. முடிவான பின் இதைப்பற்றி சொல்கிறேன், இந்த வருடம் பெரிய விஷயங்கள் எனக்கான காத்திருக்கிறது.' என்று தெரிவித்துள்ளார்.

இப்போது பாலாவின் அவன் இவன், சிம்பு நடிக்கும் வானம் படங்களின் பின்னணி இசையில் பிஸியாக இருக்கிறார் யுவன்.

## ... சிறுவன்


...ஸ்ரேயா. மும்பை
...ர்த்தபோது நான்
...ல் ஓர் இடத்தில்
...ளியில் சிறுவர்கள்
... உடனே அவன்,
...து அடிக்கிறேன்.
...து. அதே நேரம்,
...து சமூக சேவை

...க்

## சத்யராஜின் விளக்கம்

'சட்டப்படி குற்றம்' படத்திற்கு தடை கோரி ...ம் என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். இது தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது நீதிமன்றம்.

இது ஒரு புறம் இருக்க, ஆளுங்கட்சிக்கு எதிரான படம் இது என்கிற விமர்சனங்கள் எழுந்திருக்கிறது. இந்த நிலையில் சத்யராஜ் என்ன நினைக்கிறார் என்பதை அறிய அவரை தொடர்பு கொண்டோம். ஏனென்றால் அனல் பறக்கும் வசனங்களை பேசி நடித்திருப்பவர் அவர்தானே. புரட்சித் தலைவர் எம்ஜிஆர் முதலமைச்சராக இருக்கும் போதுதான் கலைஞர் வசனத்தில் பாலைவன ரோஜாக்கள் படத்தில் நடித்தேன். அதில் அப்போதிருந்த புரட்சித்தலைவர் அரசுக்கு எதிரான பல விடயங்களை சுருக்கென்று எழுதியிருந்தார் கலைஞர். அதை பார்த்துவிட்டு என்னை எதுவும் கேட்கவில்லை எம்.ஜி.ஆர். நான் நடித்த அமைதிப்படை அரசியல்வாதிகளை நார் நாறாக கிழிக்கிற படம்தான். அந்த படம் வெளியான நேரத்தில் ஜெயலலிதா மேடம்தான் சிஎம் ஆக இருந்தாங்க. அப்பவும் என் மேல் அவங்க கோபப்படல. இப்போது இந்த படத்திலும் நான் அனல் தெறிக்கும் வசனங்களை பேசியிருக்கேன். என்னை பொறுத்த வரை நான் ஒரு நடிகன். அவ்வளவுதான்.





## கன்னடத்தில் பாவனா

கன்னட சினிமாவில் பாவனாவுக்கு அதிர்ஷ்டம் கொட்டத் தொடங்கியுள்ளது. கன்னடத்தில் ஜாக்கி படம் வெற்றி பெற்றதை தொடர்ந்து பாவனாவுக்கு ஏராளமான பட வாய்ப்புகள் குவியத் தொடங்கியுள்ளன. இதனால் பயங்கர குஷியில் இருக்கிறார் பாவனா. தமிழ், மலையாளம் என்று பிஸியாக நடித்து கொண்டு இருந்த பாவனா திடீரென்று தமிழ் சினிமாவில் இருந்து காணாமல் போனார். நீண்ட இடைவெளிக்கு பின்னர் அஜீத்துடன் அசல் படத்தில் சேர்ந்து நடித்தார். அப்படியே தமிழ் சினிமாவை தக்க வைத்து கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தார். ஆனாலும் படவாய்ப்புகள் ஒன்றும் வந்தபாடில்லை. இதனிடையே தெலுங்கு பக்கம் போனார். அங்கும் ஏமாற்றம் தான். இந்நிலையில் கன்னடத்தில் புனித்ராஜ் குமாருடன் சேர்ந்து ஜாக்கி என்ற படத்தில் நடித்தார். அந்தபடம் அங்கு பெரிய வெற்றியை பெற்றது. மேலும் ஏராளமான படவாய்ப்புகளும் குவியத்தொடங்கியுள்ளது.

இப்போது கன்னட சினிமாவின் ஆஸ்தான நாயகியாகிவிட்டார் பாவனா.

# தேன் கிண்ணம்

## நம் தலையெழுத்தோ?

சொல்லத் தெரியவில்லை
சோகம் குடைபிடிக்கும்
எல்லாம் விதியோ
வீதியோரங்களோ கொலைக்களமாகி
குருதி குளித்த மனிதப் பிண்டங்கள்
இன்னமும் குழிகளுக்குள்
உக்கிய நம் எச்சங்கள்
தோண்டப்படாத உண்மைகளுடன்
நாங்களும் பிறவிக்குருடர்களாய்
எம் மண்ணில்...

த.அனிதா-வயாவிளான்.

## இனிக்கும் வாழ்க்கை...

**ஐம்பது** வயதைக் கடந்த பின்னரே, தங்களது வாழ்க்கை சந்தோஷமாக இருப்பதாக பெரும்பாலானோர் கருத்து தெரிவித்துள்ளனர். எந்த வயதில் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறது என்பது குறித்து, பிரிட்டனில் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. 50 வயதைக் கடந்த 1,500 ஆண், பெண்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதில் பெரும்பாலானோர் 50 வயதைக் கடந்த பின்னரே சந்தோஷத்தை உணருவதாக தெரிவித்தனர். கல்வியை முடித்ததும், தொழில் தொடங்குவது, வேலையில் சேருவது என்று ஆண்களும், பெண்களும் தங்கள் எதிர்காலத்தை நோக்கி ஓடத் தொடங்குகின்றனர்.

இடையில் திருமணம், குழந்தைகள், பின், குழந்தைகளின் கல்வி, வேலை



என்று அவர்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. இதனால் குடும்பத்தினர், நண்பர்களுடன் நேரம் செலவிடவோ, சமூகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்குபெறவோ முடியாத நிலை ஏற்படுகிறது. தங்களது பிள்ளைகள் சொந்தக்காலில் நிற்கத் தொடங்கும் போதும், தங்களது வாழ்க்கையில் சந்தோஷத்தை உணரத் தொடங்குவதாக பெரும்பாலானோர் கூறுகின்றனர்.

அதன் பின்னரே, தங்கள் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் நேரத்தை செலவிட முடிவதாகவும் தங்களுக்குப் பிடித்த செயல்களில் ஈடுபட முடிவதாகவும் கூறுகின்றனர். மேலும் இந்த ஆய்வில் பங்கேற்ற பத்தில் நான்கு பேர், தாங்கள் எல்லா வயதிலும் சந்தோஷமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். மூன்றில் இரண்டு பங்கு பேர், தங்கள் இலட்சியத்தை அடைந்த பின்னரே வாழ்க்கையில் சந்தோஷம் தொடங்கியதாக கூறுகின்றனர். ■

## சாட்சி

விதி தேவனின் எழுதுகோள்
எழுதிய மடல் ஒன்றின் வைர
வரிகள் இவை
என் அன்பானவனே மின்னலாய்
வந்தாய் மேகமாய் உரசி விட்டு
எங்கு சென்றாய் தவிக்கிறேன்
உன்னைக் காணாமல்
காற்றுக்குத் தெரியும் எமது
சுவாசத்தை.
கடலுக்குத் தெரியும் எமது
காதலின் ஆழத்தை
காகிதம் அறியும் எமது
காதல் கவிதைகளை
எங்களுடைய பேனாவிற்குப்
புரியும்
நம்முடைய காதல்
உணர்வுகளை
வீதிகளுக்கு தெரியும் எமது
காதலின் நீளத்தை இன்று
இத்தனை சாட்சிகள் முன்
நிலையில்
நான் தோற்றுப்போய்
நின்கின்றேன்
ஏன் தெரியுமா
இத்தனையும் கொடுத்த
உனக்கு
என் உணர்வுகளை
புரிய முடியவில்லையே என்று.

செ.விஜிதபாமா – கோண்டாவில்

## மனிதா கேள்!

மனிதனுக்கே
மனிதன் தான் எதிரி
கையிலே கொடுத்தால்
கழுத்துண்ணவும் தயங்கான்!

ஏய் மானிடா!
ஏனடா இத்தனை கொரூரம்
யாதும் ஊரே யாவரும் கேளீர்
என்றான் பாரதி – இங்கு
வேற்றுமைகள் தானே
வேடந்தாங்கித் திரிகிறது!

நீ உயர்ந்தவனாயினும்
சின்னதாய் உன்னைத் தாண்டி
யாரெனிலும் வந்தால்
அவனை முளையிலே கிள்ளி
முடக்கி விடும் கலைஞனாய்
இவ்வுலகில் இராதே – ஏனெனில்
நி மனிதன் ஆறறிவு ஜீவன்!
வார்த்தைகளை மட்டும்
அள்ளி வீசாமல் – சிறிதேனும்
செப்புவதற்கேற்ப ஒழுகிடு
மனித நேயத்தைக் காட்டு
அன்புக்கே இவ்வுலகம்
அடைக்கலமானது மறவாதே!

வானமும் பூமியும்
நம்வசம் என்பதினால்
தலைக்கனத்தாலே மனிதா
தாண்டவமாடாதே – நீ
எத்தனை தூரம் போனாலும்
ஆறடி நிலமே உன் சொந்தம்
புரிந்து கொள்!

மனிதா!
தூண்டுபவனாய் இரு
தீண்டுபவனாய் இராதே
வாழப்பிறந்தவன் நீ
பிறர் வாழ்வழித்து வீணாய்
அழிந்து போகாதே!

இராமசாமி ரமேஷ்–வவுனியா.

## நரக வேதனை

ஆன்மீக வாழ்க்கையில்
அமைதி உண்டு
டாம்பீக வாழ்க்கையில்
தொல்லை உண்டு!

சந்தேக வாழ்க்கையில்
சந்தோசம் இல்லை
சொந்த ஊர்போல் வேறு
சொர்க்கமில்லை!

அகதி வாழ்க்கைபோல்
ஒரு நரகமில்லை
அந்த நரக வேதனை
தீர்ந்தபாடுமில்லை!

மாரீச மானோட்டம்
தீர்வுத்திட்டம்
மாஜா பஜார்கதையாக
விசாரணைகள்!

உண்மை விளம்பி
கட்டை பறிச்சான்

## நினைவுகள்

கடந்த காலங்களை
தந்தியறுந்த வீணையில்
நாதமாகவே
மீட்கவே முற்படுகிறேன்
முடியவில்லை.

ஆறாத ரணங்களாய்
மாறாத மனதோடு
இன்னும் இன்னும்
நீள்கிறது நமது தடங்கள்.

கண்கள் இப்போது
உனக்காக ஒருதுளி
உப்பு நீரைக் கூட
சிந்த விரும்புவதில்லை.

ஏனெனில் விழிகளுடன்
என் மனமும் கூடவே
காய்ந்துவிட்டது
தனிமை பூவனத்தை
தரிசாக்குகின்றது.

ஆஷா,யாழ்ப்பாணம்.

## அநீதி நிலைக்காது

வலிகள் சுமந்த மனங்கள்
காய்த்த மரமாய்
அடிவாங்குகிறது
நீங்கள் வாழ்கிறீர்கள்
நாங்கள் வாடுகிறோம்
சட்டப்படியும்
மனச்சாட்சிப்படியும்

நிலங்களை
எப்படியோ விட்டோடினோம்
ஆயிரமாண்டுகள்
வரலாறு கண்ட இருப்புகள்.

தவறுதலாகப் பென்சில் கீறியதை
அழிக்க முயன்றோம்

நீங்கள் பேனாவால்
முடிந்தவரை கிறுக்கிறீர்கள்
முடியாத வரையும்.

காடழித்தும்
குடியேற்றப்படும் நீங்கள்
எங்கள் முற்றத்தில்
முட்களைப் போடுங்கள்
மின்சாரத்தைப்
பாய்ச்சாதீர்கள்.

ஆணிவேர் தெரிவதில்லை
அநீதிகள் நிலைப்பதில்லை.

அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர்–01

## மரணம்



பிறக்கும் போதே
உன் அன்னைப் பெற வேண்டும்
இறக்கும் வரை என்
நினைவில் நீ இருக்க
வேண்டும்
உன்னை மறக்கும்
நிலை வந்தால் மரணம்
ஒன்றே வேண்டும்.

சுதர்ஷன்–யாழ்ப்பாணம்.

Welcome
# லேடீஸ் ஸ்பெஷல்
பெண்கள் பக்கம்...

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்



## அழகும் ஆபத்தும்!



இன்றைக்கு பெரும்பாலான பெண்கள், நாடி ஓடும் இடம் அழகு நிலையம். அங்கே அழகுபடுத்த பயன்படும் சாதனங்கள் அனைத்தும் பாதுகாப்பானவை தானா? எவ் வித கெடுதலும் இல்லையா? என்றால் தெரியாது என்று பதில் அளிக்கின்றனர் விஞ்ஞானிகள்.

பெரும்பாலும் அதிக விலை கொண்ட பொருட்களே அதிக பிரச்சினைகளைக் கொடுக்கிறது என்பதும் இவர்க ளின் கருத்து. அவற்றில் சேர்க்கப்படும் செயற்கைப் பொருட் களினால் விலை உயருகிறது. மேலும் சருமத்தையும் வேதனைப்படுத்துகிறது.

நம்முடைய சருமத்தில் அழகு சாதனப் பொருட்கள் பூசப்படுவதால் அது நம்மை பாதிக்காது என்றே பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில், அந்தப் பொருட்களில் உள்ள இரசாயனங்கள் தோலில் ஊடுருவிச் செல்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள். மேலும் அழகு சாதனங்களிலிருந்து வெளியாகும் இரசாயன வாயுக்களை நாம் சுவாசிக்கின்றோம் என்பதை இங்கே நினைவில் கொள்ளுங்கள். குறிப்பாக, கூந்தல் மற்றும் பொடி ஸ்ப்ரே, ஆகியவற்றை சுவாசிப்பதையும், உதடுகளில் தடவும் லிப்ஸ்டிக்கில் உள்ள இரசாயனம் வாயில் நுழைந்து, உடலுக்குள் செல்வதையும் தவிர்க்க முடியாது. மனதுக்கு பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் அழகு சாதனங்கள் நமது உடலுக்குள் புகுந்து பாதிப்பை உண்டாக்குகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

வழக்கமாக கூந்தல் ஸ்ப்ரேயை பயன்படுத்துவதால் 'திசொரொசின்' எனப்படும் நுரையீரல் நோய் ஏற்படலாம்.

அதேபோல், பொடுகு எதிர்ப்பு ஷம்புவை பயன்படுத்துவதும் அபாயகரமானது. இந்த ஷம்புவில் பயன்படுத்தப்படும் இரசாயனம் செலினியம் சல்பைடை விழுங்கினால் கிட்னி, ஈரல், வயிறு மற்றும் இதர உறுப்புகளில் கோளாறை ஏற்படுத்தும். 'ரிகொர்னல்' எனப்படும் பொருளும் மற்ற பிரச்சினைகளை உருவாக்கும். ஹேர்டைகளில் குறைந்த பட்சம் 20 விதமான புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய இரசாயனங்களை பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நகபொலிஷ்களும் நகங்களில் வர்ணத்தை மாற்றுவதோடு, நகத்துக்கு அடியில் ரத்தக் கசிவை ஏற்படுத்துகிறது.


மஸ்காராவில் இதில் பார்மால்டிஹைடு, மது போன்றவை இருப்பதால் கண் சம்பந்தமான நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. எனவே பெண்களே முடிவு உங்கள் கைகளில்தான்.

## மருதாணி வைக்கும் போது...

மருதாணி நன்றாக கலர் பிடிக்க மருதாணி எண்ணெய் மற்றும் கிராம்புத் தைலம் கலந்து விடவும்.

கைகளில் இருந்து மருதாணி கழராமல் இருக்க, கொஞ்சம் காய்ந்தவுடன் சர்க்கரையும் எலுமிச்சைசாறும் கலந்து வைக்கவும்.

அதிக கலர் கைகளில் பிடிக்க, சூடான வாணலியில் கிராம்பு போட்டு வெடிக்க விட்டு, அதன் மேல் வரும் புகையில் கைகளை காட்டவும்.



கைகளில் யூக்கலிப்டஸ் எண்ணெய் தடவிக் கொண்டு மருதாணி வைத்தால் சளி பிடிக்காது.

மருதாணி எடுத்த பிறகு மருதாணி எண்ணெய் தடவி அரைமணி நேரம் வைத்து பின்பு கழுவினால் கலர் சீக்கரம் அழியாமல் இருக்கும்.

மருதாணி எடுக்கும் போது தண்ணீர் உபயோகித்தால் நிறம் மங்கும்.

## முகப்பரு வரக் காரணம் என்ன?

பருவ வயதில் 'ஆன்ட்ரோஜன்' என்ற இயக்குநீர் (Androgen Harmone) ஆண், பெண் இருபாலருக்கும் சுரக்கத் தொடங்கும். சில சமயங்களில் ஆன்ட்ரோஜன் அளவுக்கு அதிகமாகச் சுரக்கும்போது முகப்பரு உண்டாகிறது.

சில சமயங்களில் பக்ரீரியா கிருமிகள் பருக்களில் தொற்றிக்கொள்ள, பருக்கள் பெரிதாக வீங்கிக்கொள்கின்றன. எப்படி என்பதை இப்போது பார்ப்போம்.

முகப்பருவைப் போக்கவும், தடுக்கவும் கீழ்க்காணும் வழிமுறைகள் நிச்சயம் உதவும்.

1. முகத்தை சோப்புப் போட்டு வெதுவெதுப்பான தண்ணீரால் அடிக்கடி கழுவுங்கள்.
2. முகத்தில் பவுடர் பூசுவதையும், அழகு சாதன களிம்புகள் உபயோகப்படுத்துவதையும் தவிருங்கள்.
3. சுத்தமான காற்றும், சூரியஒளியும் முகத்திற்கு தேவை.
4. கொழுப்பு நிறைந்த அசைவ உணவுகளையும், நெய், வெண்ணெய் கேக், ஐஸ்கிரீம், சொக்லெட், பாலாடை போன்றவற்றையும் ஒதுக்குங்கள்.
5. கீரை மற்றும் பச்சை காய்கறிகளை நிறைய சாப்பிடுங்கள்.
6. தினமும் இரண்டு லீற்றருக்கு குறையாமல் தண்ணீர்குடியுங்கள்.



7. மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
8. பருக்களை கிள்ளுவதோ, அல்லது எந்நேரமும், கையை வைத்திருக்கவே கூடாது.
9. பருக்களில் சீழ் வைத்தால் 'டெட்ராசைக்ளின்' (Tetracycline) மாத்திரைகளை மருத்துவர் பரிந்துரைக்கும் கால அளவுக்கு தொடர்ந்து சாப்பிடுங்கள்.
10. பருக்களின் மேல் பூசுவதற்கு பலவித களிம்புகள் கிடைக்கின்றன. அவற்றை தேர்வு செய்வதற்கு மருத்துவரின் உதவ யை நாடுங்கள்.

## வெயில் கால பாதுகாப்பு

வெயில் வாட்டியெடுக்க வேண்டும் என்கிற தீவிரத்துடன், உச்ச நிலையை எட்டியுள்ளது. குறிப்பாக, சிறு குழந்தைகளும், வயதானவர்களும், வெயில் வேகத்தின் பாதிப்புக்கு உள்ளாவார்கள். சுட்டெரிக்கும் வெயில் பாதிப்பு குழந்தைகளுக்கு ஏற்படாத வகையில் பெற்றோர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வெயில் காலத்தில் டயோரியா, நீர்சத்து இழப்பு, வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது. எனவே குடிக்கும் தண்ணீர் உரிய சுகாதாரத்துடன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இடியப்பம், போன்ற எளிமையாக ஜீரண உணவுகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அனைத்து வயது குழந்தைகளுக்கும் விற்றமின்'சி' சார்ந்த உணவுப் பொருள் அவசியமானது. எலுமிச்சை பழச்சாறு குடிக்கலாம். செயற்கை இழை ஆடைகளை தவிர்த்து பருத்தி ஆடைகள் அணிவது நல்லது.

கோடை காலத்தில் வெயில் தாக்கம் அதிகம். அதிகாலை, மாலை நேரங்களில் மட்டுமே விளையாட அனுமதிக்க வேண்டும். 15 வயது வரை உள்ள குழந்தைகளின் உடல் நலன் விஷயத்தில் பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும். கோடை காலத்தில் இந்த வயதினருக்கு மஞ்சள் காமாளை, அம்மை போன்றவை ஏற்படும் வாய்ப்பு உள்ளது. குழந்தைகளை போல் பெரியவர்களும் தினமும் தண்ணீர் அதிகளவு குடிக்கவேண்டும்.

எனவே தினமும் குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. நோய் தாக்கும் இந்த கால கட்டத்தில் நோய் வராமல் தடுக்க வெளி உணவகங்களில் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. குழந்தைகள் மதிய நேரங்களில் கரம் போர்டு, செஸ் போன்ற ஈடுபடுவது நல்லது. கோடை காலத்தில் 2 வயது வரை உள்ள குழந்தைகளை மிகுந்த கவனத்துடன் பார்க்க வேண்டும். இந்த தருணத்தில் மிக இளம் குழந்தைகளுக்கு நீர்ச்சத்து இழப்பு, சுவாச தொற்று போன்றவை ஏற்படும் சூழல் உள்ளது என்றும் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 263**

கேள்வி : பொடுகு எதிர்ப்பு ஷம்புவை பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்கள் எவை?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டஎசாலி, பரிசுப் போட்டி இல : 263**

**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **14.04.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 261 இற்கான விடை:- இஞ்சி

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- எஸ்.ஜெயந்தி, 8 ஆம் குறுக்குத்தெரு, ரத்மல்யாய, பாலாவி, புத்தளம்.

263

பெயர் : ..............................

முகவரி : ..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

கையொப்பம் : ..............................




# ஆபத்தானவர்கள்

"கொண்டு வந்தால்..." பிளாக்டைகர், ரிச்சர்ட்டு ஜான்ஸனைப் பார்த்தான்.

"எங்களது நாட்டில் நீங்கள் விரும்புவது வரை பத்திரமாகத் தங்கியிருக்கலாம். வசதியான வீடு, மாதந்தோறும் உங்கள் செலவுக்குப் பணம் வருவது போல் ஒரு பெரிய தொகை பேங்கில் போடப்படும்.

"நீங்கள் சொல்வதை நான் எப்படி நம்பவது?" ராபின்சன் கேட்டான்.

"எங்களுக்கு உதவி செய்தவர்களுக்கு நாங்கள் ஒரு போதும் துரோகம் செய்ய மாட்டோம். நீங்கள் விரும்பினால், எங்கள் அரசாங்கத்தின் ஒற்றர் படையில் உங்களுக்கு ஒரு பதவியும் வழங்கப்படும்."

ராபின்சன் திருப்தி அடைந்ததாகத் தோன்றியது. சாதாரணமாக இப்படிப்பட்ட சாகசச் செயல்களில் ஈடுபடுவது ராபின்சனுக்கு மிகவும் விருப்பமான விஷயம்.

"சரி...இதற்கு நான் ஒப்புக்கொள்கிறேன்." எனக்கு சிறந்த ஒரு கெமரா வேண்டும். நல்ல நீச்சல் உடை, என்னிடம் தரும் பணம் மொத்தமும் நூறுரூபாய் நோட்டுக்களாக இருக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று அழகான இளம்பெண்கள். தற்சமயம் இதெல்லாம்தான் எனது கோரிக்கைகள்!" ராபின்சன் கூறினான்.

"உங்கள் பட்டியல்படி எல்லாமும் தரப்படும்!" கங்காபிரசாத் கூறினார்.

விடியற்காலையில் ராபின்சன் கண் விழித்தான்.

காலைச் சிற்றூண்டிக்குப் பிறகு இளம்பெண் ஒருத்தி, அவனைக் கங்காபிரசாத்திடம் அழைத்துச் சென்றாள்.

ராபின்சனின் தலைமுடியை மாற்றவும் முகத்தில் மாற்றங்களைச் செய்யவும் பிடியூட்டீஷியன் ஒருவர் வந்திருந்தார்.

அவள் மற்றோர் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டாள். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் ராபின்சன் ஒட்டுமொத்தமாக ஆளே மாறிப்போயிருந்தான்.

அவனை இப்போது ராபின்சன் என்று சொன்னால் எவருமே நம்பமாட்டார்கள்!

"இது ஒரு ஐ.டி.கார்டு. மிகப்பெரிய கம்பெனி ஒன்றின் பிரதிநிதியாக வேலை செய்கிறீர்கள். அதற்காக விசிட்டிங் கார்டுகள் இதில் உள்ளன." கங்காபிரசாத் கூறினார்.

ராபின்சன் அவற்றைப் பெற்றுக்கொண்டான்.

அன்றுமாலை நேரத்தில் ராபின்சன் ஏரிக்கரையை அடைந்தான். அவனுடன் ரோஸியும் இருந்தாள்.

ஏரிக்கரையில் வந்து நின்ற ராபின்சன் சுற்றுமுற்றும் பார்த்தான். ஏரிக்கரையில் உயர்ந்து நிற்கும் பிரமாண்டமான பங்களாவின் முன்பாக ஏறத்தாழ சமதொலைவில் நான்கு செக்யூட்டிகள் காவல் இருந்தனர்.

அவர்கள் தங்களது ரைபிள்களைத் தரையில் ஊன்றி பொம்மைகள் போல் நின்று கொண்டிருந்தனர்.

கட்டடத்துக்குக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ராபின்சனைப் பொறுத்தவரை இதெல்லாம் புதிய அனுபவங்கள் அல்ல.

இதைவிடக் கடுமையான பாதுகாப்புகள் போட்டிருந்த இடங்களிலெல்லாம் அவன் கெட்டிக்காரத்தனமாகச் செயல்பட்டிருக்கிறான். ஆனால், இங்கு செய்ய வேண்டியது பொருள் திருட்டு அல்ல, கொலையும் அல்ல, இங்கு கடத்த வேண்டியது மனிதனை. எனவே, மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படவேண்டியுள்ளது.

சூரியன் மேலைக் கடலில் இறங்கியதால், ஆகாயத்தில் குங்கும நிறம் பரவியது. தொலைவில் கடல், இரத்தம் கொதிப்பது போல் தெரிந்தது.

அந்த நிறம் கட்டடத்துக்கு இருள் கலந்த சிவப்பைப் பூசியிருந்தது.

காவல்காரர் ஒருவர் அவர்களைக் கவனித்தார். உடனே துப்பாக்கியை வலது கையால் உயர்த்திப் பிடித்தவாறு அவர்களை நெருங்கினார்.

"யார் நீங்கள்?" காவல்காரர் கேட்டார்.

"நாங்கள் எல்லோரையும் போலவே இங்கு வந்திருக்கிற சுற்றுலாப் பயணிகள்." ராபின்சன் இயல்பாகப் பேசினான்.

சட்டென்று மேற்கொண்டு என்ன நடப்பது என்று தெரியாமல் குழம்பியவரைப் போல்நின்றார் காவலாளி.

"நாங்கள் இங்கு நிற்கக் கூடாதா என்ன?" ரோஸி சிரித்தவாறே கேட்டாள்.

"அப்படியெல்லாமில்லை. இந்தக் கட்டடத்தின் அருகே வரக்கூடாது!" என்றவர் வந்தது போலவே திரும்பிச் சென்றார்.

"நல்லவேளை செய்தாய் கேள்வி கேட்டவருக்கு அசடு வழிந்திருக்கும்" ராபின்சன் சொன்னான்.

"பிரச்சினை அதுவல்ல. அவர் திரும்பிப் போனது எதற்கு என்று எனக்குத் தெரியும்." ரோஸி கூறினாள்.

அவர்களிடம் வந்த காவல்காரர் வலது புறமிருந்த மற்றொரு காவல்காரரை நெருங்கினார்.

பொலிஸ் கிளப் வழக்கம் போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. உயர் அதிகாரிகள், விஞ்ஞானியின் பாதுகாப்புக் குறித்து பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது வை.ஜி.இஸ்மாயில் புதுத் தகவல் ஒன்றைக் குறிப்பிட்டார். "இப்போது ஒரு புதிய செய்தி கிடைத்திருக்கிறது!"

மற்றவர்கள் ஆவலுடன் அவர் முகத்தை பார்த்தனர்.

"டாக்டர் டிக்சன் ஒரு பயங்கர இயக்கத்தின் தலைவரும் கூட. உலகின் பல பகுதிகளில் அவருக்கு ஆதரவாளர்களும், ரசிகர்களும் இருக்கிறார்கள்.


(தொடரும்....)

# படைப்புக்களின் படைப்பாளி

# தெணியான்

**ஈழத்தின்** முற்போக்கு எழுத்தாளர்களுள் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவர் இவர். கடந்த தசாப்தங்கள் தனது இலக்கியப் பதிவுகளைத் தவமாக இயற்றி வருபவர். இன்று மூத்த படைப்பாளியாகி முதிர்ச்சி கண்டுள்ளார். நீண்ட காலமாகப் படைப்புலகில் கால்பதித்து புதுமையும் பொலிவும் குன்றாமல் உயிர்ப்புள்ள படைப்புக்களைத் தந்து கொண்டிருப்பது என்பது எல்லோருக்கும் முடிந்த காரியமல்ல. அறுபதுகளிலிருந்து இன்றுவரையும் இனிமேலும் அது தெணியானுக்கு சாத்தியமாகின்றதெனில் அவர் காலத்தை வென்ற படைப்பாளியாக நிமிர்ந்து நிற்பதுதான் காரணமாக இருக்க வேண்டும்.

அவர் கடந்து வந்தகாலம் ஈழத்து இலக்கியத்தின் நோக்கிலும், போக்கிலும் வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டது. முற்போக்கு இயக்கம் எழுச்சி பெற்றிருந்த காலத்தில் அவரது எழுத்துக்கள் ஆவேசமாக முனைப்புப் பெற்று இன்று இன எழுச்சிக் காலத்தில் வலுக்குன்றாமல் கலைத்துவ வெளிப்பாடுகளாக வெளிவருகின்றன. படைப்பாளி ஒரு வட்டத்திற்குள் நின்று நின்று சுற்றிச் சுழன்று வருபவன் அல்ல. அதனால் அவனது ஆளுமை வலுவடையாது. அதேசமயம் தனக்கு முன்னால் நடக்கும் மானுடக் கொடுமைகளை மறந்துவிட்டு வெறுங் கற்பனைகளில் மிதப்பவனும் அல்ல. சாதி வெறி - சாதி அகம்பாவம் என்பது சிலரின் மனசையும், ஆன்மாவையும் பீடித்துள்ள கொடிய நோய். எத்தகைய மனித நோயையும் விட இந்நோய் இந்தப் பாரம்பரிய விடுபடாத நோய் மகாபயங்கரமானது. மனித குலத்தையே அழிக்கத்தக்கது. எதார்த்த பூர்வமாக இந்த நோயின் கொடூரத்தை வாழ்வில் அனுபவித்தவர் மாத்திரம் அல்ல. பின்விளைவுகளுக்கு முகங்கொடுத்து இன்று வாழ்ந்து கொண்டு பேனா பிடித்து வருபவர். இவரிடம் அன்றும் இன்றும் வெகு சிறப்பான குணம் ஒன்று உண்டு. எந்த மக்களிடமிருந்து உருவாகினாரோ எந்த மக்களுடன் தினசரி பழகிவருகின்றாரோ அந்த மக்களுக்கான நிரந்தர விடுதலையின் பக்கம் அவர் திடமாக நின்று சிந்தித்து எழுதிப் பேசி வருகின்றார். இவருக்கென்று ஒரு தத்துவப் பார்வை உண்டு. ஆரம்பகாலந்தொட்டே அதன் வழிகாட்டுதல் வழியே தொடர்ந்து நடைபோட்டு வருபவரான இவரிடம் தடம்புரளும் மனப்பான்மையே சிறிது கூடக் கிடையாது. நடேசனாக அன்று வாழ்வைத் தொடர்ந்த ஒரு தமிழாசிரியர் அங்கே பண்டிதர் ஒருவரால் ஒடுக்கப்பட்ட சமூக சகோதரன் ஒருவனுக்கு எதிராகச் சொல்லப்பட்ட சொல்லம்பைக் கேட்கச் சகிக்காமல் நெஞ்சு துடித்து அதன் பெறுபேறாகத் தெணியானாக உருவமாறி வந்துள்ளார். "உலகத்தோடு ஒட்ட ஒழுகத் தெரியாத பண்டிதரின் நாவினாற் சுட்டவடு" தெணியானின் நெஞ்சிலே நிலைத்து வேதனை தந்தது வியப்பிற்குரியதன்று.



பிறந்த மண்ணின் கல்விப் பாரம்பரியத்தின் வாரிசு குடும்ப உறவு- சுற்றம், இவற்றையெல்லாம் கட்டிக்காப்பவர் சித்திரை என்று சிறுத்ததும் இல்லை பங்குனி என்று பெருத்ததும் இல்லை என்று உலாவும் எளிமையானவர். செய்யும் தொழிலில் பற்றும் கடமையும் உள்ளவர். சிரத்தையும் சொன்ன சொல்லைப் பேணவும் நடத்தையும் கொண்டவர். விடாமுயற்சியுடையோன், எல்லோரையும் அனுசரித்துப் போகும் இயல்புடையோன். அசல் வடமராட்சி மண்ணின் மைந்தன். ஆரம்பத்தில் தெணியான் என்ற எழுத்தாளர் என்னைக் கவர்ந்திழுத்தார் என்றால் நேரடித் தொடர்பின் பின் அந்த எழுத்தாளனின் உள்ளேயிருந்த மென்மையான உள்ளம் என்னை ஆர்த்திழுத்தது. மிருதுவான குணங்களும், உள்ளத்திலும் தோற்றத்திலும் வசீகரமானவர். இப்பொழுதுதான் தெணியானின் எழுத்தில் இளமை திரும்புகிறது. இப்பொழுதுதான் அவரது எழுத்துக்களின் மற்றுமொரு புதிய பரிமாணம் உதயமாகின்றது. இவற்றை அவரது அண்மைக் காலச் சிறுகதைகளில் கவனிக்க முடியும்.

தெணியான் சாதியத்தை வர்க்க பேதத்தை எழுதுபவர் என்பதில் இரண்டு பேச்சுக்கே இடமில்லை. எம்மில் பலர் தமது சாதியத்தை மறைத்து (அல்லது மறந்து) வாழப் பழகிக்கொண்டவர்கள். சாதியைக் குறிப்பிடுவது நாம் ஒரு குறைந்த மனிதப் பிரகிருதி என்பதைப் பிரகடனப்படுத்துவதாக அமையும் என வெட்கப்படுபவர்கள் இன்றும் எம்மிடையே உளர் என்று இவர்களெல்லோரும் தமது சாதியை மேடையில் பொது இடங்களில் கூச்சமின்றி உரத்துக் கூறுகிறார்களே அன்று சாதியம் செத்துவிடுமென்பதை ஏனோ இவர்கள் அறியவில்லை. தெணியான் அப்படியான முதுகெலும்பில்லாப் பிராணி அல்ல. சாதியம் பற்றிய கதைகளைக் கூர்ந்து பார்ப்பவர்கள் அங்கு இரண்டு முக்கிய அம்சங்களைக் கண்டு கொள்வர். ஒன்று சாதியத்தின் கொடுமை இலக்கியத்தினூடாக வெளியுலகத்திற்குக் காட்டப்படல் வேண்டும் எனும் ஆதங்கம். இரண்டாவது கதை மாந்தர்கள் மனித நேயத்துடன் பக்கச்சார்பின்றிப் பார்க்கப்படல் வேண்டும் என்பதில் உறுதி. இவ்விரு அம்சங்களின் சங்கமத்திலேயே அவரது படைப்புக்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. சாதியத்தினூடாக மானுடமும்- மானுடத்தினூடாகச் சாதியமும் அவரது கதைகளில் பார்க்கப்படுகின்றன. ஆகவே அவரது கதைகள் காலத்தை வென்று நிற்கும் தெணியான் ஆரம்ப காலக்கதைகளின் பகைப்புலம் சாதியத்தின் மேலாதிக்கத்தின் மிருகவெறிக்குட்பட்ட மனிதர்களின் ஈனக்குரலாக இருந்தது. எனவே மனித மனம் படைத்த எந்தவொரு உணர்வு பூர்வமான மனிதனும் அதைப்பற்றி எழுதாமல் இருக்க முடியாது. எனவே தெணியானிடம் இருந்து ஈழத் தமிழ்இலக்கியம் இன்னும் நிறைய எதிர்பார்த்துக் காத்திருக்கிறது என்ற அவருக்கு ஏற்கெனவே தெரிந்த செய்தியை மீண்டும் நினைவூட்டி வாழ்த்துகின்றேன்.

**நயினை-கி. கிருபானந்தா**




# மௌனத்தின் வலிமை அதிகம்!

**நம்மை** ஒன்றும் தெரியாத முட்டாள்கள் என்று பிறர் நினைத்தாலும் பரவாயில்லை, வாயைத் திறக்காதிருப்பது நல்லது என்பர். வாயைத் திறந்து அவர்கள் நினைத்ததே சரி என்று உறுதிப்படுத்துவதை விட பேசாதிருப்பது நல்லதுதான்.

நம் முட்டாள்தனம் வெளியே தெரிந்துவிடாமல் இருக்க, வாயை மூடி இருப்பதுதான் சிறந்த வழி. இதிலுள்ள சிக்கல் என்னவென்றால், இந்த வழியைத் தெரிந்து வைத்திருப்பவர் முட்டாளாயிருக்க முடியாது என்பதால் இந்த உபாயம் பெருமளவுக்கு உபயோகத்திலிருப்பதில்லை. எனவே சவால்கள், சபதங்கள், முழக்கங்கள், மிரட்டல்கள் என பேச்சுச் சுதந்திரத்தின் ஜிலுஜிலுப்பை பெருமளவுக்கு அனுபவித்து வருகிறோம். நாம்தான் மௌனத்தின் சிறப்புப் பற்றியே மணிக்கணக்கில் பேசக் கூடியவர்களாயிற்றே!

பிறர் பேசுவதைக் கேட்கும் உபத்திரவத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, தாமே விடாமல் பேசிக் கொண்டிருப்பதை ஒரு தந்திரமாக வைத்திருப்பவர்களும் உண்டு. மற்றொருபுறம் ஆலோசனைகள் அறிவுரைகள் வழங்குவதில் மக்களுக்கிருக்கும் துடிப்பும் அவர்களை சும்மாயிருக்க விடுவதில்லை. எனவே மௌனத்தைக் கிழித்து நார் நாராக்கி உலகம் பேச்சோசையால் விளையும் இரைச்சலில் திளைக்கிறது.

"மௌனம் என்பது ஒரு அழகிய திரை; சத்தம் என்பது அதில் விழும் பொத்தல்" என்றொரு கவிஞர் சொன்னார். எனவேதான் சத்தங்களால் சலித்துப் போன ஞானிகளும் துறவிகளும் மனித சஞ்சாரமில்லாத மலைகளையும் காடுகளையும் சென்று அடைகிறார்கள். விரல்களுக்கிடையில் உலகையே உருட்டிக் கடத்திவிடும் வித்தையை அறிந்துகொண்டு பேசாமல் எங்காவது அமர்ந்துவிடுகிறார்கள் சிலர்.

பேச்சினால் ஒருவர் என்னென்ன விதமாக தொல்லைக்கு ஆளாக நேரும் அல்லது ஆளாக்கலாம் என்பதை நாமெல்லோருமே அறிந்திருக்கிறோம். உலகையே உதறி வெல்லும் 'வீர' உணர்வும், மற்றோரெல்லாம் எதிரிகளே என்னும் வெறுப்புணர்வும் நமக்குச் சும்மா வந்துவிடவில்லை. "நாம் வேறு அவர்கள் வேறு" என்று நம் அடிநாளிலிருந்தே பேசிப் பேசி நம்மை ஆக்கி வைத்திருக்கிறார்கள் இப்படி!

ஒரு புலவனால் அறம் பாடிக் கொன்றுவிட முடியும் என்பதும் நம் பழந்தமிழ் நம்பிக்கை. சிலர் தமது நாக்கைக் கடித்துக் கொண்டாலே இறந்துவிடுவார்கள், அந்தளவுக்கு அவர் நாவில் விஷம் என்று இன்றும் பலர் சொல்லக் கேட்கிறோம். வயது போகப் போக பற்கள் விழுவதை விட நாக்கு விழுந்தால் நலமாக இருக்கும் என்று சொன்னார் கண்ணதாசன்.

"சொல்லாத சொல்லுக்கு விலை ஏதுமில்லை" என்று அவரேதான் மௌனத்தின் சிறப்பைச் சொன்னார். "நா காக்க" என்றும் "சும்மா இரு சொல் அற" என்றும் "சொல் குறுக நிமிர் கீர்த்தி" என்றும் முன்னோடிகள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். "சங்கடமான நேரங்களில் நான் மௌனமாக இருக்கிறேன்" என்று அந்தக் கடவுளரே செல்லியிருக்கிறார்கள். "பேசாத வாய் கீழிறங்கி இதயத்திற்குப் போய்விடுகிறது" என்று பேச்சற்ற நிலையின் பெருமையை விளக்கியிருக்கிறார்கள். "நுணலும் தன் வாயால் . கெடும்", "கொட்டிய நெல்லை அள்ளிவிடலாம் சொல்லை அள்ள முடியுமா" என்றெல்லாம் எத்தனையெத்தனை முதுமொழிகள்! ஆனாலும் எதையாவது சொல்லிக் கொண்டிருப்பதை நாம்தான் நிறுத்தவில்லை.

விவரங்கள் சொல்லி விவரங்கள் கேட்டுச் சலித்துப் போனவராக ஆத்மாநாம் ஒரு கவிதையில் சொன்னார்: "நீங்கள் யாரானால் என்ன அல்லது நான் யாரானால் என்ன அல்லது அனாவசியக் கேள்விகள் அல்லது அனாவசியப் பதில்கள் அல்லது எதையும் நிரூபிக்காமல் அல்லது சற்றே சும்மா இருங்கள்!"

வரிகளுக்கு இடையே உள்ள மௌனத்தில்தான் கவிதையின் மேன்மை ஒளிந்திருக்கிறது என்பார்கள். சவடாலில் அல்ல, மௌனம் என்னும் கொக்கியில் தன் ஜீவனைச் சொருகிக் கொண்டிருக்கிறது கவிதை என்று சுந்தர ராமசாமி சொன்னார். இசையிலும் கூட மௌன இடைவெளிகளே அதை உயரத்திற்கு எடுத்துச் செல்கிறது. அற்புத உணர்வான காதல்! அது சொற்களில் வெளியாவதில்லை. ஒரு குதூகலமான பார்வை, திருப்தியான புன்னகை, அந்நியோந்நியமான பாவனைகள், செய்கைகள், விழியசைப்புகள்." இந்த மௌன நாடகங்களே காதலைப் பிரகடனப்படுத்துகின்றன. சொல்லின்மை ஏற்படுவதே தரிசன உச்சம் என்பர். பேச மறந்து சிலையாய் நின்றால் அதுதான் தெய்வத்தின் சந்நிதி என்று பாடல் சொல்வதும் அதைத்தான்.

மௌனத்தின் மற்றெல்லாச் சிறப்புகளும் இருக்கட்டும், அந்த மொழியில் சண்டை போட்டுக்கொள்ள முடியாது என்பதே பெருஞ் சிறப்பல்லவா? வார்த்தைகளில் இல்லாத மௌனம் பலவற்றைச் சொல்லிவிடுகிறது. சங்கடங்களைத் தவிர்த்து நெருக்கத்தைக் கொண்டுவருகிறது. இரைச்சலை விழுங்கி அமைதியைக் கொண்டுவருகிறது. மறுப்பு வார்த்தைகளைக் கொட்டாமல் சமாதான விருப்பத்தை ஏற்படுத்துகிறது.

"வார்த்தைகள் தத்துவங்களைச் சொல்லலாம். ஆனால் உண்மைகளை விளக்காது" எனச் சொல்கிறது ஸென் பௌத்தம். இதை விளக்கச் சொல்லப்படுகிற கதை இது:

புத்தரின் பிரசங்கத்தைக் கேட்பதற்காக மக்கள் கூடினர். புத்தர் வந்தார். மேடைக்குப் போய் அமர்ந்து கொண்டார். அங்கே இருந்த ஒரு பூவைக் கையில் எடுத்துப் பார்த்தார். பக்கத்தில் இருந்த சீடன் காசியபனைப் பார்த்துச் சிரித்தார். கூட்டத்தைப் பார்த்து முறுவலித்தார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## வருமுன் காப்போம்

# இடரை எதிர்கொள்ளலும் மக்களைத் தயார்படுத்தலும்!

(கிருபா-ஜனோ)

**வெள்ளம்** வருமுன் அணைகட்ட வேண்டும் என்பது அன்று தொடக்கம் இன்றுவரை பாமரர்களிலிருந்து படித்தவர்கள் வரை உச்சரிக்கும் வார்த்தைகள். ஆயினும் இதனை வெறும் வார்த்தையில் மாத்திரம் உபயோகித்து விட்டு அதனை செயல் வடிவத்தில் காட்டாததால் பல்வேறுபட்ட இடர்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது.

கடந்த ஆண்டின் இறுதியிலும் இவ்வாண்டின் தொடக்கத்திலும் தொடர்ச்சியாகப் பெய்த அடைமழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டமும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் இதர பகுதிகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தன.

ஒப்பீட்டளவில் மட்டக்களப்பு மாவட்டமே பேரழிவைச் சந்தித்திருந்தது. அதிலும் குறிப்பாக பள்ளப் பகுதிகளான பல பிரதேச செயலாளர் பிரிவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

இப்பொழுது அந்தப் பாதிப்பின் தன்மைகளிலிருந்து மீண்டெழுவதற்கும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடர்களுக்கு முகங்கொடுப்பதற்குமான முடிந்த முயற்சிகளை ஒவ்வொரு தரப்பினரும் மேற்கொள்கிறார்கள்.

இது காலங்கடந்த ஞானம் என்கின்ற போதிலும் இப்பொழுதிருந்தாவது இந்த முயற்சியில் இறங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. செயற்கை, இயற்கை இடர்கள் தொடர்பாக அவற்றைத் தடுப்பதற்கு பல்வேறு தரப்பினர் முயற்சி எடுத்து வந்திருக்கின்ற போதிலும் அந்த முயற்சிகள் மக்களின் விழிப்புணர்வுடன் கூடிய பங்களிப்பு இல்லாததால் அவை வெற்றியளிக்கவில்லை என்பதை இங்கு உற்று நோக்க வேண்டும்.

"நடந்தவற்றை ஆராய்ந்து கொண்டிருக்காமல் இனி நடக்கக்கூடிய இடர்களை தவிர்க்க எம்மாலான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும்" இவ்வாறு சற்று ஆக்ரோசமான தொனியில் கூறினார் மட்டக்களப்பு கிரான் பிரதேச செயவாளர் எஸ். தவராஜா.

"தன்னுடைய அனுபவத்தில் ஏதாவதொரு ஆபத்து நிகழும் போதுதான் நாம் முண்டியடித்துக் கொண்டு ஓடுகிறோம், ஆயத்தப்படுத்துகிறோம், எச்சரிக்கை செய்கிறோம். இது சரியான வழிமுறையல்ல. இடர் ஒன்று ஏற்பட முன்னர் அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கோ அல்லது அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கோ அல்லது அந்த இடரின் இழப்பைக் குறைத்துக் கொள்வதற்கோ சரியான திட்டமிடலை செய்தால் இடருக்குப் பின்னர் கஷ்டப்பட வேண்டியதில்லை" என்று மேலும் கூறுகிறார் பிரதேச் செயலாளர் தவராஜா.

இடர்கால அவசரத் திட்டத் தயார்படுத்தலுக்கான கலந்துரையாடல் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கடந்த பெருவெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான கிரான் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்றது. அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு இந்த கலந்துரையாடலுக்கு அனுசரணை வழங்கியிருந்தது. இலங்கை அபிவிருத்திக்கான உதவு ஊக்க மையம் மற்றும் இன்னோரன்ன அக்கறையுள்ள தரப்பினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இடர்கால வேளையில் உடனடுத்து இடம்பெறக்கூடிய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்தும் முகமாக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவ்வப்போது ஏற்படும் இடர்களை எல்லோரும் எதுவிதமான ஆயத்தப் படுத்தலுமின்றி எதிர்கொண்டு வருகின்றார்கள். இதிலே முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் மழை வெள்ளம், புயல், சூறாவளி, சுனாமி, வரட்சி என்று எவ்வாறான இடர் ஏற்பட்டாலும் சமூகம் விலகியிருந்து வெளியிட உதவிகளை எதிர்பார்ப்பதுதான் பின்னடைவிற்கான பிரதான காரணமாக இருக்கிறது.

"ஒரு நாள் மழை பெய்தால் மறுநாள் பாடசாலையில் வந்து இருந்து கொண்டு நிவாரணம் கோருகிறார்கள். ரின் மீன் சாப்பாடு, உயர்தரமான உணவு, வெளியிடத்திலிருந்து வரும் விலை கூடிய நிவாரணப் பொருட்களை எதிர்பார்ப்பது மக்களின் மனப்பாங்குகளாக மாறிவிட்டது" என்று சலிப்படைந்து கொள்ளுகிறார் பிரதேச செயலாளர் தவராஜா.

கடந்த பெருவெள்ள காலப்பகுதியில் சமூகம் மீளமைப்புப் பணிகளிலிருந்து தூர விலகியிருந்ததால் உடனடி மீளமைப்புப் பணிகள் வெற்றியளிக்கவில்லை என்ற ஒருமித்த கருத்து எல்லா மட்டங்களிலும் நிலவுகிறது என்றும் பிரதேச செயலாளர் தவராஜா தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

ஆயினும் கடந்த காலங்களை விட இந்த முறை இயற்கை இடரான அடைமழையும் பெருவெள்ளமும் தாக்கியபோது அரசு ஆற்றிய பங்கும் பணியும் குறிப்பாக இடர் முகாமைத்துவ நிலையம் களத்தில் நின்று நிலைமைகளை அவதானித்து சமயோசிதமான நடவடிக்கைகளை எடுத்தது பெரும் ஆறுதலை அளித்திருந்ததாக அனைத்து தரப்பினரும் திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

பல்வேறுபட்ட அரசு அரசசார்பற்ற நிறுவனங்களும் ஆதரவுக் குழுக்களும் சிவில் சமூகமும் இணைந்து பணியாற்றுவதன் மூலம்தான் இடர்கள் ஏற்படும் போது அவற்றால் உண்டாகும் பாதிப்புக்களை குறைக்கவோ தவிர்க்கவோ தடுக்கவோ முடியும். அதன் மூலமாகத்தான் சமூக அபிவிருத்தியில் வெற்றியும் காணமுடியும் என்று கூறுகிறார் இலங்கை அபிவிருத்திக்கான உதவு ஊக்க மைய அதிகாரியான வளவியலாளர் திரு.ஏ.சொர்ணலிங்கம் அவர்கள்.

நிவாரணப் பணிகள், வாழ்வாதார உதவிகள், சமூக அபிவிருத்திக்கான இன்னோரன்ன செயல்திட்டங்கள் என்பனவற்றையும் இடர் சம்பந்தப்பட்ட முற்காப்பு மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அரச நிர்வாகத்தோடு இணைந்து பணியாற்றுவது செயல்திட்டங்களை இலகுவாக அமுல்படுத்துவதற்கும் அதன் இலக்குகளை எய்துவதற்கும் உதவிக்கரமாக இருக்கும் என்ற கருத்து எல்லோர் மத்தியிலும் மேலோங்கி இருக்கிறது.

இது துஷ்பிரயோகங்களைக் குறைப்பதற்கும் பாரபட்சங்களைத் தவிர்ப்பதற்கும் சாதகமானதொரு விடயமாக இருக்கும். இதனடிப்படையில் மனித வன்முறைகளினால் ஏற்படும் சேதங்கள் தற்போதைய சூழ்நிலையில் குறைவடைந்திருந்த போதிலும் கூட இயற்கை இடர்கள் இன்னமும் துரத்திக்கொண்டிருக்கின்றன.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# உலகக் கோப்பை இறுதிப் பரபரப்பு

ICC Cricket World Cup 2011

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

## வீழ்வது எழுவதற்கே




உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கால் இறுதிப் போட்டிகளுடன் வீடு திரும்பும் நாடுகள் நான்கு. மேற்கிந்தியத் தீவுகள் அணி, தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா. இவற்றுள் கால் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் மேற்கு இந்தியத் தீவுகளை பத்து விக்கெட் வித்தியாசத்தில் பரிதாபமாகத் தோற்கடித்தமை மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் எதிர்காலத்துக்கு அவ்வளவு மகிழ்ச்சியானதாக ஒன்றுமில்லை. இதுபற்றி மேற்கிந்திய அணியின் பயிற்சியாளர் ஒட்டிஸ் கிப்சன் மிகக் கோபமாக உள்ளார். குறிப்பாக அனுபவ வீரர்கள் மீது அவர் கோபம் பாய்கிறது. உண்மையில், இம்முறை நடைபெறும் போட்டிகளில் புரட்டிப் போடும் பல ஆட்டங்களில் இடம்பெற்றன. ஆனால் அப்படியான பதிவுகள் எதையும் மேற்கிந்தியத் தீவுகள் அணியால் ஏற்படுத்த முடியவில்லை என்பதே உண்மை. பயிற்சியாளர் தன் விமர்சனத்தில் அணியின் மூத்த வீரர்கள் சரிவரத் தம் பொறுப்புக்களை நிறைவேற்றவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறார். மூத்த மற்றும் பிரபல்யமான கிறிஸ் கெய்ல் எடுத்த மொத்த ஓட்டங்கள் 170 மட்டுமே. சந்தர்போல் 114, ராம் நரேஷ் சர்வான் 115, அதிரடி வீரர் கிரோன் பொலாட் 180. இவர்களின் பொறுப்பற்ற ஆட்டமே மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆட்டம் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீழ்ச்சிக்குக் காரணங்களாகக் காட்டப்படு கின்றன. அதோடு அடுத்த மாதம் பாகிஸ்தான் அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடருக்காக மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்ல இருக்கின்றது. இப்போதுள்ள அணியை வைத்துக் கொண்டு பாகிஸ்தான் தொடரை எவ்வாறு எதிர்கொள்வது என்பது இப்போது பயிற்சியாளருக்கும் மேற்கு இந்திய அணித்தேர்வாளர்களுக்கும் புதிததாக ஏற்பட்டுள்ள தலைவலியாகும். பாரிய மாற்றங்களை எதிர்பார்க்கும் தருணம் வந்துவிட்டது என்று கடுமையாகவே பயிற்சியாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க ஒற்றுமையின்மை, கட்டுக்கோப்பு இன்மை, பொறுப்புணர்ச்சி இன்மை, அணியின் நலனுக்கு அப்பால் வீரர்களின் சுயநலம் சார்ந்த பொருளாதார ஆசை சிந்தனை எல்லாம் சேர்ந்துதான் மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட்டை அழித்துவிட்டன என்பதே உண்மை. பிராங்க் வொரல், கிளைவ் லொயிட் போன்றோர் காலத்தில் இருந்த மேற்கி ந்திய தீவுகள் அணியை இப்போது நினைக்கும் போது ஒப்பீட்டளவில் மிகவும் வேதனையாக இருக்கிறது என்று சுனில் கவாஸ்கர் கூறியுள்ள கருத்து மிகவும் சரியானதே.

ஒருபுறம் அமெரிக்க பேஸ்போல், பாஸ்கட் போல் -ஏன் உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுக்காக கிரிக்கெட்டை விட்டு, நாட்டை விட்டு வளம் கொழிக்கும் அமெரிக்காவை நாடிச் செல்பவர்கள் மே.இந்திய தீவு கிரிக்கெட் வீழ்ச்சிக்கு ஒரு காரணம்தான். ஆனால் கிரிக்கெட்டை நேசித்து அதனுடன் வாழ விரும்புவர்கள் கூட, கிரிக்கெட்டின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருப்பதுதான் மிகத் துயரமான கதை.

## இருளில் இருந்து வெளிச்சத்துக்கு




உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் தொடர்ச்சியாக கால் இறுதிப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. இவ்வேளையில் எல்லோரது கவனத்தையும் ஈர்த்த அணி எதுவென்றால் அது பாகிஸ்தான் அணி தான். நியூசிலாந்து, இந்தியா, மற்றும் பாகிஸ்தான், இலங்கை ஆகிய கால் இறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்ற அணிகள் இயல்பான நிலையில் தகுதி பெற்ற அணிகள் இயல்பான நிலை யில் உலகக் கிண்ணப்போட்டிகளில் கலந்துகொண்டவை. ஆனால் பாகிஸ்தான் அணி அப்படி அல்ல. சுற்றுப் போட்டி தொடங்குவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன், தனது முன்னணி வீரர்களான சல்மான்பட், மொகமட் ஆசிப், மற்றும் மொஹமட் ஆமீர் மூவரையும் அணி இழந்திருக்கிறது. இதேவேளை என்ன காரணத்தாலோ அனுபவம் நிறைந்த மொகட் யூசுப் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மேலும் பாகிஸ்தான் வீரர்கள் பதினைந்து பேரின் பெயர்கள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் அணித்தலைவர் யாரென்று அறிவிக்கப்படாத நிலை யில், இத்தகைய அழுத்தங்கள் மத்தியில்தான் பாகிஸ்தான் உலகக் கிண்ணப் போட்டிக்குள் காலடி எடுத்துவைத்திருக்கிறது.

ஆனால் யாருமே எதிர்பாராத வகை யில் சாஹிட் அப்ரிடி அணித்தலைமை ஏற்று அணியை வழிநடத்திச் செல்ல, எங்கேயோ ஒரு மூலையில் ஒதுக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட பாகிஸ்தான் அணியினர் தாங்கள் யாரென்பதை கிரிக்கெட் உலகத்துக்குக் காட்டியுள்ளார்கள். கடந்து போன ஆட்டங்கள் எல்லாம் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் மகத்தான புதிய வரலாறு.

1992 இல் உலகக் கிண்ணம் வென்றவர் பாகிஸ் தான் அணித்தலைவர் இம்ரான்கான். இப்போதைய பாகிஸ்தான் அணியில் இல்லை என்பது உண்மைதான். இப்போது அரைஇறுதிப் போட்டியில் பாகிஸ்தான் சந்திக்கப் போகும் அணி இந்தியா. இந்திய மண்ணில் இந்தியாவைக் கவிழ்க்க அப்ரிடியால் முடியுமா? இந்திய அணி இந்த இறுதி நேரத்தில் உலகக் கிண்ணத்தை வெல்லும் என்று ஊரளவில் ரசிகர்களால் தீர்மானிக்கப்பட்ட அணி. அதுவும் சிறிது பின்னடைவு கண்ட வீரர்களும் தகுதி நிலையில் உச்சம் கட்டிக் கொண்டிருக்கும் நேரம். எனவே வீறுகொண்டு எழுந்திருக்கும் பாகிஸ்தான் எல்லாவிதமான கணிப்புகளையும் சரிவர மேற்கொண்டு, சரியான முறையில் இந்தியாவை எதிர்கொள்ளும் என்று நம்பலாம். இதேவேளை அடுத்த உலகக் சாம்பியன் பாகிஸ்தானா என்ற கேள்வி அடுத்த ஆட்டத்துடன் முடிவடைந்து போகக்கூடும். எது எவ்வாறாயினும் இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் இருளில் இருந்து வெளிப்பட்டு ஒளிவீசிய அணியென்றால் அது பாகிஸ்தான் அணிதான் என்றால் அதில் மிகையில்லை.

## திரும்பிப் பாருங்க



ஒருபுறம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் நாங்கள் மூழ்கி இருக்க அப்பால் எங்கள் ரசனைக்குக் குறைவில்லாத வேறு பல விளையாட்டு நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக நாம் விரும்பும் ரெனிஸ் மற்றும் உதைபந்தாட்டம் போட்டிகள் நிறையவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த வாரம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற இந்தியானா வெல்ஸ் சாம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டிகளில் டென்மார்க் நாட்டின் கரோலின் வொஸ்னியாக்கி கிண்ணம் வென்றிருக்கிறார். பதினான்காவது WTA கிண்ணமாக இது அவருக்கு அமைந்தது. இங்கு அவரி டம் தோற்றவர் பிரான்சிஸ் மரியன் பார்டோலி. 2010 இலும் இப்போட்டியின் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற இவர் சேர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச்சிடம் தோல்வி கண்டவர். ஆனால் இம்முறை கிண்ணம் வென்ற இவர் கடந்த மாதம் டுபாய் சம்பியன் ஷிப் போட்டிகளிலும் கிண்ணம் வென்றவர். உலகத் தரைவரிசை ஒன்றில் இருக்கும் வொஸ்னியாக்கி மொத்தம் 14WTA மற்றும் 4 ITF கிண்ணங்கள் வென்றவர். தரவரிசை ஒன்றில் இருக்கும் இவர் இதுவரை எதுவித Grand Slam வெற்றிகளும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வொஸ்நியாக்கியைப் பொறுத்த வரை நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டி களிலும் இரண்டாம், மூன்றாம் சுற்றுவரையில் முன்னேறியிருந்தாலும் இவரது திறமை கிராண்ட் ஸ்லாம் வெல்லுமளவிற்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வருடத்தில் இவர் ஏதாவது ஒரு கிராண்ட் ஸ்லாம் வெல்வாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மனதுக்கு நிம்மதி

அரட்டை அடிப்பது என்றால் நமக்குள் இயல்பாகவே ஆனந்தம் ஊற்றெடுக்கிறது. நான்கு பெண்கள் கூடிவிட்டால் புறணி பேசத் தொடங்கி விடுவார்கள் என்று சொல்வதுண்டு. ஆண்கள் கூடினாலும் அப்படித்தான். ஆனால் இங்கு நாம் சொல்ல வரும் விஷயம் அர்த்தமற்ற அரட்டையைப் பற்றியதல்ல.

தினமும் புதிய புதிய மனிதர்களை சந்திக்க வேண்டி இருக்கிறது. பணி செய்யும் இடம், நடந்து செல்லும் வழி, பயணம் என ஒவ்வொரு சூழலிலும் பலவிதமான மனிதர்களை சந்திக்க வேண்டி இருக்கிறது. அலுவலகங்களிலோ ஆணும், பெண்ணும் இணைந்து செயல்பட வேண்டி இருக்கிறது. அப்படி இருக்கும்போது உறவுகள் நீடிக்கவும், உறவுகள் பெருகவும் மென்மையான சின்னச்சின்ன பேச்சுக்கள் அவசியமாகின்றன.

நல்ல முறையில் படித்து, நாரிகமாக உடை அணிந்து செல்வோர்கூட புதிய மனிதர்களிடம் பேசவும், பழகவும் கூச்சப்படுவது உண்டு. கௌரவக் குறைச்சலாக எண்ணுபவர்களும் இருக்கிறார்கள். பேச்சு கொடுப்பதும், பேசி ஞானத்தை, நட்பை வளர்த்துக் கொள்வதும் நிச்சயமாக ஒரு கலைதான்.

பணிச்சூழலோ, பொது இடமோ கனிவுடன் பேசுபவர்களுக்கு தனி மதிப்பு கிடைக்கும். இதற்கு முதலில் கூச்சத்தை விட்டொழிக்க வேண்டும். புதிய மனிதர்களை சந்திப்பதாக இருந்தால், நான் இங்கு உங்களை அடிக்கடி பார்க்கிறேனே, என் பெயர், என்று அறிமுகத்துடன் பேச்சைத் தொடங்கலாம். உங்களை சந்தித்ததில் பெருமிதம் கொள்கிறேன், இன்று என்ன சிறப்பு? என்று ஆரம்பிக்கலாம். அலுவலகத்தில் பேசத்தொடங்கும் போது, நீங்கள் எந்தப் பிரிவில் வேலை செய்கிறீர்கள், எங்கிருந்து வருகிறீர்கள், பயண நேரம் எவ்வளவு? என்று பேச்சுக் கொடுக்கலாம்.

குழுவாக இருக்கும்போது கூச்சப்பட்டு எதுவுமே பேசாமல் இருக்கக்கூடாது. சாதாரணமாக இருந்தாலும் ஒரு சில கேள்விகளை கேட்கலாம். அது மற்றவர்கள் உங்களை கவனிக்க வைக்கும். பழகும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும். அதுபோல உங்களிடம் யாராவது பேச்சுக் கொடுத்தாலும், ஒன்றுமில்லை என்று ஒரு வார்த்தையில் பேச்சை முடித்துக் கொள்ளாதீர்கள்.

> **தினமும் புதிய புதிய மனிதர்களை சந்திக்க வேண்டி இருக்கிறது. பணி செய்யும் இடம், நடந்து செல்லும் வழி, பயணம் என ஒவ்வொரு சூழலிலும் பலவிதமான மனிதர்களை சந்திக்க வேண்டி இருக்கிறது. அலுவலகங்களிலோ ஆணும், பெண்ணும் இணைந்து செயல்பட வேண்டி இருக்கிறது. அப்படி இருக்கும்போது உறவுகள் நீடிக்கவும், உறவுகள் பெருகவும் மென்மையான சின்னச்சின்ன பேச்சுக்கள் அவசியமாகின்றன.**

புதியவர்களுடன் பழக ஆரம்பிக்கும்போது நம்பிக்கை இல்லா தன்மையுடன், அல்லது வேண்டா வெறுப்பாக பேசுவதாக எண்ணிக் கொண்டு சிடுசிடுப்பாகவும், சில விஷயங்களில் பிடிவாதமும் காட்டுவது உங்களைப் பற்றிய தவறான தோற்றத்தை உருவாக்கி விடக்கூடும். அது பின்னால் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தலாம். மென்மையாகப் பேசுங்கள். நான் சொல்வது உண்மை என்று நம்ப வைக்கும் முயற்சியில் ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கொண்டு இருக்காதீர்கள்.

நிகோலஸ் போத்மேன் என்பவர் தன் நூலில், "மக்களில் 90 சதவீதத்தினர் மற்றவர் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனிப்பதில்லை. ஆனால் அவர்கள் செய்வதையும், எப்போது என்ன செய்வார்கள் என்பதையும் கவனிக்கிறார்கள்" என்கிறார். எனவே ஒருவரது உடல் அசைவுகளும், செய்கைகளும் பேச்சுத் திறமைக்கு மிக முக்கியமானது. நீங்கள் கருத்துச் செறிவுடன் பேசும்போது அங்க அசைவிலும் கவனம் செலுத்துங்கள்.



# மகிழ்ச்சியாய் வாழ...

ஒருவருடன் பேசும்போது அவருக்கு பக்கவாட்டில் நின்றோ அமர்ந்தோ பேசுவதை தவிர்த்து விடுங்கள். நேருக்கு நேராக இருந்து கண்களைப் பார்த்தபடி பேசுங்கள். அப்போதுதான் உங்கள் பேச்சின் பிரதிபலனை உணர முடியும்.

பேச்சினை எப்போது நிறுத்த வேண்டும் என்பதுவும் பேச்சுத்திறமையில் குறிப்பிடத்தக்க விஷயம். வளவளவென்று பேசிக் கொண்டிருந்தால் கேட்பவருக்கு சலிப்பு வந்துவிடும். கேட்டுக் கொண்டிருப்பவர் உங்கள் பேச்சை விரும்புகிறாரா என்பதை சில விஷயங்களை வைத்து கணித்து விடலாம். "ஓ அப்படியா, நன்றாக இருக்கிறது? தொடர்ந்து சொல்லுங்கள்" என்றால் அவர் விருப்பத்துடன் கேட்கிறார் என்று பொருள். சரி, அப்படியா, சரி வேற என்று கூறினால் அவருக்கு உங்கள் பேச்சில் விருப்பமில்லை என்று அர்த்தம்.

அவர் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு இருப்பதும், கை, மூக்கு, தலையை சொரிந்து கொண்டு இருந்தாலும், நடக்கும்போது கால்களை தரையில் உரசியபடி நடந்து வந்தாலும் உங்கள் பேச்சில் நாட்டமில்லை என்று பொருள். எனவே கவனித்து கனிவாக பேசுங்கள். நட்பும், மகிழ்ச்சியும் நாளும் பெருகும்!

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 413

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | |
| | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | | 28 | | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

01.திருக்குறளிலுள்ள அதிகாரமொன்று.

07.பெண் என்றும் பொருள்படும்.(குழம்பியுள்ளது)

11.வேதம் என்றும் கூறலாம்.(திரும்பியுள்ளது)

13.எறும்பினங்களில் ஒன்று.(குழம்பியுள்ளது)

22.ஏழு வகைப் பெண்களில் இருபத்தைந்து வயதுடையவள்.(குழம்பியுள்ளது)

31.முறம் என்ற சொல்லின் ஒத்தகருத்து.

35.போதை தருவது.(திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01.நீராகாரம் என்றும் கூறலாம்.

02.வாழ்வில் உயர்வுபெற இதுவும் அவசியம்.(குழம்பியுள்ளது)

03.ஏழ்மை என்றும் கூறலாம்.(குழம்பியுள்ளது)

11.அதிகாலைப் பொழுது என்றும் பொருள்படும்.(திரும்பியுள்ளது)

22. அக்கினி அல்லது குதிரை என்றும் கூறலாம்.(திரும்பியுள்ளது)

24.வயது என்றும் கூறலாம்.(குழம்பியுள்ளது)

25.இலைகள் மீது காணப்படும் சொறிவை ஏற்படுத்தும் தன்மை.(திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 14.04.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-413
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.411க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.ஏ.சீ.எஸ்.எஸ்.ஹமீட், 12, சுலைமான் ரெரேஸ், கொழும்பு -05


**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை
02. அ.சந்தியாகோ, செமனிரிவத்த ரோட், தென்னக்கும்புர, கண்டி.
03. ஆர்.சீனோன் அஞ்சனா, கண்டி
04. T.X. மோகன்ராஜ், புகையிரத நிலைய வீதி, மன்னார்.
06. N.பர்ஹானா, 2ம் வட்டாரம், எருக்கலம்பிட்டி.
07. சு.சுதாகரன், தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்
08. எஸ்.வதனிகா, பூவரசங்குளம், வவுனியா.
09. க.சங்கவி,14, மகாவித்தியால மாவத்த, கொழும்பு-13
10. ம.யசீந்தன், கடற்கரை வீதி, திருகோணமலை

## குறுக்கெழுத்துப் போட்டி 411- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 எ | 2 கி | 3 ப் | 4 து | | 6 கா |
| | 8 டு | | 10 பி | 11 வு | 12 ரி |
| 13 டி | 14 வ | 15 வ | 16 ம் | | 18 கை |
| | | 21 த | | | |
| 25 கா | | 27 ளை | | | 30 ன் |
| 31 ளி | 32 பா | | 34 ல் | 35 ட | 36 ஊ |

# நிறம் மாற்றும் பேனா




இவ்வுலகில் நாளுக்கு நாள் தொழில்நுட்பங்கள் வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. அதற்கு இந்த பேனா ஒரு உதாரணம். இதன் பெயர் கலர் பிக்கர். இதனை வடிவமைத்தவர் கொரியாவைச் சேர்ந்த ஜின்சன் போர்க். இந்த பேனாவின் சிறப்பம்சம் நிற சென்சர்தான். அதை இயக்கும் பட்டன், தேர்ந்தெடுத்த நிறத்தைக் காட்டும் பகுதி, பேனா முனை, ஆர்.ஜி.பி மையை சேமிக்கும் இடம், ஆர்.ஜி.பி சென்சர் என வியக்கத்தக்க தொழில்நுட்பப் பகுதிகள் உள்ளன. விரும்பிய நிறத்தைப் பெற அதற்கான பொருளின் முன், கலர் சென்சரைக் காட்டி ஸ்கான் பட்டனை அழுத்த வேண்டும். உதாரணமாக அப்பிள் அருகே சென்சரை காட்டியபடி ஸ்கான் பட்டனை அழுத்தினால் விநாடியில் அப்பிளின் நிறம் ஸ்கான் ஆகிவிடும். நிற டிஸ்பிளே பகுதியில் அந்த நிறம் தெரியும். அதன் பிறகு பேனா முனையில் எழுதினாலோ அல்லது வரைந்தாலோ அப்பிள் நிறத்தில் மை வெளிவரும். ஸ்கான் செய்யப்பட்ட நிறத்தை ஆர்.ஜி.பி கலர் சென்சர் கிரகித்து அதே நிறத்தில் மையை கலந்துவிடும். இதனால் விரும்பும் நிறத்தை துல்லியமாக பெற முடியும். இனி ஓவியத்தில் தேவையான நிறத்தைப் பெற வேட்டர் கலர்களை கலந்து கொண்டிருக்க தேவையில்லை.




**ப்ரமோத்தும் அகல் யாவும் தனியாக டில்லிக்குப் போவதை அறிந்த அவர்களின் நண்பர்கள் இருவரையும் பகிடி பண்ணி நக்கலடித்தார்கள். இவர்கள் பயணம் ரகுவிற்கு பொறாமையாகவும் இருந்தது. கிண்டல் பண்ணினான். இதனால் இருவரிடையேயும் கைகலப்பு ஏற்பட்டது.**

இருவருமே கட்டுப்பாட்டை மீறிய நிலையில்,

"உன்னைக் கொல்லாட்டி என் பெயர் ரகு இல்லையடா?" என்று ரகுவும்,

"வாடா உன்னை துண்டு துண்டாய் கிழிக்கிறன்" என்று ப்ரமோத்தும் உரத்த குரலில் கத்த"

"நீ எதுக்கு அழுகிறாய் அகல்யா" என்றான் சீனு.

"இதெல்லாம் சகஜம்"

"என்னையே குழப்பிட்டாங்கள். நான் டில்லி போகேல்லை"

"இருவரும் விரோதமாய் பார்த்துக் கொண்டிருக்க... சுகவனம் என்பவன் மாணவர் தலைவர் இளங்கோவைனை அழைத்துவர, அவர்கள் இந்த இருவரையும் சமாதானப்படுத்தி ஐஸ்கிரீம் கடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

"இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமலேயே கை குலுக்க வைத்தார்கள். எல்லோருக்கும் ஐஸ்கிரீம் வாங்கினார்கள். இளங்கோவன் வாங்கிக் கொடுத்தான்.

"அகல்யா சாதாரணமாக ஐஸ்கிரீம் சாப்பிட மாட்டாள். ஆனால் அன்று அவளுக்கும் ஐஸ்கிரீம் பிடித்திருந்தது."

கொஸ்ரலில் அவளுக்கு போன் வந்தது. குட்டி நான் தான் அப்பா பேசுறன்"

"என்ன வேணும்?"

"எப்படியிருக்கிறாய்?"

"நல்லாயிருக்கிறேன்"

"பணம் கேட்டாயாமே, கம்பியூட்டர் படிக்கிறதுக்கு."

"யார் சொன்னாங்க?"

"சுந்தரேஷன்தான்"

"மாமா கொண்டு வந்தது உங்க பணமா?"

"இல்லையில்லை... இனிமேல் பணம் வேணுமெண்டால் என்னைக் கேக்கிறதில என்ன தயக்கம் உனக்கு?"

"எனக்கு உங்க பணம் வேண்டாம். உங்க சாவாசமும் வேண்டாம்"

"இன்னும் கோபம் போகல்லையா? என்ன இருந்தாலும் என் பொண்ணுதானே... ரோஷம் எங்க போகும்... என் உதவி தேவைப்படும் உனக்கு... எப்ப தேவைப்பட்டாலும் யோசிக்காதே"

"தாங்ஸ்... போனை வைக்கவா? போன் யூஸ் பண்ண கன பேர் காத்திருக்கினம்" பதிலுக்குக் காத்திருக்காமல் போனை வைத்துவிட்டாள்"

"மாடிப்படி ஏறி தன் அறைக்குச் செல்லும் போது அவள் மனம் கனத்தது"

"செத்தாலும் உன்னிட்ட வரமாட்டேன்டா"

"அகல்யா... என்ன உனக்குத் தெரியும். என் சுபாவம் உனக்கு தெரியும். ஒருத்தி என்னை போல புருஷனை விட்டுவிட்டு இருபது வயசு மூத்தவன் பின்னால போறாள் எண்டால் எப்படியான நிலை இருக்க வேணும் யோசிச்சுப் பாரு!"

"எனக்கு அது பற்றிக் கவலையில்லை. நீ செய்தது தப்பு. அவ்வளவுதான்! இனி உன் மூஞ்சையில முழிக்கமாட்டன்"

"இப்ப உனக்கு விளங்காது... பொறுக்கவே முடியாமல் தான் இப்படிச் செய்தேன். அதை மட்டும் ஞாபகம் வைச்சுக் கொள்..."

*****

கடைசி நிமிடத்தில் டில்லிக்கு ப்ரமோத்தால் போகமுடியவில்லை. அவனுக்குப் பதிலாக சுக்ரீதா என்கின்ற மாணவியைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அகல்யாவுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. டில்லியில் போய் ஏறக்குறைய தமிழ் சினிமாக் காதலர்கள் போல் சுற்றலாம். விதம் விதமாக ஆடையணிந்து பாடலாம் என்றாள் இந்த சுக்ரீதா.

"என்னாச்சுப் ப்ரமோத்." புறப்படும் முன் அவனைச் சந்திப்பதே பெரிய காரியமாக இருந்தது.

"பாஸ்கட் போல் மச் வந்திட்டுது... கேரளாவுக்குப் போகணும். அதைவிட்டுட்டு வர முடியேல்லை"

"உனக்கு பாஸ்கட் போல்தான் முக்கியமா?"

"நான் தான் கப்ரன் கண்ணு"

"நாசமாயப் போ"

"பாரு அகல்யா, எனக்கு முக்கியம் இரண்டு... ஒண்டு நீ. இண்டாவது அமெரிக்கா போறது. அதுதான் இப்ப என் வாழ்க்கையில முக்கியம். கோச்சிங் கிளாசில வேற சேர்ந்திருக்கிறன். மேலும் நாங்க இரண்டு பேரும் தனியா போறதெண்டா ஏகப்பட்ட ப்ரப்ளெம். ஏற்கனவே இந்த ரகு பயங்கரமாய் கதை கட்டி விட்டிருக்கிறான்."

"நம்ம இரண்டு பேருக்குள்ளேயும் ஒண்டுமே இல்லையா?"

"இருக்கா என்ன?"

" என்ன நீ பேசிறாய்..."

"விளங்கேல்லை. அகல்யா பாரு... நான் சில சமயத்தில தண்ணியடிச்சிட்டு கொஞ்சம் தப்பா நடந்தது என்னவோ உண்மைதான். அதை வைச்சுக் கொண்டு என்னை வெருட்டிற எண்ணமிருந்தால் இப்பவே சொல்லிடு."

"என்ன சொல்லுறாய் ப்ரமோத்? நான் உன்னை வெருட்டிறனா? அந்த வார்த்தைக்கு சரியாய் அர்த்தம் கூடத் தெரியாது."

"அப்பிடி எண்டால் சும்மாயிரு. நாங்க இரண்டு பேரும் ப்ரெண்ட்ஸ். அவ்வளவுதான்... காதல் கீதல் எல்லாம் பிறகு பார்க்கலாம்."

"போடா... என் மனதையே கெடுத்திட்டாய்"

"அதுக்கு நான் என்ன செய்ய முடியும்... ஆம்பிளையளே இப்படித்தான் எண்டு தத்துவம் பேசவா?"

அகல்யாவிற்கு டில்லி போகவே பிடிக்கேல்லை. அழுகைஅழுகையாக வந்தது. காய்ச்சல் போல உணர்ந்தாள். தொண்டை வேற கரகரத்தது. கொஸ்ரலுக்குப் போனதும் ப்ரமோத்திடம் இருந்து ரெலிபோன் வந்தது.

"சொறி... பின்நேரம் கொஞ்சம் கூடப் பேசிட்டன். நானும் உன்னைக் காதலிக்கிறேன்... என்ன அப்பப்ப கொஞ்சம் குழம்புறன், குழப்புறன்."

"இதேவேலை உனக்கு... எதையாவது தூக்கியெறிஞ்சு பேசுறது... அப்புறம் மன்னிப்பு கேக்கிறது."

"அகல்யா... நானும், நீயும் நெருக்கமாய் பழகின சந்தர்ப்பங்களில நான் நிலைமையை பயன்படுத்தியிருக்க முடியும். அப்பிடியில்லாமல் நான் மோசமாய் நடந்ததே இல்லை."

"எங்களுக்குள்ள செக்ஸ் எதுவும் நடக்க வேயில்லை என்கிறாய்... அதுதானே?"

"அதுதான்."

"அது எனக்கே தெரியும்"

"தப்பாய் நினைக்காதை அகல்யா."

"தப்பாய் நினைச்சுக்காதை."

இதை யார் சொன்னார்கள் எண்டு சுறுக்கென்று யோசித்தார்கள்.

**இன்பம் தொடரும்**

**இவ்வாரச் சிறுகதை**



**மாவியூர் உ. நிருஜன்**

# இணைந்த நெஞ்சங்கள்...!

காலை எழுந்து தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் வேலைக்கு செல்வதற்கு தரன் ஆயத்தமானான். தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு கம்பனி நோக்கி புறப்பட்ட அவன் தனது கம்பனியை சென்றடைய காலை 8.00 மணி ஆகிவிட்டது. அவனைக் கண்டதும் அவனுடன் வேலை செய்யும் சக ஊழியர்கள் Good morning Sir என்று சொல்ல அவனும் Morning என்று சொல்லிக் கொண்டு தனது அறைக்குச் சென்றான். தனது வேலைகளை திறமையாகவும் நேர்த்தியாகவும் செய்த தரனுக்கு அவனையறியாமல் அந்தக் கம்பனியின் கணினி பகுதியை நோக்கி ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. ஆம்! அங்குதான் புதிதாக அன்று வேலைக்கு சேர்ந்த கவிதாவின் அழகும், அவளுடைய சிரிப்பும் அவனுள் ஈர்க்க வைத்தது. அவள் சக ஊழியர்களுடன் அன்பாக பேசும் பேச்சும் அவனுக்கு பிடித்துவிட்டது. யாரும் இல்லாமல் தனிமையாக வாழும் தரனுக்கு ஒருவித சொந்தமாக அவளை நினைத்து கொண்டான். அவள் மீது தனிப்பட்ட ஒரு அன்பினை உருவாக்கியது.

அன்று இரவு அவளையே நினைத்துக் கொண்டு தூங்கிய தரன் காலையில் எழுந்து தனது கடமையினை செய்துவிட்டு வேலைக்கு புறப்பட்டான். கம்பனிக்கு வருவதற்காக வரும் வழியில் பஸ்ஸிற்காக காத்திருக்கும் கவிதாவைக் கண்ட தரன் உடனே மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, நானும் கம்பனிக்குத்தான் போகிறேன். நான் உங்களை இறக்கி விடுகிறேன் என்று அவளைக் கேட்டான். முதலில் மறுத்த கவிதாவுக்கு அவனுடைய அன்பும், அவனுடைய பணிவும் அவளுக்கு பிடித்துக் கொண்டது. சரி என்று சொன்னதுதான் தாமதம் தரன் கவிதாவை ஏற்றிக் கொண்டு கம்பனி நோக்கி புறப்பட்டான். இவ்வாறு இவர்களுடைய பழக்கம் நட்பாக மலர்ந்து தொடர்ந்து காதலாக மாறி ஊற்றெடுத்தது.

இருவரும் ஒருவருக்கொருவர் தெரியாமலே இவர்களது காதல் மலர்ந்தது. தரன் ஒரு நாள் கம்பனி முடிவடையும் நேரம் வந்ததும், கவிதாவைக் கூப்பிட்டு நான் உங்களிடம் ஒரு முக்கியமான விடயம் ஒன்று பற்றி கதைக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை பக்கத்திலிருக்கும் பூங்காவில் உங்களுக்காக நான் காத்திருப்பேன். நீங்கள் கட்டாயம் வரவேண்டும் என்றான். அவளும் தலையசைத்துவிட்டு புறப்பட்டாள்.

ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. இருவரும் சந்தித்து கொண்டனர். தரனும் கவிதாவிடம் காதல் சம்மதத்தை பெற்றுக்கொண்டான். நெடுநேரமாக பூங்காவில் இருவரும் காதல் வார்த்தைகளை பரிமாறிக் கொண்டிருந்தார்கள். நேரமானது கூடத் தெரியாமல் தங்கள் அன்பைப் பரிமாறிகொண்டிருந்தார்கள்.

இரவு ஆகியும் இன்னுமும் வராத கவிதாவுக்காக அவளுடைய பெற்றோர் வீட்டுவாசலில் காத்து நின்றனர். திடீரென்று வீட்டு வாசலிலே மோட்டார் சைக்கிள் வந்து இறங்கிய கவிதாவைக் கண்டதும் அவர்கள் திகைத்து நின்றார்கள். அவளை வீட்டில் இறக்கி விட்டு போய்ட்டு வாறன் கவிதா என்று சொல்லி வீட்டிற்கு புறப்பட்டான். வீட்டிற்கு வந்த கவிதாவை அவளது அம்மா, யாரடி? அவன் என்று கேட்க, அவர் என்னுடன் வேலை ஒன்றாக வேலை பார்ப்பவர் என்று சொல்லிக் கொண்டு தனது அறைக்குள் சென்றுவிட்டாள். இருந்தும் எப்படியோ கவிதாவின் தந்தை மாணிக்கம் தனது நண்பர் மூலம் இவர்களுடைய காதல் விஷயத்தை அறிந்தவுடனே ஒரு முடிவுக்கு வந்தார். இவளுக்கு திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்ற நோக்கில் திருமணத் தரகரிடம் மாப்பிள்ளை பார்க்க ஜாதகத்தைக் கொடுத்தார்.

அந்த நேரம்தான் தரனுக்கும் அவனது கம்பனி அலுவலாக லண்டனுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய கவிதாவின் தந்தை அவளுடைய திருமணத்தை நடத்த முடிவு செய்தார். தனக்கு திருமணப் பேச்சு நடைபெறுகின்றது கூடத் தெரியாத கவிதா தரனைச் சந்திப்பதற்காக, அவர்கள் வழமையாக சந்தித்துக் கொள்ளும் பூங்காவில் தரனுக்காக காத்திருந்தாள். தரனைக் கண்டதும் இருவரும் லண்டன் பயணத்தை பற்றிப் பேசிக் கொண்டு இருந்தார்கள். கவிதா எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீர்தான் என் மனைவியாக வரவேண்டும் என்று கூறித் தனது வீட்டிற்குப் புறப்பட்டான்.

அடுத்த நாள் காலை தரன் லண்டனுக்கு பயணமானான். லண்டனுக்கு சென்றடைந்த தரனை பெரும் வரவேற்பினை ஏற்படுத்திய அந்தக் கம்பனி தரனின் திறமை யினைக் கண்டு அவனிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தது. அவன் ஒரு வருட ஒப்பந்தத்தில் அந்தக் கம்பனியில் பணியாற்ற சம்மதித்தான். இந்த விடயத்தை தனது கம்பனி நிர்வாகப் பணிப்பாளருக்கு தெரிவித்தான்.

கவிதாவுக்கும் இதுபற்றித் தெரிவித்தான். இவ்வாறு தரனும், கவிதாவும் தொலைபேசி மூலமாக காதலினை பரிமாறிக் கொண்டனர். சில காலம் சென்றவுடன் இவர்களுடைய தொலைபேசி உரையாடல் கவிதாவின் தந்தையினால் நிறுத்தப்பட்டது. திடீர் என்று ஊருக்கு வரமுடியாத நிலையும் ஒரு வருட ஒப்பந்தம் முடியும் வரை தனது காதலை மனதுக்குள் புதைத்து வைத்துக் கொண்டான்.

கவிதாவின் வீட்டில் அவளுடைய திருமணத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. இத்திருமணத்தில் கொஞ்சம் கூட விருப்பமில்லாத கவிதா பெற்றோர்களின் வற்புறுத்தலினால் திருமணத்துக்கு சம்மதித்தாள். திருமண நாளும் வந்தது. திருமண முகூர்த்த நேரத்தில் திருமண மண்டபத்துக்கு பொலிஸ் ஜீப் ஒன்று வந்து நின்றதும் அங்கிருந்தவர்கள் பொலிஸ் ஜீப்பினைக் கண்டு வியந்துவிட்டனர். அங்கு சென்ற பொலிஸார் இவன் பல பெண்களை பணத்துக்காக ஏமாற்றி திருமணம் செய்துள்ளான். அதனாலேயே இவனைக் கைது செய்கிறோம் எனக் கூறி கவிதாவின் மாப்பிள்ளையை கைது செய்த கொண்டு சென்றனர். அங்கிருந்த எல்லோரும் வாயடைத்துப் போய் நின்றனர். தனது மகளுக்கு செய்த துரோகத்தை நினைத்து மனம் நொந்து கொண்டார் தற்தை. அவர் இரு உள்ளங்களை பிரித்துவிட்டேன் என்ற குற்ற உணர்ச்சியால் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# பொன்மொழி




எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.

சுவாமி விவேகானந்தர்



கே.வி. குணசேகரம்



# பெய்யெனப் பெய்யும் மழை

**சங்ககாலத்தில்** வாழ்ந்த புலவர்கள் உலகில் உள்ள அனைத்துப் பொருட்களின் தன்மைகளையும் வேறெந்தப் புலவர்களும் சொல்ல முடியாதளவிற்குச் சொல்லிவிட்டார்கள்.

"அவர்கள் இயற்கை முழுவதையும் பெண்ணாக உருவகித்தனர். முக்கியமாக நிலம், ஆறுகள், கடல் போன்றவற்றையும் அழகான பொருட்களான மலர்களையும் பெண்களாகவே அவர்கள் நினைத்துப் பாடல்களைப் பாடினர். பண்டைய புலவர்கள் ஆற்றை, கடலை, பெண் என்று சொல்ல வள்ளுவர் ஆற்றையும், கடலையும் உண்டாக்கும் மழையைப் பெண் என்று சொல்கிறார்.

வள்ளுவர் சொல்லாதது எதுவும் இல்லை. அதில் அவர் பெண்களைப் பற்றிக் கூறாததும் எதுவும் இல்லை. 'பெண்ணின் பெருந்தக யா உள' என்பதன் மூலம் பெருமைகள் யாவும் கூறப்பட்டுள்ளன. அடுத்து வள்ளுவன் கூறுகின்றான். இதன் மூலம் மழையின் முக்கியத்துவத்தை விளக்கும் வள்ளுவன் அந்த மழை பெண் என்கிறான்.

குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் மழையைப் போல நிறைவேற்றுபவள் பெண் என்றும் அவளால்தான் குடும்பம் இயங்குகிறது என்றும் கூறுகின்றான். இத்தகைய பெண்ணைப் பற்றிப் பல்வேறு குறள்களில் புகழ்ந்த வள்ளுவன் ஒரு குறளில் மழையைப் பற்றி மிகவும் சிறப்பாகக் கூறுகிறான். மழை பெய்வதால் தான் உலகம் வாழ்கிறது. அதனால் மழை தான் அமுதம் என்கின்றான். உண்பவர்களுக்கு உணவாகவும், உண்ண உணவுகளை உண்டாக்கிக் கொடுப்பதும் மழை என்றும், மழை பெய்யாவிட்டால் உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் பசியால் மடிந்து விடும் என்றும் கூறுகிறான். இதைவிட மழை பெய்யாவிட்டால் பூமியில் பசும் புற்கள் யாவும் கருகிவிடும். அத்துடன் கோயில்களில் பூசை வழிபாடுகளும் நடைபெறமாட்டாது என்று அப்பெண்களது சிறப்பைக் குலைப்பானா?

"தெய்வம் தொளா அள் கொழுநன் தொழுது எழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறளுக்கு உரை எழுதிய அனைவரும், 'பிற தெய்வங்களை வணங்காமல் காலையில் எழும்போதே கணவனை வணங்கி எழுகின்றவள், பெய் என்று சொன்னால் மழை பெய்யும்' என்றே எழுதியுள்ளனர். இதில் கணவனுக்கு நிகராகத் தெய்வம் கூறப்பட்டுள்ளது. மாதா, பிதா, குருவைத் தெய்வமாகக் கொள்ளும்படி சொல்லும் இந்து சமயங்கள், தெய்வங்களைத் தொழுதுவிட்டு அல்லது மேற்கூறப்பட்டவர்களைத் தொழுதுவிட்டு தெய்வத்தையும் தொழுது தான் தமது கடமையைச் செய்யுமாறு சொல்கிறது. மாதா,பிதா, குருவை வணங்குமுன் தெய்வத்தை வணங்கித் தான் பாலர்காரிய மாற்றுகின்றனர். தெய்வத்தை வணங்காது கணவனை வணங்குவது தான் பெண்களுக்குச் சிறப்பென்றும், கடமையென்றும் ஒரு மாறுபட்ட குறளை வள்ளுவர் சொல்லியிருக்கமாட்டார்கள். பெண்கள் கடவுளை வணங்கத் தேவையில்லை என்ற கருத்தையே இக்குறள் வலியுறுத்துவதாக உரை எழுதுவோர் கூறியுள்ளனர். பெண்களுக்குப் பாதுகாப்பும், பராமரிப்பும் செய்பவன் கணவன். இருந்த போதும் புராண இதிகாசங்களில் பிள்ளைகள் இல்லாத கணவன் - மனைவிமார் தெய்வத்தைத் தொழுதுள்ளனர்.

பெண்கள் மழைக்கு ஒப்பானவர்கள் என்பதற்கு ஒரு கதை கூறுகின்றேன். கதிரேசன் ஒரு வறிய விவசாயி. அவரது சகோதரியின் கணவன் பெரும் குடிகாரன். அவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். கதிரேசன் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துத் தனது குடும்பத்தையும் சகோதரியின் குடும்பத்தையும் காப்பாற்றி வருகிறான். இதைவிடக் கதிரேசனது பெற்றோரும் கதிரேசனுடன் இருக்கிறார்கள்.

தொடரும்...

# சிந்தியா பதில்கள்

✉ யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மர்ம நபர்கள் நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறதே?

**கே.பிரசன்னா, யாழ்ப்பாணம்.**

● ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகப்பகுதிகளும் பல்வேறு துன்பங்களைச் சந்தித்துவிட்டது. உள்ளேயும், வெளியேயும் துன்பங்களுக்கு காரணமானவர்கள் இருந்திருக்கின்றார்கள். வரலாற்றுத் தொடர்ச்சி எதிர்காலத்திலும் அச்சத்திற்குரியதாக அப்பகுதியை மாற்றியிருக்கக்கூடும். அதைத் தொடரவிடாமல் இயல்பு சூழலை உருவாக்குவதற்கு உணர்ச்சிகளுக்கும், தனிமனித விருப்புவெறுப்புக்களுக்கும் இடமளிக்காமல், சம்பந்தப்பட்டவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும்.

✉ லிபியா மீது போர் தொடுத்திருப்பது கடாபியைக் கொல்லுவதற்காக அல்ல என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூறியிருக்கிறாரே?

**எம்.துவாரகன், வவுனியா.**

● அவர் சொல்வது சரிதான். லிபியாவில் கடாபியின் உயிரை விடவும் பெறுமதியானது அங்கிருக்கும் எண்ணெய் வளம்தான். அதைத்தான் ஒபாமா தோன்றா எழுவாயோடு கூறியிருக்கக் கூடும்.

✉ பேறிஞர் அண்ணாவினுடைய ஆவி தன்னிடம் கூறியதாலேயே ஜெயலலிதாவிடம் கூட்டணி வைத்துக்கொண்டுள்ளதாக தே.தி.மு.க தலைவர் விஜயகாந்தின் கருத்துப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**எஸ்.குலேந்திரன், திருகோணமலை.**

● விஜயகாந்திற்கு எதிராக நகைச்சுவை நாயகன் வடிவேலு களமிறக்கப்பட்டிருப்பதால் விஜயகாந்தும் அதற்கு இணையாக நகைச்சுவைக் கதைகள் சொல்லத் தொடங்கிவிட்டார்.

பேறிஞர் அண்ணா அவரது கட்சித் தொண்டர்களின் கனவுகளுக்கே வராதவர். விஜயகாந்துக்கு மட்டும் கனவில் வந்து ஜெயலலிதாவோடு கூட்டுச் சேரும்படி கூறினார் என்பது நம்பக் கூடியதாக இல்லை.

ஆக விஜயகாந்த் ஆவியின் கதைகேட்டு உயிரோடு இருக்கின்றவர்களை ஏமாற்றலாம் என்று நினைத்துவிட்டாரோ தெரியவில்லை. உயிரோடு இருக்கின்றவர்கள் கூறுவதைக் கேட்காதவர்கள் ஆவிகள் சொல்லுவதைக் கேட்கின்றோம் என்று கூறுவது வடிவேலை மிஞ்சிய நகைச்சுவை.

✉ யப்பானில் கதிரியக்கப் பரவல் வழமையைவிட பத்து மடங்கு அதிகரித்திருக்கிறதே?

**கே.முகிலன், மட்டக்களப்பு.**

● நாளுக்கு நாள் வருகின்ற அச்சமூட்டும் இவ்வாறான செய்திகளைக் கேட்க கவலையாகத்தான் இருக்கின்றது. இந்த அனர்த்தத்திலிருந்து விரைவில் ஜப்பான் தேசம் மீண்டுவரவேண்டும் என்று விரும்புகின்றேன்.

✉ விடாமுயற்சி, தன்னம்பிக்கை ஒருவரின் முன்னேற்றத்திற்கு எது தேவை என்பீர்கள்?

**எச்.எம்.எவ்.மஸ்னவி, புத்தளம்.**

● இரண்டும் அவசியமானவை. இவ்விரண்டோடு சகிப்புத் தன்மையும் இருந்தால் நீங்கள் நினைக்கின்ற இலக்கை அடைவது சற்று இலகுவாக இருக்கும்.



✉ இங்கிலாந்தின் கிரிக்கெட் வீரர்கள் வடக்கில் போரில் ஏற்பட்டுள்ள அழிவுகளைப் பார்த்து அதிர்ந்து போயுள்ளனராம்?

**எஸ்.கோகுலவேந்தன், தெஹிவளை.**

● மனிதநேயத்தோடு, யுத்தம் நடந்த பிரதேசங்களைப் பார்க்கின்ற எவருக்கும் அதிர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இவ்வாறு அழிக்கப்பட்ட எங்களது தேசம் ஆச்சரியம் தரும் வகையில் மீண்டும் கட்டியெழுப்பப்படுவதே அதிர்ச்சிகளுக்கான பரிகாரமாக இருக்கும். இல்லாவிட்டால் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் அழிந்துபோன தேசத்தை காட்சிப்பொருளாக வைத்திருப்பதில் என்ன நன்மை இருக்க முடியும். வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு பகுதியும் அதிர்ச்சியின் மையப் பகுதிகளாகவே உள்ளன. இவை எப்போது ஆச்சரியம்மிக்கதாக மாறப்போகின்றது என்பதை ஒவ்வொருவரிடமும் கேள்வியாக விட்டுவைப்போம்.

✉ சிந்தியா! உங்களைச் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த ஏதாவது பற்றி?

**மு.தயானந்தி, கொழும்பு-6**

● வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒவ்வொரு விநாடியும் அத்தகையதுதான். ஆனாலும் இவை இரண்டையும் வெளியில் தேடுகின்ற ஆர்வமும் அதை உங்களைப் போன்றவர்களின் கேள்விகளில் கண்டுபிடிக்கின்ற மகிழ்ச்சியும் அலாதியானது. அப்படிப் பார்த்தால் உங்கள் கேள்வி நிச்சயமாக சிந்திக்கவும், சிரிக்கவும் வைக்கின்றன.

✉ மனச்சாட்சி என்று கூறுகிறார்களே அது எது?

**எஸ்.கலாதத்தன், பருத்தித்துறை.**

● இந்தத் தேடல் என்னிடமும் உண்டு. என்னை நானே கேட்டுக்கொள்வதா? அல்லது மற்றவருக்காகப் பரிந்து கொள்வதா? எது என்று எனக்குப் புரியவில்லை. உயிர் என்கிறோமே அது கண்ணில் தெரியாதது போல கண்ணுக்குத் தெரியாத இன்னொரு விஷயமாக மனச்சாட்சியும் இருக்கக்கூடும். அப்படித்தான் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்கிறார்கள். □




**ஒன்றிணைந்து செயற்பட வருமாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு.**

**- பத்திரிகைச் செய்தி.**

'மனோ தம்பிக்கு இப்ப வருசமுற்கூறு சரியில்லாத காலமாகக் கிடக்குது. அட்டமத்தில சனியனும் அங்கால ஏழில செவ்வாயும் ஒண்டு கூடி எக்காளமாய் சிரிக்கிறதால இருந்த இடம்தேடி 'இனசன உறவுகள்' வருவது உனக்கு நல்லாயில்லையடாதம்பி. அதோடை கும்பத்தில கன்னி ராசி குறுக்கும் நெடுக்குமாத்திரியுறதால இராகுவுக்கும் கேதுவுக்கும் இராப்பகலா இடறுப்பாடுகள் வரும் கண்டியே! வன்னிச் சனங்களோடை ஒட்டியிருந்த பத்தில வியாழன் பதியை விட்டுக் கிளம்பிக்கொண்டு வந்து இப்ப மலைநாட்டோடை மல்லுக்கட்ட நிக்கிறது மட்டுமல்ல, உன்ர சனத்தின்ர மானத்தையும் வாங்க நிற்குது பொடியா! கவனம். ஹி.....ஹி.....ஹி... என்னடா தம்பி மனோ! இந்தக் கிழவிக்கு சாஸ்திரம் கூடத்தெரியுமெண்டு யோசிக்கிறியே? சிலபேருடைய அரசியல் நகர்வுகளையும், நாத்தமடிக்கிற கதையளையும் கேட்க சாஸ்திரம் படிக்கத் தேவையில்லை. அது ஊற்றெடுத்துப் பாயுமடா எங்களுக்குள்ளயிருந்து! ஹி.... ஹி.....ஹி.."

**ஊழல் மிகுந்த கருணாநிதியின் ஆட்சி ஒழிய வேண்டும்.**

**- செல்வி ஜெயலலிதா.**

"ஓகோ! ஏதோ உவதான் மட்டும் உத்தமியா நேர்மையா ஆட்சி நடத்தினமாதிரி உளறிக்கொட்டுறா. உந்த ஆடலழகி அபிநயசுந்திரி அந்த நேரம் தமிழ்நாட்டை ஆட்சி செய்யேக்கை தன்ர வளர்ப்பு மகனுடைய கலியாண வீட்டுக்கு செலவழிச்ச காசிருக்கே... கடவுளே! அந்தக் காசெல்லாம் எந்த வழியால வந்ததாம்? அசையும் சொத்து; அசையாச் சொத்தென 51 கோடியே 40 லட்சம் பெறுமதியான சொத்துப் பத்துக்களைச் சொந்தமாக்கின பொம்பிளைக்கு அடுத்தவனைப் பார்த்து ஊழல்கதையளும், ஊத்தைக்கதையளும் கதைக்கிறதுக்கு என்ன யோக்கியதை இருக்கு. இல்லை தெரியாமல்தான் கேட்கிறன். பிள்ளை என்ன எரிச்சலாக்கிடக்குது"

**தலைக்கு 'டை' பூசிய ஆசிரியையின் உடலில் நஞ்சு பரவியதால் ஆசிரியை மரணம்.**

**- பத்திரிகைச் செய்தி**

"அடி! என்னடி இது? காலங்காத்தால இழவுச் செய்தியும், இடர்பாடான செய்தியளையும் படிக்க வேண்டிக்கிடக்குது. மெய்யே உந்த வாத்திவேலை பார்க்கிற பொம்புளைக்கு நல்லது எது கெட்டது எதெண்டு தெரியாமல் கிடந்ததே? இளநரையோ முதுநரையோ ஆர் கண்டது? கடுமையா யோசிச்சாலும் தலைமயிர் நரைக்கும் எண்டு என்ர அம்மாச்சி சொல்லுறவ. பெட்டைக்கு என்ன யோசனையோ என்னென்ன பிரச்சினையோ ஆருக்குத் தெரியும். உந்தக் கேர்தாரியிலபோன மரந்துகளால கலியாணம் முடிக்காமல் இருக்கிற எத்தனை குமருகள் சவக்குழிக்குள்ள போகப்போகுதுகள்."

**சாவகச்சேரிப் பிரதேசத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதிப்பு.**

**- பத்திரிகைச் செய்தி.**

"வாகனத்துக்குப் பெற்றோல், டீசல் ஊத்தின கையோட, தங்களுக்கும் சாடையா 'தண்ணி' கொஞ்சம் உள்ளுக்கை ஊத்திப்போட்டு ஓடித்திரியினம் போல கிடக்குது. உப்பிடி ஓடித்திரியேக்கை எப்பன் காத்துப்பட்டவுடன் அதுகளுக்கு எல்லாம் கலகலப்பாத் தெரியத் தொடங்கியிடும். முன்னால வாற ஒரு வாகனம் மப்பில ரண்டு வாகனம் மாதிரித் தெரிய, ரண்டும் நடுவால விடுவம் எண்டு நினைச்சு விட்டுத்தான் உதுகள் வில்லங்கத்தை விலைக்கு வாங்குதுகள். அதுசரி! நெடுக உப்பிடியே தண்ணியடிச்சுப்போட்டு வாகனம் ஓட்டுறவையிட்டை அபராதம் எண்டு வசூலிச்சுக் கொண்டிருந்தால் எல்லாம் சரிப்பட்டு வருமே? நீதி வழங்கிற ஆட்களும் கொஞ்சம் சிந்திக்க வேணும் பாருங்கோ"

**ம.தி.மு.க பதுங்குவது பாய்வதற்கே!**

**- வை.கோபாலசாமி.**

"அந்த நாளேல இரா இருட்டுக்குள்ளால கடல்கடந்து வந்திட்டுப் போகேக்கை பின்னால ஒட்டிக்கொண்டுபோன 'வீரம்' இன்னும் விழேல்லைப்போல கிடக்குது சாமியாருக்கு. நாங்களும் உப்புடித்தான் ராசா வீராப்புப் பேசினனாங்கள். பதுங்கிறது பாய்வதற்கே... எண்டு சொல்லிப் போட்டு கடைசியில கிபிருக்கும் ஷெல்லுக்கும் பாய்ஞ்சனாங்கள். பதுங்குகுழிக்குள்ள. ஹி.....ஹ...ஹி... அது சரி சாமியார் நீங்கள் தமிழ்நாட்டில ஏன் இப்ப பதுங்குறியள் பாயுறதுக்கு? உங்கினேக்கையும் ஷெல்லுகள்... கிபிருகள் வருகுதேமோனை...?

**பொதுமக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு ஆயிரக்கணக்கானோரைக் கொல்வது காட்டுமிராண்டித்தனம்.**

**- நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம்.**

"தனக்குத் தனக்கெண்டால்தானாம் சுளகு படக்குப் படக்கெண்டு புடைக்குமாம்... அது சரியாத்தானே கிடக்குது. வன்னிச் சண்டேக்கை எவ்வளவு ஆயிரம் தமிழ்ச் சனம் இரண்டு பகுதியினராலும் செத்ததுகள். அப்ப உதே மாதிரி எங்கட வாயால ஒரு சொல்லுச் சொல்லியிருந்தால், தமிழ்ச் சனத்துக்கு எப்பன் ஆறுதலாக இருந்திருக்கும் கண்டியளே. அதைவிட்டிட்டு அவனொருவன் கொக்குவிலில் சண்டை நடக்க கோண்டாவிலில தன்ன கோவணத்தை இழுத்துக் கட்டுக்கொண்டு மல்லுக்கட்ட வெளிக்கிட்டமாதிரி... நீங்களும் எங்கையோ பிரச்சினை நடக்க என்னவோ எல்லாம் பேசிறியள். சரிபேசிப் போட்டுப் போங்கோ." "அரசியல்ல இதெல்லாம் சகஜம் ஆச்சி..." எண்டு சொல்லவாறியள் போலக்கிடக்குது என்ன! ஹி...ஹி...ஹி...ஹி..."

**அரசியல் தீர்வை வென்றெடுக்கும் திறமை கூட்டமைப்புக்கு உண்டா?**

**- பத்தி எழுத்தாளர் முத்துக்குமார் கேள்வி.**

"சரியான நேரத்தில சரியான கேள்வியைத்தான் தம்பிமுத்து கேட்டிருக்கிறார். இந்தக் கேள்வி கூட்டமைப்புக்கு வோட்டுப் போட்ட தமிழ்ச்சனங்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்கவேண்டிய கேள்வி இது. ஏனென்றால் செவ்வாய் குற்றப் பொம்புளைக்கு பேசி வாற கலியாணமெல்லாம் குழம்பிப்போக, கடைசியில ஒருத்தருக்கும் தெரியாமல் அமசடக்காப் பேசி முடிக்கிற மாதிரி, உதுகளின்ர அரசியல் தீர்வுக்கு செவ்வாய் தோஷம் பிடிச்சிருக்குப்போல கிடக்குது. உதுக்கு உப்பிடியே பேசிக் கொண்டிருந்தால் சரிவராது. அரசியல் தீர்வையும் வென்றெடுக்கேலாது. உதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு. சிகைப்பு மண்சட்டிக்குள்ள பசுப்பால் ஊத்தி அதுக்குள்ள கருநாகம்; செந்நாகத் தகடுகளை வைத்து 'நவக்கிரக நாயகர்களை' ஒண்டு தடவை சுற்றிவரவேணும். அப்பத்தான் தீர்வும் சரி... திருகுதாளங்களும் சரி ஏதாவது ஒன்று உருப்படும். ஒருக்காச் செய்து பார்க்கட்டுமன்.

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மௌனத்தின்...**

பூவைக் கீழே வைத்துவிட்டு எழுந்து போய்விட்டார்.

அவ்வளவுதான் பிரசங்கம் முடிந்துவிட்டது. ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எப்படி பிரசங்கம் நடந்ததாகச் சொல்ல முடியும்? அப்படித்தான், 'முடியும்' என்கிறது ஸென் சித்தாந்தம். புத்தகங்கள், பாராயணங்கள், உபதேசங்கள் மூலம் உண்மையைப் புரிந்துகொள்ள முடியாது. உண்மை என்பது மழைப் போல எளிமையானது. மழையைப் பார்க்கலாம், கேட்கலாம், உணரலாம். ஆனால் அதை விளக்க, மொழிபெயர்க்க முடியாது என்பது ஸென் சித்தாந்தத்தின் அடிப்படை.

கண்டபடி பேசாதிருந்தால் குறைந்தபட்சம் உங்கள் கன்னத்தையாவது பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை உணர்த்துகிற விதமாக ஒரு ஜோக். இதை பிரபல எழுத்தாளர் குஷ்வந்த் சிங் தன் கட்டுரையொன்றில் தந்திருக்கிறார்.

ஒரு கனவான் ஒரு ரோபோ வை விலைக்கு வாங்கினார். அந்த ரோபோவின் விசேஷம் என்னவென்றால், அதற்கு எதிரே யார் பொய் பேசினாலும் பொய் பேசியவரின் கன்னத்தில் அறைந்துவிடும். இது தன் வீட்டுக்கு அவசியம் தேவை என்று கருதினார் கனவான். ஏனென்றால் எடுத்ததற்கெல்லாம் பொய் சொல்லிக் கொண்டிருந்தான் அவர் மகன்.

வீட்டுக்கு ரோபோவை எடுத்துவந்து அதைப் பற்றிய விவரத்தையும் சொன்னார் கனவான். ஒருநாள் பையன் தாமதமாக வந்தான். கேட்டதற்கு, ஸ்பெஷல் கிளாஸ் என்றான். ரோபோ அவன் கன்னத்தில் விட்டது ஒரு அறை. அறை வாங்கிய பிறகுதான் உண்மையைச் சொன்னான் மகன். நண்பர்களுடன் சினிமாவுக்குச் சென்றிருந்ததாக.

உடனே கனவான் சொன்னார்: "டேய், உன்னை மாதிரி சிறுவனாக இருக்கும்போது நான் இப்படியெல்லாம் பொய்யே சொன்னதில்லை"

விழுந்தது அவர் கன்னத்திலும் ஒரு பளார்.

இந்த இரண்டையும் பார்த்த கனவானின் மனைவி சொன்னாள்: "பாருங்கள், உங்கள் பையனும் உங்களை மாதிரி தானே இருப்பான்?"

இப்போது யாரும் எதிர்பாராத விதத்தில் அவளுடைய கன்னத்திலும் விழுந்தது ஒரு அறை!

பேசத் தெரியாமல் இருப்பது முட்டாள்தனமே ஆனாலும், பேசி அதை அழுத்தமாக நிரூபித்து விடாமலிருப்பதில் சிறிதளவேனும் புத்திசாலித்தனம் இருக்கிறதுதான்!

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**வருமுன் காப்போம்...**

இதனை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தங்களை எல்லோரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து நிலவுகிறது.

2005ம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கைப் பேரழிவு செயலாற்றுச் சட்டம் இடர்கள் ஏற்படும் போது செயலாற்ற வேண்டிய வழிமுறைகளையும் அங்கீகாரங்களையும் விதந்துரைக்கின்றது. இந்தச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இடரை எதிர்கொள்ளும் போது கையாள வேண்டிய எல்லா வகையான வழிவகைகளும் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் இடர்களைத் தவிர்ப்பதற்கும் தடுப்பதற்கும் குறைப்பதற்குமான எல்லா வகையான வழிவகைகளையும் இடர் முகாமைத்துவப் பிரிவோடு இணைந்து செய்வதற்கு சிவில் சமூகம் முன்வரவேண்டும் என்பது முக்கிய விடயமாகும். இதன் ஒட்டுமொத்தமான இலக்குகள் இடர்முகாமைத்துவத்தின் இலக்குகளாகத்தான் இருக்கும். இந்த இலக்குகளை எய்தப் பெறுவதற்கும் இடர்களின் போது தங்களுக்கு ஏற்படும் இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் சமூக மட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்கான திட்டமிடலை சரியாகச் செய்யுமளவுக்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் பாரம்பரிய, மூத்த முன்மாதிரியான அனுபவங்களை படிப்பினைகளாகப் பயன்படுத்திக் கொண்டு செயல்படுவதே சிறந்தது.

என்ன நடந்தாலும் எதிர்பார்ப்புகளை மட்டும் வளர்த்துக் கொண்டு நிவாரணங்களை வேண்டிநிற்பது ஆக்கபூர்வமான அணுகுமுறையல்ல.

வரவிட்டுக் காப்போம் எனும் தற்போதைய நிலைப்பாட்டை வருமுன் காப்போம் என பிரகடனப்படுத்தி ஏதாவது எங்கிருந்தாவது நிவாரண-மாகக் கிடைக்கட்டும் என்ற மனோபாவத்தையும் மாற்றியமைப்பதே எதிர்கால இடர்முகாமைத்துவத்தின் சிறந்த தொனிப்பொருளாக கொள்ளப்படலாம்.

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இணைந்த...**

கவிதாவின் திருமண விழாவைக் காண வந்தவர்கள் அவளுடைய தந்தையின் மரண சடங்கை முடித்து விட்டுப் போக வேண்டிய நிலையினைக் கண்டு வருத்தமுற்றார்கள். இன்று கவிதாவின் தந்தை இறந்து ஒரு வருடம் கழிந்த நிலையில், தந்தையினுடைய இறப்பின் கவலையுடனும் தரனின் வருகையினையும் எதிர்பார்த்து இருந்த கவிதாவின் வீட்டின் முன்னே கார் ஒன்று வந்து நின்றதைக் கவிதா கவனித்தாள். ஆம். எதிர்பார்த்தபடியே தரனே லண்டனால் வந்தவுடன் கவிதாவைப் பார்ப்பதற்காக வீட்டிற்கு வந்திருந்தான். என்ன நடந்தது கவிதா என்று அவளைக் கேட்டான் தரன். அவள் அதற்கு ஒரு பதிலும் சொல்லாமல் அழுதுகொண்டிருந்தாள். சமையல் அறையில் இருந்து வந்த அவளது தாய் மரகதம் நடந்தவற்றையெல்லாம் கூறினாள். தயவுசெய்து தம்பி எங்களை மன்னித்து கவிதாவை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தரனிடம் கேட்டுக்கொண்டாள்.

அதற்கு தரன் கவிதாவைப் பார்த்து நீர் ஏன் அழுகிறீர் கவிதா, அழத் தேவையில்லை. எல்லாவற்றையும் மறந்து நாங்கள் புது வாழ்க்கையை தொடங்குவோம் என்று கூறினான் தரன். இருவருக்கும் தாய் மரகதத்தின் தலைமையில் இருவாரங்களின் பின்னர் முறைப்படி திருமணம் இனிதே நடைபெற்றது. மரகதம் திருமணக் கோலத்தில் கண்ட தனது பிள்ளையினை கண்டு ஆனந்தக் கண்ணீர் தழுவ கட்டியணைத்துக் கொண்டாள். கடல் கடந்து நீண்ட இடைவெ-ளியில் வாழ்ந்த இரு மனங்களும் சந்தோஷ வானில் சிறகடித்துப் பறந்தார்கள்.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**உள்ளூராட்சி...**

ஊழலுக்காக விரயமாகும் பணத்தை அபிவிருத்திக்காகச் செலவிடும் சந்தர்ப்பமும் கிட்டும்.

உறுப்பினர்களின் பக்கத்தில் பார்த்தால் ஒரு சிறந்த சமூகத்தலைவர்களாகவும் மக்களை வழி நடத்தும் தகுதி பெற்றவர்களாகவும் மக்களின் மனங்களில் அழியாத இடத்தைப் பதிக்க முடியும் என்றும் சாந்தி சச்சிதானந்தம் நம்பிக்கை வெளியிட்டார்.

பிரதேச சபையின் திட்டமிடல் குறிப்பிட்ட அந்த சமூகத்துடன் சேர்ந்து செய்யப்பட வேண்டும். எப்பொழுதும் உள்ளூர் சமூகம் ஒன்றுபட்டுப் பணியாற்றினால் உண்மையான தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு முன்னுரிமைப்படுத்திச் செய்யக்கூடியதாக இருக்கும், என்று கூறுகிறார் இலங்கை அபிவிருத்திக்கான உதவு ஊக்க மையத்தின் அதிகாரியும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நல்லாட்சிக்கும் பொறுப்புக் கூறலுக்குமான மற்றுமொரு பயிற்றுவிப்பாளர் ஏ.சொர்ணலிங்கம் அவர்கள்.

உள்ளூராட்சி சபைகளின் பொறுப்புக்கூறும் தன்மையை அந்தப் பிரதேச சபைகள்தான் உறுதிப்படுத்த வேண்டும். தற்பொழுது உள்ளூராட்சி சபைகளிலுள்ள சில அலுவலர்களே வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் கருமத்தில் ஈடுபடுகிறார்கள். இந்த விடயத்தில் சமூகம் தனது பங்களிப்பைச் செய்யும் பொழுது அந்த உள்ளீடுகளை சமூகமே வழங்க முடியும். ஆனால் தற்பொழுதுள்ள நிலைமை அதற்கு எதிர்மாறாக உள்ளது. பிரதேச மக்களுக்கு தமது உள்ளூராட்சி மன்றத்தில் அங்கு என்ன நடக்கிறது என்பதே தெரியாமலுள்ளது. சமூகம் அதனை எட்டிப்பார்ப்பதும் கிடையாது. இது மிகவும் துரதிர்ஷ்டமான நிலைமை என்று கவலை வெளியிட்ட திரு சொர்ணலிங்கம் அவர்கள்,

இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் அங்குள்ள உள்ளூர் சமூகங்கள்தான் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து நகர பிதாவுக்குச் சமர்ப்பிக்கிறார்கள். சமூகத்துக்குத்தான் அந்தந்தப் பகுதிகளிலுள்ள உண்மையான தேவைகளை அடையாளம் காணக்கூடிய ஆற்றலும் அறிவும் இருக்கிறது.

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் பற்றி அறிக்கையிடுவதிலும், கண்காணிப்பதிலும், மீளாய்வு செய்வதிலும், தொடர் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலும் சமூகம் ஈடுபாடுகாட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது தெரிவான புதிய உள்ளூராட்சி நிர்வாகத்தின் செயற்பாடுகள் ஏப்ரல் முதலாம் திகதி தொடங்கும் என்று உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

# இந்தவாரம் உங்கள் பலன்

(31.03.2011 தொடக்கம் 06.04.2011 வரை

ஆதினி

## மேடம்

மனத்திடத்துடன் முயற்சிசெய்து வெற்றி காண்பீர்கள். இருப்பினும் வாரம் முழுவதும் அலைச்சல் காணப்படும். மனமுறிவு, வேதனை, முரண்பாடுகள் குறுக்கிட்டாலும் தெளிவான மனத்துடன் இருப்பீர்கள். வரவில் தாமதம் உண்டாகும். அன்புள்ளவர்கள் நெருங்கிவருவார்கள். உதவிகள் பலவும் செய்வார்கள். குடும்பத்தில் குதூகலம் நிலவும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் நடந்து உங்களை மகிழ்ச்சிப்படுத்துவார்கள். மாணவர்களுக்கு உற்சாகம் உண்டாகும் வாரம். அரசியலில் உள்ளோர்க்குச் சிறுசிறு குழப்பங்கள் உண்டு. வியாபாரிகளும் விவசாயிகளும் இலாபமடைவர். அதிர்ஷ்டநாள் வியாழன்.

## இடபம்

எச்செலவையும் அவதானமாகவும் நிதானமாகவும் செய்து வெற்றி காண்பீர்கள். மனதிற்கு இனிமையான சம்பவங்கள் அடிக்கடி நடைபெறும். பணவரவில் தடைகளும், தாமதங்களும் உண்டானாலும், நண்பர்களின் உதவிகளுடன் சமாளித்துக்கொள்வீர்கள். திறமையால் மேலதிகாரிகளைக் கவர்ந்து எண்ணம் போல வாழ்வைத் திட்டமிடுவீர்கள். முன்பு பகை கொண்டவர்கள் மறைமுகமாகச் செயற்படுவர். மாணவர்கள் கூடிய கவனமெடுப்பர். அரசியலில் உள்ளோர் மதிக்கப்படுவர். வியாபாரிகளும் விவசாயிகளும் பெரும் இலாபமடைவர். அதிர்ஷ்ட நாள் திங்கள்.

## மிதுனம்

தொழிலில் சிக்கல்கல்ளும் தடைகளும் உண்டாகி மன வருத்தத்தைக் கொடுக்கும். மனதில் தேவையில்லாத அச்சம் தோன்றி மனக்குழப்பத்தை உண்டு பண்ணும். இருப்பினும் நண்பர்களின் உதவியால் அவற்றை சமாளித்து வெற்றிகாண்பீர்கள். வார நடுப்பகுதியிலிருந்து உற்சாகம் பிறக்கும். நினைத்த காரியங்கள் நினைத்தவாறு நடைபெறும். பணம் தாராளமாகப் புழங்கும். கடன் கொடுத்த பணம் வந்து சேரும். மாணவர்கள் வார முற்பகுதியில் சோம்பலடைவர். அரசியலில் உள்ளவர்கள் தாம் நினைத்ததைச் செய்து முடிக்கப் பெரும் பிரயத்தனப் படுவர். வியாபாரிகளும் விவசாயிகளும் பெரும் சிரமத்தின் பின் இலாபமடைவர். அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

## கடகம்

தொழிலில் அச்சநிலை காணப்படும். அடிக்கடி மனம் குழம்பி பயப்படக் காரியத்தைக் கெடுத்துக்கொள்வீர்கள். பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் நடந்து காரியங்களைச் செய்யப்பார்த்தும் முடியாது திண்டாடுவீர்கள். வரவுக்கதிகமான செலவுகள் அடிக்கடி வந்து மனதைக் குழப்பும். இருப்பினும் கற்றறிந்தவர்களின் உதவிகள் தாராளமாகக் கிடைக்கும். பணவரவில் சிக்கல்கள் இருந்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள். வாரபிற்பகுதியில் மகிழ்ச்சி உண்டாகும். மாணவர்களுக்குத் தடைகள் உண்டாகும். அரசியலில் உள்ளோர் குழப்பமடைவர். வியாபாரிகளும் விவசாயிகளும் அவதானமாக முதலீடு செய்யாவிட்டாலும் நட்டமுண்டாகும். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

## சிங்கம்

மனத்திடத்துடன் செயலாற்றி அனைத்துக் கருமங்களிலும் வெற்றி காண்பீர்கள் தொழில்நிலையில் மகிழ்ச்சியும் இலாபமும் உண்டாகும். மேலாளர்கள் நண்பர்களின் உதவி தாராளமாக உண்டு. பெரியோர்கள் மதிப்பார்கள். மதிப்பு உயரும். கௌரவமான மனிதராச் சமூகம் கணிக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் தோன்றினாலும் அது மனநிலையைப் பாதிக்காது. பணம் தாராளமாகப் புழங்கும். சுபச்செய்தி ஒன்று வந்து சேரும். மாணவர்கள் உயர் நிலையை அடைவர். அரசியலில் உள்ளோர் பாராட்டப்படுவர். வியாபாரிகளும் விவசாயிகளும் எண்ணம்போல முதலீடுகளைச் செய்து இலாபம் அடைவார்கள். அதிர்ஷ்டநாள் செவ்வாய்.

## கன்னி

பொறுமையுடனும் விவேகத்துடனும் நடந்து காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். இருப்பினும் செய் காரியங்களில் சில சிக்கல்கள் தோன்றி மறைந்து கொண்டிருக்கும். அயலவர்களுடன் நண்பர்களுடன் நிதானமாகப் பழகவும். முயற்சிகள் யாவும் நல்ல முறையில் நடைபெறும். மனத்திடத்துடன் நடந்து வெற்றி காண்பீர்கள். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். பணவரவில் தடங்கல் உண்டாகும். மாணவர்கள் பெரும் முயற்சி செய்து திறமையை வெளிப்படுத்துவர். அரசயலில் உள்ளோர்க்குச் சோதனையான வாரம். விவசாயிகளும் வியாபாரிகளும் கடும் முயற்சி கொள்வர். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

## துலாம்

துலாம்:–தொழில் நிலையில் அவதானமாக இருக்கவும். கவனக் குறைவால் பல சிக்கல்கள் பொருள் இழப்புக்கள் வரலாம். எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு உருவாகும். நிலுவையில் நின்று, வரச் சங்கடப்பட்ட வரவுகள் யாவும் வந்து சேரும், மனதில் நிம்மதியும், மகிழ்ச்சியும், நிரம்பியிருக்கும். குடும்பத்தில் மகிழ்வுடன் இருப்பார்கள். அவர்களது தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாதா வழியால் உதவிகள் அடிக்கடி கிடைக்கும். பிரிந்து சென்ற நண்பர்கள் வந்து சேர்வர். மாணவர்கள் மகிழ்வுடன் கற்பர். அரசியலில் உள்ளோர் தாம் நினைத்ததைச் செய்து முடிப்பர். விவசாயிகளும் வியாபாரிகளும் புதிய முதலீடுகளைச் செய்வர். அதிர்ஷ்ட நாள் புதன்

## விருச்சிகம்

தொழில் நிலையில் சற்றுக் குழப்பம் காணப்படும். பகைவர்கள் உங்களைப் புகழ்ந்து காரியம் பார்க்க எண்ணுவர். முன்பகையால் சில சில பிரச்சினைகள் உருவாகி மனநிம்மதியைக் கெடுக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் அவதிப்படுவீர்கள். தேக நலனில் அதிக அக்கறை எடுக்கவும். கடின உழைப்பின் மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள். வார இறுதியில் பணம் பொருள் வந்து சேர்ந்து மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொடுக்கும் மாணவர் குழப்பமடைந்தாலும் பாதிப்பு உண்டாகாது. அரசியலில் உள்ளோர் நிதானமாக நடக்கவும். விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பகைவரால் தொல்லை உண்டு. அதிர்ஷ்ட நாள் வியாழன்.

## தனுசு

தொழில் நிலையில் திறமையால் பலவற்றைச் சாதித்து வெற்றி காண்பீர்கள். பகைவரையும் அன்பால் அரவணைப்பீர்கள். பெரியவர்கள் உங்களை மதித்து உதவி செய்வார்கள். உங்களை மதித்து உதவி செய்வார்கள். புகழ் கௌரவம் என்பன உயரும். நண்பர்கள் உறவினர்கள் தாராளமாக உதவி செய்வர். பணம் தாராளமாகப் புழங்கும். நிறைவேறாது மனச் சங்கடத்தை உண்டாக்கிய நீண்டவொன்று எதிர்பாராதவாறு நிறைவேறி மனச்சந்தோஷத்தை உருவாக்கும். சிறப்பான வாரம் மாணவர்களின் கல்வி மேம்படும். அனைத்துத் துறையிலும் திறமைகாட்டுவர். அரசியலில் உள்ளோர் நினைத்ததைச் செய்வர். வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் பெரும் இலாபம் குவியும். அதிர்ஷ்ட நாள் திங்கள்.

## மகரம்

தொழில் நிலையில் அதிக செலவு உண்டாகும். எதிர்பாராத நஷ்டங்களும் உண்டாகும் மனதில் திட்டமிட்டவை நிறைவேறுவது கடினம் மனதைக் கவலை வாட்டிக் கொண்டிருக்கும். ஆசையால் அவதிப்படுவீர்கள். பல துறைகளிலும் ஆசை மேம்படும். நடக்கமுடியாதவற்றை எண்ணிக் கவலைப்படுவீர்கள். அதனால் மனதில் குழப்பமும் நிம்மதியின்மையும் தோன்றும். எனினும் வார இறுதியில் நிலைமை சீராகி இலாபம் கிடைக்கும். பொறுமையைக் கடைப்பிடித்தல் மூலம் காரியங்களைச் சாதிக்கலாம். வீண்பயம், ஆசைகளைத் தவிர்க்கவும், மாணவர்கள் சிரமப்படுவர். அரசியலில் உள்ளோர் அவதிப்படுவர். வியாபாரிகளும், விவசாயிகளும் பெரும் முதலீடு செய்ய விரும்பி அவதிப்படுவர். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

## கும்பம்

தொழில் வகையில் சகல கருமங்களும் வெற்றியாக முடியும். அதன் மூலம் பதவி உயர்வு, வருமானம் அதிகரிப்பு என்பன கிடைக்கும். மதிப்பு உயரும். பணம் பல வழிகளாலும வந்து மகிழ்ச்சியை அதிகரிக்கப் பண்ணும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். காணி பூமி வாங்க, வீடு கட்ட அல்லது திருத்த பலன் உண்டு. நினைத்தகாரியங்கள் நினைத்தவாறு நடைபெறும். வார இறுதியில் உடல் நலனில் அதிக அக்கறை காட்டவும். மாணவர்களின் கல்வியில் உயர்வு ஏற்படும். அரசியலில் உள்ளோர் நினைத்ததைச் சாதிப்பர். விவசாயிகளும், வியாபாரிகளும் பெரும் இலாபம் அடைவர். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

## மீனம்

தொழில் பதற்ற நிலை காணப்படும். தடுமாற்றமும் அவசரமும் காரியங்களைக் கெடுக்கும். உடல்நலம் பாதிக்கப்படையும் வாரம். வரவுக்கதிகமான செலவு உண்டாகும். நண்பர்கள் கூட பகைப்பர். பணத்திற்குத் தட்டுப்பாடேற்படும். பெரியவர்கள் வார இறுதியில் பாராட்டுவார்கள். குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் தோன்றி மன அமைதியைக் குலைக்கும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வார இறுதியில் சுபச் செய்தி ஒன்று வந்து சேரும். மாணவர்கள் பதற்றத்தால் அவதிப்படுவர். அரசியலில் உள்ளோரின் மனம் அல்லற்படும் வியாபாரிகளும் விவசாயிகளும் நிதானத்துடன் யோசித்து முதலீடு செய்யவும். அதிர்ஷ்ட நாள் புதன்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ! போனகிழமை சொன்னது போலை தேரடிச் சோமுவோடை சல்லாபிச்ச சங்கதிகளைச் சொல்லுவம் எண்டு பிளான் பண்ணிக் கொண்டிருக்க, லேட்டஸ்ட் சங்கதி ஒண்டு சிணுங்கிக் கொண்டிருக்குதுங்கோ. எப்பவுமே லேட்டஸான விஷயங்கள் சூடு-சுவை சுவாரசியமாய் இருக்கும் எண்டதால இப்ப அந்த விசயத்திற்கு வாறனுங்கோ.**

அதாகப்பட்டது என்ன வெண்டாப் பாருங்கோவ், போன மாசம் பூவுலக வாழ்க்கையை முடிச்சுக்கொண்டு பார்வதி அம்மாவின்ர அஸ்திக்கு மேல நாயைச் சுட்டுப்போட்டாச்சு. அஸ்தியை அசிங்கம் பண்ணியாச்சு, அப்பிடி, இப்பிடி எண்டு மீடியாக்களுக்கு நியூஸ் குடுக்கப் பட்டதுங்கோவ். ஏதாவது சூடான நியூஸ் கிடைச்சுதெண்டால், சென்ஷேனாய் இருக்கட்டும் எண்டு, ஆறஅமர விசாரிக்காமலுக்கு போட்டுத் தாக்கிற சில மீடியாக்களும் தங்கட கைவரிசையைக் காட்டியிருந்தவையுங்கோ.

இப்ப என்னெண்டால், பார்வதியம்மாவின், அஸ்தி இந்தியாவிற்குப் போய், எங்கட வைக்கோல் சாமி தலையில கடலில கலந்து விட்டிருக்கினம். முன்னம் அஸ்திக்கு அபச்சாரம் நடக்குதெண்டு பிரச்சாரம் பண்ணின மீடியாக்களும் (கப்சிப்) எண்டு இருக்கினம்.

ஆனாலும் பாருங்கோ நான் சில சந்தேகங்களைக் கிளியர் பண்ணியே ஆகோணுமுங்கோ. அதால சீமானைப் பிடிச்சுப் போட்டனுங்கோ...

**கா.பூ:-** ஹலோ சீமான் உங்கட அம்மாவின்ர பிதிர்க்கடன் எல்லாம் செய்து முடிச்சுப் போட்டியளோ.

**சீமான்:-** ஆமா. அண்ணன் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் அஸ்தி மிகவும் பத்திரமாகச் சேமித்து எடுத்து வரப்பட்டிருந்தது. அதனை அண்ணை வைக்கோல் சாமி போன்ற ஈழப்பிரச்சினையால் வயிறு கழுவி பிழைப்பு நடத்துகின்ற நடத்துகின்ற சிலருடன் சென்று சிறப்பாகச் செய்து முடித்துள்ளோம்.

**கா.பூ:-** அஸ்தி அசிங்கம் பண்ணப்பட்டதாகக் கூறப்பட்டதே!

**சீமான்:-** அசிங்கமா...? எனக்...கு... அப்ப....டி.. ஏதும்...?! (யோசிக்கிறார்)

**கா.பூ:-** நாயைச் சுட்டுப்போட்டதாக... (சீமான் குறுக்கிடுகிறார்)

**சீமான்:-** ஆமாம். நாயைச் சுட்டார்கள். என் வீரத்தாயினை அவமதிப்பதற்காக நாயைச் சுட்டு அஸ்தியின் மீது வீசி எறிந்தார்கள் படுபாதகர்கள். மனிதநேயமற்றவர்கள். அவர்களைப் பந்தாடாமல் இந்த சீமான் ஓயமாட்டான். (பொரிந்து தள்ளுகிறார்.)

**கா.பூ:-** (இடைமறித்து விட்டு) அப்பபடியானால் நாயின் அஸ்தியையும் சேமித்துத்தான் பிதிர்க்கடன் செய்திருக்கிறீர்களா?

**சீமான்:-** நாய்க்குப் பிதிர்க்கடன் செய்ய நாங்கள் நாய் வம்சமா? வீரமறவன் அண்ணை பிரபாகரனின் வீரவம்சம். அவரின் தாய்க்குத்தான் பிதிர்க்கடன் செய்தோம்.

**கா.பூ:-** அப்படியெண்டால் எங்கு நாயைச் சுட்டுப்போட்டார்கள்.

**சீமான்:-** எங்கள் அம்மாவின் அஸ்தியில்தான்...

**கா.பூ:-** அப்படியெண்டால் நீங்கள் பிதிர்க்கடன் செய்தது...

**சீமான்:-** (சற்றுக் குழப்பமடைந்து கோபமாக) அதுதான் இது. இதுதான் அது. இதுக்கும் மேல விளக்கம் வேணுமெண்டால் உந்தக் கதையைச் சோடிச்ச சிவாஜி லிங்கத்திட்டப் போய்க் கேளுங்கள். என் தலையை உருட்டாதீர்கள்.


**கா.பூ:-** ஓ.கே ஓ.கே... கூல் டவுன். இன்னுமொரு கேள்வி. அம்மா என்ன நினைச்சாவோ? என்ன சொல்ல விரும்பினாவோ தெரியாதெண்டு ஒப்பாரி வைச்சியள். அது எதையாவது கண்டுபிடிச்சியளோ.

**சீமான்:** ஹி...ஹி... நான் அடிச்ச ஜோக்குகளை நீங்களும் நம்பிட்டியள் போல இருக்கு. ஒருத்தர் மனசில இருக்கிற விசயங்களைக் கண்டு பிடிக்கிற ரலண்ட் இருந்தால் நான் எதுக்கு சும்மா கொடி பிடிச்சுக்கொண்டு திரியப்போறன். சாமியராகி, சம்பாதிச்சுப் போடுவன் எண்ட சிம்பிள் விஷயம் கூட விளங்காமல் இருக்கிறியளே.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# உலகை வியக்க வைத்தவர்கள்

## ஆகாயத்தில் பறந்த முதல்வர்




எந்தப் பலூனும் சுயேச்சையாக மனிதனோடு ஆகாயத்திலே போகக் கூடாது என்றுதான். ஆனால் பலூனோடு நீண்ட கயிற்றை இணைத்து, அக்கயிறு நம் இயக்கத்தில் இருக்குமானால் அந்தப் பலூனில் மனிதர் போகக் கூடாது என்று கூறவில்லை. ஆகவே..." தன்திட்டத்தை விளக்கினார் எட்டினி.

1783 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி பிலாட்ரே டி ரோஸியர் பலூனில் பறக்கும் முதல் மனிதராக அதில் ஏறினார். பலூன் கூடையில் ஏறி நின்ற ரோஸியர் கயிறு தாராளமாக வெகு நீளம் இருக்கட்டும் என்று கேட்டுக்கொண்டார் மான்கோல்.'.பியரிடம். கயிற்றோடு பிணைக்கப்பட்ட பலூனில், பல தடவைகள் ஆகாயத்திலே பறந்தார் டி ரோஸியார். சில முறை எட்டினியுமே ரோஸியரோடு பறந்தார். ஒருமுறை வாலிபப் பிரபு, மார்குவிஸ் டார்லண்டஸ் என்பவரும்- பறக்கும் பலூன் கூடையில் இடம்பெற்றார். அந்த அனுபவம் அந்தப் பிரபுவுக்கு மகத்தானதாக இருந்தது. கயிற்றோடு பலூன் இணைந்திருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை.



[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/124/NEWS/2010)



## கரீபியன் புயல்கள்

உலகக் கோப்பை வரலாற்றில் முதல் இரண்டு கோப்பைகளையும் தட்டிச் சென்றவர்கள் என்ற பழம்பெருமையினைத் தவிர சொல்லிக் கொள்ளும்படி அண்மைக்காலமாக எதையும் சாதிக்காத சோகத்துக்குரியவர்கள் கரீபியன் புயல்கள். உலகமே நடுங்கிய வேகப்பந்துவீச்சாளர்களையும், பந்துவீச்சாளர்களையே பதற வைத்த துடுப்பாட்ட ஜாம்பவான்களையும் கொண்டிருந்த இன்றைய நிலை பரிதாபம். விஸ்வரூபம் எடுத்திருக்கின்ற பாகிஸ்தானிடம் வாங்கிக் கட்டியதால் கால் இறுதியுடன் விடைபெற்றுள்ளனர்.



எப்படியாயினும் உலகக் கிண்ணத்தை தூக்கியே தீருவது என்று கொழும்பு வந்திருக்கிறார்கள் இந்திய சூரர்கள். எதிர்பார்ப்புக்கு ஏற்ற தரமானவர்கள்தான். பலமான துடுப்பாட்ட வரிசை உறுமிக் கொண்டு நிற்கிறது. ஆனால் என்ன செய்வது அந்தளவு உறுமல் பந்துவீச்சில் இல்லையென்பதும் கோட்டை விடுகின்ற களத்தடுப்பும் பலவீனமாகத்தான் இன்னும் இருக்கிறது. ஷகீர்கானுக்கு தரமான ஒத்துழைப்பை வழங்கக்கூடியவர்களை தேடிப் பிடிக்க முடியாதது இந்தியாவுக்கு பெரும் குறைதான்.



## கங்காருகள்

கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்களாகிய விளங்கிய அவுஸ்ரேலிய அணியினருக்கு 2011 ஆம் ஆண்டு உலகக் கோப்பை மிகவும் மோசமான முடிவுரையை எழுதியிருக்கிறது. தொடர்ந்து மூன்று முறை உலகக் கோப்பையை வென்றவர்கள் நான்காவது முறையாகவும் உலகக் கோப்பை தங்களுக்கென இறுமாப்பு கொண்டிருந்த வேளையில் இந்தியாவினால் தவிடுபொடியாக்கப்பட்டிருக்கின்றது.

அவுஸ்திரேலிய அணியின் முதுகெலும்பாக விளங்கிய ஷேர்ன் வோர்ன், ஜில்கிறிஸ்ட், ஹெய்டன்,சைமன்ஸ் என நட்சத்திர வீரர்கள் ஒவ்வொருவராக ஓய்வு பெற ஆரம்பித்தவுடனேயே அவுஸ்திரேலியாவின் அஸ்தமனம் ஆரம்பித்துவிட்டது என்றே கூற வேண்டும். இதன் அறிகுறியாகவே கடந்த வருடம் அவுஸ்திரேலியச் சுற்றுலாவை மேற்கொண்ட இலங்கை அணியினர், இந்திய அணியினர் அவுஸ்திரேலிய மண்ணில் வைத்து ஒரு நாள் போட்டித் தொடரில் அவுஸ்திரேலியர்களை புரட்டி எடுத்தனர். தொடர்ந்து சென்ற இங்கிலாந்தும் ஆஷஸ் தொடரில் இந்தக் கங்காருகளை இஷ்டத்துக்கு புரட்டி எடுத்தது. இங்கிலாந்தை எனினும் ஒரு நாள் தொடரை வெற்றி கொண்ட ஆறுதலோடு உலகக் கோப்பைக்கு வந்த அவுஸ்திரேலியர்களுக்கு இந்திய அணி முடிவுரையை எழுதியிருக்கிறது.

## இந்திய சூரர்கள்



சர்வதேச கிரிக்கெட் தடைக்குப் பின்னர் 1992 ஆம் ஆண்டு திறமை வாய்ந்த பல வீரர்களுடன் சர்வதேச அரங்கில் நுழைந்த தென்னாபிரிக்கச் சிங்கங்களுக்கும், துரதிர்ஷ்டத்துக்கும் இடையேயான பிணைப்பு யாராலும் பிரிக்க முடியாதது. என்னதான் சமத்தர்களாக இருந்தாலும் உலகக் கோப்பை என்று வந்துவிட்டால் துரதிர்ஷ்ட தேவதை தென்னாபிரிக்க வீரர்களின் தோளில் ஏறி உட்கார்ந்துவிடுவாள். இம்முறையும் அது தான் நடந்திருக்கிறது. உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளர்களை கொண்ட அணிகள் எட்ட முடியாத இமாலய இலக்குகளை நிர்ணயித்த போதெல்லாம் துரத்தியடித்தவர்கள் இப்பொழுது நியூஸிலாந்திடம் திணிறிப் போயுள்ளார்கள்.

## ஆபிரிக்க சிங்கங்கள்



## கறுப்புப் பூனைகள்

நியூசிலாந்தின் கறுப்புப் பூனைகள். அன்மைக்காலமாக குறிப்பிடத்தக்க வகையில் சாதிக்காது விட்டாலும் சாதிக்க முனைபவர்களுக்கு தலையிடியைக் கொடுக்கும் அளவிற்கு பலம் வாய்ந்த அணி. உலகத்தின் முதல் நிலை அணியிலிருந்து கடை நிலை அணிவரை நியூஸ்லாந்து அணியை எச்சரிக்கையுடனேயே பார்க்கின்றனர். எந்நேரத்திலும் விஸ்வரூபம் எடுத்து விளாசித் தள்ளுவார்கள் என்ற அச்சம் பரவலாகவே இருப்பது இவர்களின் மதிப்பை உயர்வாகவே வைத்திருக்கிறது.



1996 இல் உலகக் கோப்பையைத் தூக்கி கம்பீரமாய் நிமிர்ந்ததன் பின்னர் உலக அரங்கில் பேசப்படுபவர்கள். இம்முறையும் உலகக் கோப்பை கனவுடன் களமிறங்கியிருக்கின்றார்கள். நனவாகுவதற்கான வாய்ப்புகளும் பிரகாசமாகவே இருக்கிறது. பலமான பந்துவீச்சு வரிசை, துடிப்பான களத்தடுப்பு, இறுதி வரை சளைக்காமல் போராடும் ஓர்மம் இவைதான் இலங்கையர்களின் பலம். பலவீன-மாக சொல்லும் படி இல்லாத மத்திய வரிசைத் துடுப்பாட்டத்தை முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் ஈடுசெய்வார்களாயின் உலகக் கோப்பை இம்முறையும் நம்மவர்களுக்கே.

## நம்ம சிங்கங்கள்



## கிரிக்கெட்டின் தாயகம்

கிரிக்கெட்டின் தாயகம் தங்களுடையதென பெருமை பேசிக் கொள்கின்ற இங்கிலாந்து வீரர்களால் இதுவரை ஒரு தடவை கூட உலகக் கோப்பையைத் தொட்டுப் பார்க்க முடியவில்லை. உலகிற்கே கிரிக்கெற் கற்றுக் கொடுத்தவர்கள் இன்னும் கற்றுக் குட்டிகளாகவே இருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. ஆனால் அப்படியில்லை. சரித்திரப் புகழ்பெற்ற வெற்றிகளை இவர்களும் சொந்தமாக்கியிருக்கிறார்கள் உலகக் கோப்பையைத் தவிர...



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டீ.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மார்ச் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...

C/490

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna. (Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 17 வியாழக்கிழமை (31.03.2011) | பக்கங்கள் IV | ஓசை - 182

## - யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் -

# யாழ்.மாவட்டம் அதிசயிக்கத்தக்க வகையில் அபிவிருத்திகண்டு வருகிறது

### அமைச்சர் டக்ளஸிடம் நோர்வேத் தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் யாழ். மாவட்டம் அதிசயிக்கத்தக்க வகையில் அபிவிருத்தி கண்டு வருகின்றது என இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரல்ட்ஸ்ரட் தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள அமைச்சரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற கலை கலாசார விழாவில், தான் கலந்துகொண்டதாகவும் பல நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்ற பல்வேறு கலைநிகழ்வுகளில் யாழ்., வன்னி மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களுடனான கலைப்படைப்புக்களைத் தாம் மெய்மறந்து ரசித்ததாகவும் குறிப்பிட்ட நோர்வேத் தூதுவர், யாழ். பொது நூலகம் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் காணப்படுவதாகவும் தெரிவித்தார். (IV பக்கம் பார்க்க)

## கல்விமுறைமை நவீனமயப்படுத்தப்படவேண்டும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி முறைமை விரைவாக நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். சமூகப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறதெனவும் அவர் தெரிவித்தார்.

துபாயில் நடைபெற்ற "கல்வி உலகமயமாகிறது" எனும் தொனிப்பொருளிலான இடம்பெற்ற கலந்துரையாடலொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எல்லைக் கட்டுப்பாடுகளின்றிய கல்வி முறைமை எமக்குத் தெரிந்த பாரம்பரிய முறைமைக்கு அப்பால் சென்றுள்ளது. ஒவ்வொருவரையும் சமூகவியல், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் உள்ளடக்குவதில் கல்வி முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

## அகதி அந்தஸ்து கோரும் எண்ணிக்கை குறைவு ஐ.நா. அகதிகளுக்கான நிறுவனம் தகவல்

(ஜெனிவா)

இலங்கை உட்பட்ட நாடுகளில் இருந்து அகதிகளாக செல்வோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் பத்து வருடங்களுக்கு முன்பிருந்த அகதி அந்தஸ்து கோருவோரின் எண்ணிக்கை தற்போது அரைவாசியாக குறைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அறிக்கைப்படி கடந்த ஆண்டு 44 வளர்ச்சியடைந்த நாடுகளில் 358 ஆயிரத்து 800 பேர் அகதி அந்தஸ்தைக் கோரியுள்ளனர்.

இது 2001ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 42 வீத குறைவான எண்ணிக்கையாகும். இந்த எண்ணிக்கையில் சேர்பியர்களே முன்னிலை பெற்றுள்ளனர்.

## தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடித் தீர்வு காண வேண்டும்

### அமைச்சர் திஸ்ஸ வித்தாரண



(கொழும்பு)

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடித் தீர்வு காண வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ வித்தாரண வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் மேற்கொள்ளும் கலந்துரையாடல்களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் அரசாங்கத்துக்கு (iv பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழகம் நேற்று முதல் மூடப்பட்டது



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- வந்தாறுமூலைப் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்படுவதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விடுதியில் தங்கி இருந்த மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் பொலிஸார் தலையிட்டு தமிழ் மாணவர்கள் தாக்கியமையைக் கண்டித்து பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து மறு அறிவித்தல் வரும் வரை பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: இலங்கை கிரிக்கெட் (iv பக்கம் பார்க்க)


## முன்னாள் புலி உறுப்பினர்கள் 206 பேர் நாளை விடுதலை

(வவுனியா)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 206 பேர் நாளை வெள்ளிக்கிழமை விடுதலைசெய்யப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா நகரசபை கலாசாரமண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். மற்றும், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (39)

## யாழ். மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு நாம் அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்



### சர்வ மதக்குழுத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான வழிவகைகள் குறித்து சர்வமதக் குழுவினர் கொழும்பில் கூடி ஆராய்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு அரசின் மீது முழுமையான அழுத்தம் கொடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சர்வமதக் குழுத் தலைவர்களில் ஒருவரான கர்த்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சர்வமதக் குழுவினர் தமது விஜயத்தின் முடிவில் (iv பக்கம் பார்க்க)

# வேலையற்ற படித்த இளைஞர்கள், யுவதிகள் சுயதொழிலை மேற்கொள்ள முன்வரவேண்டும்

**ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்**



(யாழ்ப்பாணம்)

கல்வி கற்றுவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகள் சுயதொழிலினை மேற்கொள்ள முன்வர வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்டின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தையல் பயிற்சி நிலையங்களின் திறப்பு விழா நிகழ்விலும், வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமங்களில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமாக இச்சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளது.

படித்து விட்டு வேலை வாய்ப்பற்றிருக்கும் யுவதிகள் தையல் பயிற்சியைப் பெறுகின்ற போது சொந்தக் காலில் நின்று சுயதொழிலை மேற்கொள்ளக் கூடிய ஒரு சூழல் உருவாக்கப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இன்று யாழ் மாவட்டத்தில் படித்த இளைஞர் யுவதிகள் பலர் வேலை வாய்பற்று இருக்கின்றார்கள். அவர்கள் சொந்தக் காலில் நின்று சுயதொழிலை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

இந்தப் பிரதேசங்களின் இளைஞர் யுவதிகளுக்கான தகவல் தொடர்பாடல் கல்வியை மேம்படுத்துவதற்காக கணினிப் பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்டின் (உதயன்) தெரிவித்தார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இமையாணன் மேற்கு, கரணவாய் மேற்கு - வல்லியாவத்தை, கரணவாய் தெற்கு - வீரபதிராயன், அல்வாய் கிழக்கு - வட்டுவத்தை, துன்னாலை கிழக்கு ஆகிய இடங்களில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஐந்து தையல் பயிற்சி நிலையங்களின் திறப்பு விழாவும், வாழ்வாதார உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் சத்தியசீலன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பி.யின் வல்வெட்டித்துறை அமைப்பாளர் தெய்வேந்திரன், யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இருளில் மூழ்கும் குருநகர் றெக்கிளமேஷன் வீதி

(கொக்குவில்)

குருநகர் - றெக்கிளமேஷன் பகுதியிலுள்ள மின் குமிழ்கள் செயலிழந்து இருளில் மூழ்கி வருவதாக குடியிருப்பாளர் புகார் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்ததும், வந்து பொருத்திவிட்டுச சென்ற பின் மின்குமிழ்கள் மூன்று தினங்கள் மட்டுமே எரிந்தன.

அதன் பின் மின் குமிழ்களைக் கழற்றிச் சென்றவர்கள் மீளவும் பொருத்தாததால் இப்பகுதி இருளில் மூழ்கி வருகிறது.

இதனால், இருளில் வீதிகளில் நடமாடவும் தொழிலுக்கு வெளிக்கிட்டுச் செல்லும் வேளைகளிலும் இருட்டில் ஆட்களுடன் மோதிக் கொள்கின்ற அசௌகரியங்கள் ஏற்பட்டு வருகிறன.(68)

# குன்றும் குழியுமாகக் காணப்படும் குருநகர் இறங்குதுறை வீதி

(கொக்குவில்)

குருநகர் கடற்கரை வீதியால் இறங்குதுறைக்குப் போகும் வீதி பாவனைக்கு உதவாதவாறு வீதிக்குப் போடப்பட்ட கற்கள் கிளறப்பட்டு குன்றும் குழியுமாக இருந்து வருகிறது.

இதனால், இறங்குதுறைக்குச் செல்வோர், வாகனங்கள், குடியிருப்பாளர், மாணவ, மாணவிகள் எனப் பலதரப்பட்டவர்களும் தினமும் சொல்லொணா அவலத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

அனர்த்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகளை நெருங்கும் போதும் அனர்த்தங்களுக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்ட மேற்படி வீதி பல வருடங்களாகத் திருத்தப்படாமல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (68)

# யாழ். வந்த சர்வமதக்குழுவினர் பல்வேறு தரப்பைச் சந்தித்தனர்



(யாழ்ப்பாணம்)

தேசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தென்பகுதி சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து யாழ். பொம்மை வெளிப்பகுதி மக்களையும் வலி. வடக்குப் பகுதி மக்களையும் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்தனர். அத்துடன் யாழ். மக்களின் பிரச்சினைகள் குறித்து யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

சுமார் 21 பேர் உள்ளடக்கிய இச்சர்வமதக்குழுவில் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் கொஸ்தாவ, தர்மலங்காரத்தேரர், தெமட்டகொட சிவலிதேரர், பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக்குருக்கள், கல்முனை மௌலவி ஆதம்பாவா, கொழும்பு மறை மாவட்ட முன்னாள் பேராயர ஒஸ்வேஸ்ட் ஒவிஸ் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர். இவர்களுடன் யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் மற்றும் யாழ். சர்வ மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக இக்குழுவினர் யாழ். பொம்மை வெளிப் பகுதிகளில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களின் பகுதிகளுக்கும், நாவாந்துறைப் பகுதிக்கும் விஜயம் செய்து அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதன் பின்னர் இணுவில் பகுதிக்கு விஜயம் செய்து இணுவில் ரயில் நிலையத்தில் கடந்த 21 வருடங்களாக மீள்குடியமர்த்தப்படாமல் தங்கியுள்ள குடும்பங்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இம்மக்களது பிரச்சினைகள் குறித்து யாழ். பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அவர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின், மெதடிஸ்த திருச்சபையின் மண்டபத்தில் யாழ். மாவட்ட சர்வ மதத் தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் பங்கு பற்றினர்.

இக்கலந்துரையாடலில் யாழ். மக்களது பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து யாழ். சர்வ மதத் தலைவர்களால் தென்பகுதி சர்வமதத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. அத்துடன் தென்பகுதி சர்வமதத் தலைவர்களும் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (பா)

# உழவு இந்திய உரிமையாளர்களுக்கான கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி, கிளிநொச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்கட்டுமானப் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் பாரபட்சமின்றி தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும், மணல், கிரவல் போன்றவற்றை வழங்குவதற்கான போக்குவரத்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் தொடர்பாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் கலந்துகொள்கின்றார்.

எனவே, கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட உழவு இந்திய உரிமையாளர்கள் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# மாதாந்தக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்ட யாழ் மாநகர சபையின் மூன்றாவது மாதாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என மாநகர சபை செயலாளர் ரு. சத்தியானந்தன் அறிந்துள்ளார்.

இதன்படி 2011ஆம் ஆண்டுக்கான மூன்றாவது மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழம காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்துக்கு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.


**EDWARD MAKES**

G F M

**Omawater ஓமத்தீ நீர்**

வயிற்றில் காணும் வாய்வு, இரைச்சல், குத்து, எரிவு, பசியின்மை, மந்தம், கிரகணி, பூச்சிக்குத்து, பிரட்டு, வாந்தி, கிரந்தி முறுக்கு, கிரந்தி-வாய்வு, சளி, சுரம் குணமாகும்.

**THRES KOONTHAL TYLUM திரேஸ் கூந்தல் தைலம்**

Keeps the body Cool and gives the face Gracious Look.

எக்காலத்திலும் எவ்வயதிலும் குளிர்மை கொடுக்கும் அதிசயத் தைலம்

கேசத்திற்கு குளிர்ச்சி, மலர்ச்சி, அடர்த்தி, எழுச்சி, அழகு, மென்மை, வலிமை கொடுக்கவல்ல மிருதுவான நறுமணத் தைலம்.

முடி உதிர்வு, உடைவு, ஈர், பேன், முடி கொட்டல், பொடுகு போன்றவற்றைத் தவிர்க்க வல்லது.

**Gurusancheevi குரு சஞ்சீவி**

தலையிடி, தடிமன், முட்டு, இழுப்பு, மூச்சடைப்பு, சளி, சன்னி, சுரம், பல்வலி, பிடிப்பு, நோ, தெண்டல், வீக்கம், தசைப்பிடிப்பு, வலி, வேதனை போக்கி குணமளிக்க வல்லது.

Special Blam

Adderss:

**Dr.G.Edward**

63, Grusault Road,
Chundikuli, Jaffna.
021 222 8171

(C-605)



**சிறு விளம்பரம்**

**விற்பனைக்குண்டு**

Sharp குளிர்சாதனப்பெட்டி, 14" கலர் T.V (Panasonic) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

T.P - 0772575246 R/602


## சரியான விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பி பெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.

1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டித்தொடரில், தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?

பெயர்: ..............................

முகவரி : ..............................

விடைகள் : 01) ..............................

02) ..............................


உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

# இறுதிப் போட்டியில் இந்தியா



(மொகாலி)

பத்தாவது உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை 29 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இந்திய அணி, மூன்றாவது முறையாக உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மொகாலியில் நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் பாகிஸ்தான், இந்தியா அணிகள் மோதின.

இதன் ஆரம்ப நிகழ்வில் இந்தியா, பாகிஸ்தான் பிரதமர்களுடன், அகில இந்திய காங்., தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட பலரும் போட்டியை ரசித்தனர்.

பாகிஸ்தான் - இந்தியா அணிகளுக்கிடையிலான போட்டி என்பது பொதுவாகவே பரபரப்பாகவும், உணர்ச்சிகரமானதாகவும், ஆக்ரோசம் மிக்கதாகவும் அமைவது வழமை. அதிலும் உலகக் கிண்ணத் தொடர் எனில் அதைவிட பல மடங்கு அதிக எதிர்பார்ப்புகள் இருந்தது. இதில் இந்திய அணிக்குத் துடுப்பாட்டமும், பாகிஸ்தான் அணிக்குப் பந்துவீச்சும் பலமெனப் பலரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

உலகக் கிண்ணத் தொடரில் இது வரை நான்கு (1992, 1996, 1999, 2003) போட்டிகளில் இரு அணிகளும் மோதியுள்ளபோதிலும், அந்த நான்கு போட்டிகளிலும் இந்தியாவே வெற்றிபெற்றிருந்தது. இந்த ஐந்தாவது போட்டியில் இந்தியாவின் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பாகிஸ்தான் ஆடும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளாவிடினும், இப்போட்டியில் வெற்றிபெற்றால் போதும் என்ற நிலையே இரு அணிகளும் இருந்தது.





இந்திய அணிக்கு வழக்கம் போல் சேவாக் அதிரடித் தொடக்கம் கொடுத்தார். அவரது அதிரடி நீண்ட நேரம் நிலைக்கவில்லை. சச்சின், கம்பீர் இணை மிக நிதானமாக ஆடியபோதும், 27 ஓட்டங்களைப் பெற்றவேளை கம்பீர் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஹோலி, யுவராஜ்சிங் என அடுத்தடுத்து விக்கெட்டைப் பறிகொடுத்தனர். இந்த நிலையில் சச்சின், டோனி இணை மிக நிதானமாக ஓட்டங்களைச் சேகரித்தது. எனினும் இந்த இணையும் பிரிக்கப்பட்டது.

தொடர்ந்து களமிறங்கிய சுரேஷ் ரெய்னா துடுப்பாட்ட பவர்பிளேயைப் பயன்படுத்தி சிறப்பாக ஆடினார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சச்சின் 85, சேவாக் 38 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் ஆட்டமிழக்காது ரெய்னா 36 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வஹாப் றியஸ் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய பாகிஸ்தான் அணி, சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. இருப்பினும் சகிர்கான் பந்தில் கம்ரான் அக்மல் ஆட்டமிழந்தமையானது அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கையில் தளர்வு ஏற்பட்டது. ஓரளவுக்கு தாக்குப் பிடித்த ஹபீஸ் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மிஸ்பா -உல்-ஹக் இறுதி வரை நிதானமாக ஆடியபோதும் பின்வந்தவர்கள் அவருக்குப் பக்கபலமாக ஆடத் தவறியமையே அதன் தோல்வியாக அமைந்தது. இறுதியில் பாகிஸ்தான் அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியுது. போட்டியின் ஆட்ட நாயகனாக சச்சின் டெண்டுல்கர் தெரிவானார்.

இந்திய அணியின் வெற்றிக்கு களத்தடுப்பும், பந்து வீச்சும், பந்து வீச்சுப் பரிமாற்றும் மிகச் சிறப்பான முறையில் அமைந்தமையே முக்கிய காரணமாக இருந்தது.

இதேவேளை, வரும் 2ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இலங்கை, இந்திய அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினமுரசு பாகிஸ்தான் எதிர் இந்தியா SCORE CARD

மைதானம் : மொகாலி திகதி : 30-03-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி இந்தியா : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) வி. சேவாக் | lbw b வஹாப் றியாஸ் | 38 |
| 02) சச்சின் டெண்டுல்கர் | c அப்ரிடி b அஜ்மன் | 85 |
| 03) கௌதம் கம்பீர் | st கம்ரன் b மொகமட் ஹபீஸ் | 27 |
| 04) ஹோலி | c உமர் அக்மல்b வஹாப் றியாஸ் | 09 |
| 05) யுவராஜ்சிங் | b வஹாப் றியாஸ | 00 |
| 06) எம். டோனி | lbw b வஹாப் றியாஸ | 25 |
| 07) சுரேஷ் ரெய்னா | not out | 36 |
| 08) ஹர்பஜன்சிங் | st கம்ரன் b அஜ்மல் | 12 |
| 09) சகீர்கான் | c கம்ரன b வஹாப் றியாஸ | 09 |
| 10) ஏ. நெஹ்ரா | run out வஹாப் றியாஸ/கம்ரன் | 01 |
| 11) முனாப் பட்டேல் | not out | 00 |
| உதிரிகள் | (lb 8, w 8, nb2) | 18 |
| மொத்தம் | (9 w : 50 ஓவர்கள்) | 260 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) கம்ரன் அக்மல் | c யுவராஜ்சிங் b சகீர்கான் | 19 |
| 02) மொகமட் ஹபீஸ் | c டோனி b பட்டேல் | 43 |
| 03) அசாட் சபீக் | b யுவராஜ்சிங் | 30 |
| 04) யுனிஸ்கான் | c ரெய்னா b யுவராஜ்சிங் | 13 |
| 05) மிஸ்பா உல் ஹக் | c ஹோலி b சகீர்கான் | 56 |
| 06) உமர் அக்மல் | b ஹர்பஜன்சிங் | 29 |
| 07) அப்துல் ரசாக் | b பட்டேல் | 03 |
| 08) அப்ரிடி | c சேவாக் b ஹர்பஜன்சிங் | 19 |
| 09) வாஹப் றியாஸ் | c சச்சின் b நெஹ்ரா | 08 |
| 10) உமர் குல் | lbw b நெஹ்ரா | 02 |
| 11) அஜ்மல் | not out | 01 |
| உதிரிகள் | (w 8) | 08 |
| மொத்தம் | (all out :49.5 ஓவர்கள்) | 231 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| உமர் குல் | 08 | 69 | 00 |
| வஹாப் றியாஸ் | 10 | 46 | 05 |
| அஜ்மல் | 10 | 44 | 02 |
| அப்ரிடி | 10 | 45 | 00 |
| மொகமட் ஹபீஸ் | 10 | 34 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சகீர்கான் | 9.5 | 58 | 02 |
| நெஹ்ரா | 10 | 33 | 02 |
| முனாப் பட்டேல் | 10 | 40 | 02 |
| ஹர்பஜன்சிங் | 10 | 43 | 02 |
| யுவராஜ்சிங் | 10 | 57 | 02 |

29 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி. ஆட்டநாயகன் : சச்சின்

## தலைவராக கிளார்க்



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் புதிய தலைவராக மைக்கல் கிளார்க் தெரிவு செய்யப்பட்டார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையின் நேற்றைய கூட்டத்தில் இம்முடிவு அறிவிக்கப்பட்டது.

பத்தாவது உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டியில் தோல்வியடைந்து அவுஸ்ரேலிய அணி வெளியேறியது. இந்நிலையில் அணித் தலைவர் பதவியிலிருந்து பொண்டிங் விலகிக் கொண்டதைத் தொடர்ந்தே மைக்கல் கிளார்க் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த வாரம் பங்களாதேஷ் அணியுடன் நடைபெறவுள்ள போட்டித் தொருக்கு கிளார்க் தலைமையிலான அணி செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அனுசரணையாளர்: புதிய விேனா நகைமாடம்
அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணம் கொண்ட தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து
நிங்கள் விரும்பும் தினத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
இணை நிறுவனம்:
Mobile Plaza Phone Shop
மொபைல் போன்கள், உதிரிப்பாகங்கள் என்பனவற்றை மலிவாகவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடவேண்டி ஒரே இடம்
Mobile Plaza பிரதான வீதி, (HNB அருகில்) சங்கானை
புதிய விேனா நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கிக்கு அருகாமை)
T.P: 0776002588, 021 567 2588
(C/633)


# இந்தியப் பிரதமருடன் பாகிஸ்தான் பிரதமர்; ராஜீய நிகழ்வாக அவதானிகள் கணிப்பு

பாகிஸ்தான் பிரதமர் கிலானியுடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவும் பாகிஸ்தானும் விளையாடிய ஆட்டத்தை இருநாட்டு பிரதமர்களும் நேரடியாகப் பார்த்து ரசித்துள்ளனர்.

இரு நாடுகளுக்கிடையிலான போட்டி முக்கியமானதொரு போட்டி என்பதற்கு அப்பால் முக்கியமான ஒரு ராஜீய நிகழ்வாகவும் அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆட்டம் நடக்கும் மொகாலி மைதானத்திற்கு வந்த பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் பிரதமர் கிலானியும், இரு அணி வீரர்களுக்கும் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தனர். போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் இருவரும் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மும்பை தாஜ்ஹொட்டலில் 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கிடையிலான உறவுநிலை பாதிப்படைந்திருந்த நிலையில் இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்று இந்த ஆட்டத்தைப் பார்ப்பதற்காக பாகிஸ்தான் பிரதமர் இந்தியா வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மும்பையில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு தத்தமது நாடுகளுக்கு அதிகாரிகளை அனுமதிப்பதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவித்திருப்பாகவும் தெரிவிக்கப்படுகின்றது



# ஸ்ரீரங்கா எம்.பி. விபத்தில் சிக்கினார்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா நேற்று வாகன விபத்தொன்றில் சிக்கியதாக செட்டிக்குளம் வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர். அவா மன்னார் நோக்கி சென்றுகொண்டிருந்தபோது அவரின் வாகனம் பாதையைவிட்டு விலகிச் சரிந்ததாக தெரிவிக்கப் படுகிறது. சிறு காயங்களுக்குள்ளான ஜே.ஸ்ரீரங்கா எம்.பி. செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதேவேளை அவரின் உதவியாளர் ஒருவர் அனுராதபுரம் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




# ஐ.தே.க. உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நடைபெற்றது இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர்களான கரு ஜெயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கனடா செல்ல முற்பட்டோர் தாய்லாந்தில் தடுத்து வைப்பு

(பாங்கொக்)

சட்டவிரோதமான முறையில் கனடா செல்வதற்காக கடத்தல் காரர்களுக்கு பணம் கொடுத்து வெளிநாடு செல்ல முற்பட்டவர்களில் இலங்கையைச் சேர்ந்த பெருமளவானோர் தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தாய்லாந்து ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவை நோக்கி செல்வதற்காக சட்ட விரோதமான முறையில் கப்பல் மூலமாகச் சென்ற இலங்கையர்களில் பெருமளவானோர் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் உள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்களின் பிள்ளைகளில் அதிலும் இலங்கைச் சிறார்களே தடுப்பு முகாம் வாயிலில் உணவுகளுடன் காத்திருப்பதாக பாங்கொக் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

140 பேர் ஒரே முகாமுக்குள் அடைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை வெளியாட்கள் அருகில் சென்று பார்க்க முடியாது என்றும் 20 மீற்றர் தூரத்தில் இருந்தே பார்க்க முடியும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# காணாமல் போன முன்னாள் புலி உறுப்பினர் கைது

(வவுனியா)

சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு காணாமல் போன முன்னாள் புலி உறுப்பினர் நேற்றுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா - மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த வை.குணசீலன் (வயது-26)என்ற முன்னாள் புலிஉறுப்பினர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் அங்கிருந்து காணாமல் போனதைஅடுத்து பொலிஸாரின் தீவிர தேடுதலின் பின் அவர் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். (39)

## கிழக்குப்பல்கலை...

அணியினர் நேற்றுமுன்தினம் வெற்றி பெற்றதையடுத்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன மாணவர்கள் தமிழ் மாணவர்களின் விடுதிக்குள் புகுந்து வெடிகளைக் கொளுத்திப் போட்டுள்ளதுடன், மதுபோதையில் தமிழ் மாணவர்களை தாக்கியுள்ளனர் இந்த மாணவர்களுக்கிடையிலான பிரச்சினை சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டபின்னர், விடுதியில் நுழைந்த பொலிஸார் அங்கிருந்த தமிழ் மாணவர்கள் தாக்கி உள்ளனர் .இதனால நேற்று காலை மாணவர்கள் தாக்குதல் நடத்திய பொலிசாரை கண்டித்தும் பல்கலைக்கழகத்தைவிட்டு பொலிஸார் வெளியேற வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பல்கலைக் கழக நிர்வாகத்தினர் உடனடியாக பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தி காலவரையறை அன்றி பல்கலைக் கழகத்தை மூடுவதாக அறிவித்துள்ளனர்.

## யாழ். மாவட்டம்...

அத்துடன் 2007ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளையே காணக்கூடியதாக இருந்ததாகவும், தற்போது சிறந்ததொரு சாதகமான சூழ்நிலையில் அம்மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள வசந்தபுரம் பகுதியில் 6 லட்சம் ரூபா பெறுமதியான 50 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கும் தவிர முன்பள்ளி பொதுமண்டபம் உள்ளிட்ட பொது வசதிகளை செய்து கொடுப்பதற்கும் நோர்வே அரசு தயாராக இருப்பதாகவும் அமைச்சருடனான கலந்துரையாலின் போது நோர்வே தூதுவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு உள்ளிட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை மேம்படுத்தல், தனியார் துறையினை விருத்தி செய்தல், இசைத் தொடர்பு பாரம்பரியத்தைப் பேணுதல், வடகடல் (சீநோர்) தொழிற்சாலையை நவீன மயப்படுத்தல் மற்றும் கண்ணிவெடிகள் அகற்றுதல் போன்ற பல்வேறு செயற்திட்டங்களுக்கும் நோர்வே அரசு முழுமையான பங்களிப்பை வழங்கும் எனவும் நோர்வே தூதுவர் உறுதியளித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்ப்பு அரசியலால் அல்லாமல், இணக்க அரசியல் மூலமே தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், அழிவு யுத்தத்தினால் அவலப்பட்ட எமது மக்களின் துன்ப துயரங்களுக்கு தீர்வு காணப்படும் அதேவேளை, அபிவிருத்திப் பணிகளையும் அரசியல் பலத்திற்கு ஏற்றவாறு முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் வாழைச் செய்கையை அபிவிருத்தி செய்வது மட்டுமன்றி யு.என்.டி.பியின் நிதியுதவியுடன் இந்தியாவின் துறைசார்ந்த தொழிற்துறை நிபுணர்களூடாக வாழைநார் சார்ந்த பல்வேறு சுயதொழில் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், வட பகுதியில் தமது பூர்வீக இடங்களில் முஸ்லிம் மக்கள் மீளக்குடியேறுவதற்கு தாம் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் வட பகுதியிலும் ஏனைய சில இடங்களிலும் அவ்வப்போது நடைபெறுகின்ற சமூக விரோத செயல்களுக்கு எமது கட்சியின் பெயரை சில ஊடகங்கள் தமது சுயலாப அரசியலுக்காக பயன்படுத்தி வருகின்றமை வேதனை அளிப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டம் மற்றும் அவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் உள்ளிட்ட உதவிகளை நோர்வே அரசு தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும் எனவும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தித்துறை அமைச்சர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் போது மேற்குறிப்பிட்ட உதவித் திட்டங்களைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் நோர்வே தூதுவரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் நோர்வே தூதுவரின் மேலதிக செயலாளர் சொன்றே பியோட் வீற் மற்றும் அமைச்சரின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## தமிழ் மக்கள்...

வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் அனைத்து மக்களினதும் அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நலனோம்புகை மற்றும் அபிவிருத்தித்திட்டங்களுக்குத் தமது கட்சி தொடர்ந்தும் ஆதரவை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். மக்களின்...

யாழ். மெதடிஸ்த திருச்சபை மண்டபத்தில் யாழ். மாவட்ட சர்வமதத் தலைவர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சர்வமதக் குழு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தது யாழ்ப்பாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான மக்களின் நிலைமை தொடர்பாக தகவல்களைத் திரட்டும் முகமாகவே. நாங்கள் இங்குள்ள மக்களின் கஷ்ட நிலையினை நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். இம்மக்களின் பிரச்சினைகள் குறித்து யாழ். சர்வமதத் தலைவர்களுடன் கலந்துரையாடி அவர்களது கருத்துக்களையும் பெற்றுள்ளோம். யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியுடனான சந்திப்பு ஒன்றையும் மேற்கொண்டுள்ளோம்.

இவ் விஜயத்தின்போது உங்களுடைய கருத்துக்களை நாங்கள் உரியவர்களிடம் எடுத்துச் செல்வோம். அதன் மூலம் இம்மக்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம். எனவே, தென்பகுதி சர்வமதத் தலைவர்களின் பின்னால் யாழ். சர்வமதத் தலைவர்களும் இணைந்து செயற்படவேண்டும். இதன் மூலம் தான் தீர்க்கமான முடிவினை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். (பா)


உங்கள் பெறுமதியான வாடிக்கையாளரை மகிழ்ச்சிப்படுத்த விரும்புகிறீர்களா?
உங்கள் நிறுவனத்தின் பெயரை ஏதாவது பொருளின் ஊடாக விளம்பரப்படுத்த விரும்புகிறீர்களா?
புதிய வாடிக்கையாளரை நீங்கள் பெற விரும்புகிறீர்களா?
பெறுமதியான வாடிக்கையாரின் உறவை நீண்டகாலம் பேண விரும்புகிறீர்களா?

JOJENI Business Gifts

அப்படியாயின் பல முன்னணி நிறுவனங்களிற்கு சேவைவழங்கிய எம்முடன் தொடர்பு கொள்ளவும்
எமது தயாரிப்புகளில் சில
with Logo Printing
T-Shait, Caps,Bage, Clocks, Pens... மேலும் பல (More than 500) Items Available

JoJeni
Business Gift
36/7c Averiwattaird
wattala.
T.P.: 0115610951
Fax: 0716-123127
Email: Jojeni@sltnet.lk
web: www.jojeni.net
(R/023)


இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.